எங்கெங்கு காணினும் சக்தி தீபாவளி

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு இதழ்

பன்மொழி மின்னிதழ்

மலர்–1 இதழ்–5 நிறுவனர் & தலைமை பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஜனவரி 2025

உன் தேநீரைச் சுவைத்துப் பருகு

செ. ராஜேஸ்வரி

மூக்கம்மாள்

சம்சுல் ஹுதா பானு

தமிழகத்துப் பெண் அரசிகள்

பஞ்சவன் மாதேவியார்

மா. மாரிராஜன்

அம்மாவின் காதல்

த. ஜான்சிபால்ராஜ்

A Poem by Agar Fathin

டெஸ்டிமோனா

தெ. வினோதினி

கோயில் தேவரடியார்களின் தொடர் போராட்டம்

முனைவர். எஸ். சாந்தினி பீ

'வளரி' திரைப்பட இயக்குனர்

மிருத்திகா

நேர்காணல்

மலர்-1 இதழ்-5 ஜனவரி

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

1	பஞ்சவன் மாதேவியார் - மா. மாரிராஜன்	1
2	தாய்வீடு (கவிதை) - இரா. மனோகரன்	5
3	மூக்கம்மாள் (கதை) - சம்சுல் ஹுதா பானு	6
4	'மிருத்திகா''வளரி' திரைப்பட இயக்குனர் நேர்காணல்	12
5	கலையரசி கவிதை - முகநூல் பதிவு	18
6	சத்யபிரபா கவிதை	19
7	அந்தக் கால மனிதர்கள் (கதை) - மலர்மதி	20
8	பாபு (கவிதை) – இரம்யா நடராஜன்	22
9	சிறகை விரி! (கவிதை) - பாவலர் மு.செந்தாமரை	29
10	மருந்து அரைக்கும் அம்மிகள்	30
11	கூலானிபட்டி கன்னிமார் கோயில்	32
12	மதுரை வைகைப்படித்துறை - ப. தேவி அறிவு செல்வம்	35
13	ரோசாப்பார்க்ஸ் - அ. திவ்யகுமாரி கண்ணம்மா	38
14	சாவி கொடுக்கப்படும் பொம்மை தானே பெண் (மொ.பெ.கவிதை) மலையாளக்கவிஞர் பத்மதாஸ்/ தமிழில் அதிரன்	46
15	தமிழ்ப்புலவர்கள் கோட்டோவியம் - இங்கர்சால், நார்வே	47
16	எஸ். புனிதா, அவர்களின் கவிதைகள்	48
17	அம்மாவின் காதல் (கதை) - த. ஜான்சி பால்ராஜ்	49
18	முட்டித் தழுவும் இளவேனில் – முத்தமிழ் விரும்பி	58
19	புதையல் (நாவல்) - கவிஞர் மாலதி இராமலிங்கம்	59
20	A poem by Agar Fathin	63
21	சுருங்கிய மனம் - சசிகலா விஸ்வநாதன்	65
22	கோயில் தேவரடியார்களின் தொடர் போராட்டம் - முனைவர். எஸ். சாந்தினி பீ	67
23	சுவடுகள் (கவிதை) – அதிரன்	70
24	ஜாய் ஹர்ஜோ - கவிஞர் கனிமொழி(வெர்ஜீனியா)	71
25	வட இந்தியாவில் வைணவத் திருத்தலங்கள் - நா. காளிதாசம்மாள்	75
26	தாய்மையைப் போற்றிடு! - அன்பு ஜெயா	90
27	கிம்பளம் !!! (கதை) - பாரதிராஜன் (ரங்கராஜன்)	91
28	உன் தேநீரைச் சுவைத்துப் பருகு (மொ.பெ.கவிதை) - செ. ராஜேஸ்வரி	92
29	நீ எனக்குத் தேவை! (மொ.பெ.கவிதை) - செ. ராஜேஸ்வரி	93
30	அழியாச் சித்திரம் - கு. ப. சேது அம்மாள்	94
31	டெஸ்டிமோனா - தெ. வினோதினி	103
32	கவிஞர் ராஜி வாஞ்சி (நேர்காணல்) -மேனகா நரேஷ் (நியூ ஜெர்சி)	108
33	'நினைவுகளைச் சுமந்தபடி...'- முனைவர் ஜ. ஜான்சிராணி	118

தமிழகத்துப் பெண் அரசிகள்

பஞ்சவன் மாதேவியார்

மா. மாரிராஜன்

"பஞ்சவன் மாதேவியார்"

தமிழக வரலாற்றில் சோழர்களின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

9 ஆம் நூற்றாண்டு முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை நீடித்த பிற்காலச் சோழர் காலம் தமிழக வரலாற்றின் பொற்காலம் என்று ஆய்வாளர்கள் அழைக்கின்றனர்.

பிற்காலச் சோழப்பேரரசர்களில் பெரும்புகழ் பெற்றவர் இராஜராஜசோழன் ஆவார். இராஜராஜசோழனின் தேவியர்களுள் ஒருவர்தான் பஞ்சவன் மாதேவியார். ஆட்சியிலும் அதிகாரத்திலும் பெண்களுக்கும் பெரும்பங்குண்டு என்பது சோழநாட்டு நியதியாகும்.

சோழப்பேரரசிகளான இராஜராஜசோழரின் பாட்டிசெம்பியன் மாதேவி,...

இராஜராஜசோழரின் அக்கா குந்தவை நாச்சியார் ....

இராஜராஜசோழரின் பட்டத்தரசியான

தந்திசத்திவிடங்கி அம்மையார்...

இவர்கள் வரிசையில் ..

இராஜராஜசோழரின் மற்றொரு தேவியரான பஞ்சவன்மாதேவியாரும் பேராளுமை மிக்கவர்.

அரசியர்களின் பணி அந்தப்புரத்தில் மட்டுமே என்னும் வழக்கம் தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லை. அனைத்துப் பெண்ணரசிகளும் அரசர்களுக்கு நிகராக வலம் வந்தார்கள். அரசியலிலும் நிர்வாகத்திலும் பங்குகொண்டார்கள். மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள். அரசன் கோவில் கட்டுவதைப்போலவே அரசிகளும் கோவில் கட்டினார்கள். பஞ்சவன்மாதேவியாரும் அரசனுக்கு இணையாக அறப்பணிகள் பல செய்தார்.

சேரவம்சத்தைச் சேர்ந்த பழுவேட்டரையரின் மகள்தான் பஞ்சவன்மாதேவியார். பழுவேட்டரையர்கள் சோழப்பேரசின் குறுநில மன்னர்கள். திருச்சிமாவட்டம் உடையார்குடி தாலுகாவில் உள்ள பழுவூர் என்னும் பகுதியை ஆட்சி செய்தவர்கள். சோழப்பேரரசுக்கு பெரும் பக்கபலமாக இருந்தவர்கள்.

பஞ்சவன்மாதேவிச்சரர்.

பழுவூர் கோவிலில் உள்ள ஒரு கல்வெட்டு செய்தி இதை உறுதி செய்கிறது. இராஜராஜசோழரின் 27 ஆம் ஆண்டு கல்வெட்டு இது. இக்கல்வெட்டில் இவர்...

"பழுவூர் தேவனாரின் திருமகள்"

என்று பஞ்சவன்மாதேவியாரைக் குறிப்பிடுகிறது.

இராஜராஜ சோழர் பிறந்த தினம் சதய நட்சத்திர நாள். பஞ்சவன் மாதேவியாரின் பிறந்த தினமும் அதே சதய நாள்தான்.

திருப்புகழூர் கோவிலில் ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்வெட்டுச் செய்தியில் இராஜராஜனும் அவரது தேவி பஞ்சவன் மாதேவியரும் பிறந்த தினமான சதய நட்சத்திர நாளான்று விழாவாகக் கொண்டாடப்பட்டு பல்வேறு அறப்பணிகள் தொடர்ந்து நடந்தன.



"ஸ்ரீராஜராஜதேவர் மஹாதேவியார் நம்பிராட்டியார் நக்கன் தில்லையழகியான ஸ்ரீபஞ்சவன்மஹாதேவியார் தாமும் ஸ்ரீராஜராஜதேவரும் பிறந்தருளின திருநாள் சதயத்தோறும் திருவிழா "

என்ற கல்வெட்டுச் செய்தியின் மூலம் தெரியவருகிறது.

இக்கல்வெட்டில் பஞ்சவன் மாதேவியார் நக்கன் தில்லையழகி என்று அழைக்கப்படுவதால் இவர் ஒரு ஆடற்மகளிர் என்று தெரியவருகிறது. இறைவன் முன் நடனமாடும் ஒரு தேவரடியார் பெண் என்றும் உறுதியாகிறது.மிகப்பெரும் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் மகளும் பேரரசர் ஒருவரின் தேவியுமான பஞ்சவன் மாதேவியார் ஒரு தளிச்சேரிப் பெண்ணாக தேவரடியாராகவும் இருந்துள்ளார். இராஜராஜசோழரின் ஆட்சி நிர்வாகத்தில் மிகப்பெரும் பங்கெடுத்துப் பணியாற்றினார். தஞ்சை பெரியகோவில் கட்டுமானத்தில் இவரது பங்கும் அலாதியான ஒன்று. பல்வேறு கோவில்களுக்கு நிவந்தமும் குடிமக்களின் நலனுக்கான அறப்பணிகளும் ஏராளமாக செய்தவர் ஆவார்.

தனக்குப் பிறக்காத தனது கணவரின் மகனும் பட்டத்து இளவரசனுமான இராஜேந்திரனை சிறுவயது முதல் வளர்த்துவர் இவரேயாவார். பெரும்புகழ் பெற்ற கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழரின் சிற்றன்னை பஞ்சவன் மாதேவியாவார். இராஜேந்திரன் தனது சிற்றன்னை பஞ்சவன்மாதேலியார் இறந்த இடத்தில் ஒரு பள்ளிப்படை கோவில் கட்டியுள்ளார்.

சிற்றன்னை ஒருவருக்கு பேரரசன் ஒருவர் பள்ளிப்படை எழுப்பியது அவர்கள் இருவருக்கும் இருந்த அதீத அன்பின் வெளிப்பாடு என்று அறிஞர்கள் நெகிழ்ச்சியாகப் பதிவு செய்கின்றனர். இன்றைய கும்பகோணம் பழையாரை நகரம் வரலாற்று சிறப்புவாய்ந்த ஒரு ஊர். சோழ அரசகுடும்பத்தினர் இறுதிவரை வாழ்ந்த இடம் இதுவாகும். சோழன்மாளிகை என்றே இன்றும்

பள்ளிப்படைக் கல்வெட்டு.

அழைக்கப்படுகிறது. இவ்வூருக்கு முடிகொண்ட சோழபுரம் என்ற ஒரு பெயரும் உண்டு.

இவ்வூரில்தான் பஞ்சவன்மாதேவியார் நிறைவாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். இவ்வூரில்தான் தனது சிற்றன்னைக்கு பள்ளிப்படை கோவில் கட்டினார் இராஜேந்திரச் சோழன்.

கோவிலில் காணப்படும் கல்வெட்டு வாசகம்..

"பழயாறையான முடிகொண்ட சோழபுரத்து பள்ளிப்படையான பஞ்சவன் மாதேவிச்சரம்"

இக்கோவிலானது தனது சின்னம்மா பிறந்த குலமான பழுவூர் கலைப்பாணியில் கட்டப்பட்டது. இக்கோவில் கருவறையின் அர்த்தமண்டபத்தில் உள்ள நந்தியும் கல்தூணும் பழுவேட்டரையர்களின் கலைவடிவமாகும். இதே அமைப்பு அம்மையார் பிறந்த பழுவூரிலும் காணப்படுகிறது. தன் சிற்றம்மை பிறந்த ஊரின்

கலைத்தன்மையை அவர் நினைவுக்கோவிலிலும் அமைத்து அவருக்கான இறுதி அஞ்சலியை செலுத்துகிறார் பேரரசர் இராஜேந்திரச்சோழர்.

வரலாற்றுப் பெண்ணரசிகளில் தனக்கானத் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளவர்தான் பஞ்சவன்மாதேவியார்.

(புகைப்படம் - Incredible vellore இணையப்பக்கம்.)

தாய்வீடு

மணமாகிப் பிரிந்து போன
சகோதரிகள்
ஊர்த் திருவிழாவிற்கு
பிறந்த வீட்டிற்கு வந்து,
கூடிக்கிடந்த பின்
புறப்பட்டுப் போனதும்,
வெறுமையில் விம்முகிறது
தாய்வீடு.

சூல் ஆடு அடித்து,
பரிவேட்டை முடித்து,
பிடாரியுடன் ஊர்சுற்றி
தாய்வீட்டில் தங்கிய
செல்லம்மா காளி,
கோயிலுக்குத் திரும்புகையில்,
வாடிக்கிடக்கின்றன மலர்மாலைகள்.

- இரா. மனோகரன்

மூக்கம்மாள்

சம்சுல் ஹூதா பானு

மார்கழி மாதக் குளிர் தனது இத்துப்போன போர்வைக்குள் புகுந்து தன்னை ஆட்டிப் படைத்தாலும், சுகமான தூக்கம் வண்ணான் பொதி மூட்டை போல மூக்கம்மாளை அழுத்தியது. மெதுவாக விடியலை ஆரம்பிங்க ‘‘சூரியனே’’- என மனதுக்குள் சொல்லியவாறு தன்னை மரவட்டை போல சுருட்டிக் கொண்டு சுகமான தூக்கத்தை மூக்கம்மா தொடர்ந்தாள்.

குளிரின் தழுவலும், அழுத்தமான தூக்கத்தின் சுகமும் ‘‘அல்லாஹ் அக்பர் அல்லாஹ்’’-என்ற, பள்ளி வாசலில் ராகத்தோடு ஓதும் அதிகாலைத் தொழுகையின் பாங்கின் ஒலி மூக்கம்மாவின் காதுகளில் இறங்கியபோது அம்மாடியோவ்••• இம்மாந்தேரம் ஆயிருச்சா•••எனப் பதறியபடி எழுந்த மூக்கம்மாவின் வேகத்தால், அவள் போர்த்தியிருந்த துப்பட்டி டர்•••எனக் கிழிந்தது.

கிழிந்த துப்பட்டியை மெல்லிய இருட்டில் பார்த்தவள், இதுக்கு ஆயுசு இப்பம் முடியாது, அடுத்த வருஷக் குளிருக்கும் இந்தத் துப்பட்டிதேன் என மெல்லமாகப் பேசியவாறு படுக்கையை சுருட்டி எரவாரக் கம்பியில் சொருகி வைத்துவிட்டு காட்டுக் கருவை மரங்களுக்குள் இருட்டில் நுழைந்து வெளியே போய் விட்டு வந்து, தனது வீட்டு நெரசலுக்குள் நுழைந்து பல்லை வெளக்கி, கை, கால், மூஞ்சியைக் கழுவி குளிரில் நடுங்கிய கை, கால்களைத் துடைத்து, ஒரு குடம் தண்ணியை இடுப்பில் ஏந்திக் கொண்டு புள்ளையார் கோவிலை நோக்கி ஓட்டமும், நடையுமாகப் போய்ச் சேர்ந்தாள்.

கோவில் வாசலைக் கூட்டிப், பெருக்கி- கொண்டுப் போன தண்ணியை சளக்..சளகெனத் தெளிக்க ஆரம்பித்தவளுக்கு, அரசமரத்தடி சருகுகளின் சத்தம் சரக், சரகெனக் கேட்டபோது••• தனது பார்வையை திருப்பியவளின் கண்களில்

பாண்டி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தவள், ‘‘தெனசரி முந்துறவள் நாந்தேன்’’ என்றாள் மெல்லிய குரலில்.

இந்த பாண்டியைப் பார்க்கனுமுனா, முந்தித்தேனே வரனும்... எனப் போற, போக்கில் கூறியவாறு... இசைத் தட்டைச் சுழல விடுவதற்க்கான வேலையை ஆரம்பித்தபோது குளிர் காற்றோடு சர்க்கரை பொங்கலின் வாசமும், விபூதி, சந்தனத்தின் சுகந்த வாசமும் வந்து இருவரின் மூக்கை அடைந்தபோது அங்கு மூர்த்தி பூசாரி கையில் தூக்குச் சட்டியுடன் கோவிலை நெருங்கியிருந்தார்.

‘‘சாமி...கும்புடுறோம்’’ என்ற கோரசான குரலை ஏற்றுக் கொண்ட அர்த்தத்துடன் தலையை தாழ்த்தி நிமிர்ந்த மூர்த்தி பூசாரி அந்தச் சின்னப் புள்ளையார் கோவிலின் இரும்புக் கேட்டைத் திறந்து உள் நுழைந்து தனது பணிகளை ஆரம்பித்தபோது ‘‘விநாயகனே வினை தீர்ப்பவனே, வேழ முகத்தோனே ஞான முதல்வனே’’ என்ற மூலப்பொருளான விநாயகரின் பாடல் தெய்வீகக் குரலோன் சீர்காழி கோவிந்த ராஜனின் குரலில் கணீர் என ஒலிக்க மார்கழிப்பணியை மீறிய சுறு, சுறுப்பு அந்தச் சுற்றுப்புறத்தையே சூழ, ஐயப்பன் கோவிலுக்கு மாலைபோட்ட சாமிகள் வர ஆரம்பித்தனர்.

இசை மனிதனை ஆற்றுப் படுத்தும் வல்லமை கொண்டது என்றாலும், தெய்வீகக் குரலில் ஆன்மீகத்தின் சாரத்தை பாடலாக காற்றின் அலைகளில் மிதந்து காதுகளைத் தழுவி, இதயத்தில் இறங்கி ‘‘அப்பனே! விநாயகா! இன்றைய பொழுதை நல்ல பொழுதாக்கப்பா!!’’.. எனச் சொல்ல வைக்கும்

கோவிலின் வெளி வேலைகளை முடித்த மூக்கம்மா கிளம்ப எத்தனித்தபோது அவளின் முதுகின் பின்னால் ஒரு குறு,குறுப்பு மயிர் கூடச்சசெறியச் செய்தபோது, வெடுக்கெனத் திரும்பியவளின் கண்களோடு, இசைத் தட்டின் அருகேயிருந்த பாண்டியின் பார்வையோடு மோதியது. மூக்கம்மாவின் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்த உணர்வு, என்ன மூக்கம்மா அசையாம நிக்கிறே, இந்தா வந்து பிரசாதத்தை வாங்கிட்டுப் போ என மூர்த்தி ஐயரின் குரலைக் கேட்டு இயல்பு நிலைக்குத் திரும்பியவள் மீண்டும் பாண்டியின் மீது ஒரு அழுத்தமான பார்வையை வீசிவிட்டு, பிரசாதத்தை வாங்கிக் கொண்டு துள்ளலுடன் வண்ணார் தெரு நோக்கி நடந்தாள்.



‘‘மாதங்களின் நான் மார்கழி’’- என்கிறான் கண்ணன். மார்கழி மாதத்தின் பசுஞ்சாணி உருண்டைகளில் சொருகப்பட்ட பூசணிப்பூ வீட்டுக்கு, வீடு வாசலில் பார்ப்பது, மார்கழி மாதத்தின் அழகு. மார்கழியின் அதிகாலை ஆன்மீகம், குளிருடன் இறைவனை வணங்கும் காலைப் பொழுது, வயல்களில் விளைந்து நிற்கும் பால் பிடித்த கதிர்கள், புற்களின் மீது உருண்டு நிற்கும் பனித்துளிகள். சூரியனைக் கண்டதும் வெட்கத்தால் புல்லிருந்து உருகி ஓடும் அழகு மார்கழி மாதத்தின் அற்புதம்.

மண் கோட்டையுடன், ஓட்டுச்சாப்பு இறக்கிய வீட்டில் அடுப்பு இருந்த பகுதி ஓலை வேய்ந்து, குளிக்க. கால், முகம் கழுவ தென்னந்தட்டி நெரசல் இருக்கும். வாசலில் வெள்ளாவி அடுப்பு இருக்கும் தனது வீட்டை மூக்கம்மா சொர்க்கமாகக் கருதுவாள். தனது வீட்டிற்க்குள் பாண்டியின் காதல் நினைவுகளோடு, துள்ளளோடு நுழைந்தவளுக்கு மூக்கம்மாவின் அப்பு இரண்டு கஞ்சித் தூக்குடனும், தயாராகக் கட்டி வைக்கப்பட்டிருந்த அழுக்குத் துணிகளின் பொதி மூட்டைகளுடனும் ஊருணிக்கு வண்ணாந்துறைக்குப் போகத்

தயாராக இருப்பதைப் பார்த்தவளுக்கு, ஆத்தா தனது சிறு வயதில் புள்ளைப் பெறமுடியாம, ஜன்னிக் கண்டு நெறை சூழியாச் செத்துப் போனாலும், ஆத்தாவின் இடத்திலிருந்து தனக்கான அத்தனையும் பார்த்துக் கொள்ளும் தனது அப்பு சொக்கப்பனைக் கண்டு தான் தொன்னையில் கொண்டு வந்த பிரசாதத்தை நீட்டி, அப்போய், எடுத்துக்கப்போய் என்றவள், கலியாணம் முடிச்சு நாம் புருஷன் வீடு போனால் என் அப்புவை யாரு புள்ளையாரப்பா பாத்துக்குவா என மனதுக்குள் கேட்டாலும், என்னோட அப்புவை எங்கூடவே வச்சுக்குற புருஷன் கெடைப்பானா?..என நினைத்து பாண்டியின் உருவம் அவளையறியாது மனதில் வந்து நின்றபோது, ‘‘எங்காதலுக்கு கண்ணில்லை’’-என்ற குற்ற உணர்வு மூக்கம்மாளுக்கு உணர்த்தியது. ஊரின் எல்லையில் காலணியில குடியிருக்குற செருப்புத் தக்கிற செம்பனோட மகன் பாண்டியை இந்தப் பொல்லா மனசு நெனக்கிதே! போன வருஷ மார்கழியில புள்ளையார் கோவிலுக்கு ரேடியாப்பொட்டியில பாட்டுப் போட வந்தவனைப் பார்த்த கணத்துல பாண்டி மூக்கம்மா மனசுல வந்து உட்கார்ந்துட்டான். பாண்டிக்கும் மூக்கம்மாவை புடிச்சு இருந்தாலும், கண்களின் பார்வைகளாலேயே மட்டும் காதல் பேசியவன், இந்த மார்கழியில் ஜாடையாகப் பேச ஆரம்பித்துள்ளான். குற்ற உணர்வில் குறுகினாலும், அதைமீறி காதலுணர்வு மூக்கம்மா மனசுல பொங்கியெழத்தான் செய்தது.

ஏய்••• மூக்கம்மா பிரசாதத்தை எடுத்துக்குட்டேன், அசையாம என்ன நிக்கிறவ. போ, போ,போயி ஆத்மனாதபுள்ள ஐயா அவுக துணி ஒவர் மண்ணுல ஆத்தி, சோடாவுல முக்கி. வெள்ளாவி அடுப்புல அடுக்கி அடுப்பைப் பத்த வைச்சு- வெள்ளாவி போட்டதும்••• அதையெல்லாம் பொதியாக் கட்டி கழுதைல ஏத்தி ஊருணி வந்து சேரு. நான் நம்ம ரெண்டு பேரு கஞ்சித் தூக்கோட, பொதிமூட்டைகளை கழுதையில ஏத்திகிட்டு தோள்ல ஒரு பொதியச் சொமந்து போயி துவைக்கிறேன்.

ஏத்தாவ்•••நீ வாறபோது நீலப் பொடிய எடுத்தாந்துரு, வெள்ளாவியில வச்ச வெள்ளத் துணிகளுக்கு நீலம் போட்டு அலசனும் என்ற படி

ஹேய்...ஹேய்....எனப் பொதி மூட்டையுடன் கழுதையைப் பத்திக் கொண்டே நடந்தார் சொக்கப்பன் ஊருணி வண்ணாந்துறைக்கு.

தனது அப்பு போனதும் வெள்ளாவி வச்சு துணிய கழுதையில ஏத்தி, மற்றொறு அழுக்குத் துணிப் பொதியை எடுத்து ஊருணி கிளம்பிச் சென்ற மூக்கம்மா, தனது அப்புவோடு தனது சொந்தங்களும் துவைத்துக் கொண்டிருக்க தானும் துணிகளைத் துவைக்க ஆரம்பித்தாள். ஏப்பா, சொக்கப்பா கனி ராவுத்தரய்யா வூட்டுல கல்யாணத்துக்கு பந்தலுல வேட்டி கட்டுறபோது சொல்லு ஆளுக்கு நாலு வேட்டியத் தாறோம் என்ற ராசய்யாவிடம் சரி...சரி... வாங்கிக்கிறேன். கலியாணத்தன்னைக்கிக் காலையில கனி ராவுத்தரையா வீட்டுல கலியாணப் பந்திச் சோத்துக்கு ஆடு அறுப்பாக, மொத ஆடு ஆறுத்ததும் வண்ணானுக்கு அந்த ஆட்டுத் தலையக் குடுப்பாக, வெள்ளன வெடுக்குனு போயி வாங்கியாறனும்.

சலவைக்கித் துணி போடுற வீட்டுக்குள்ள தார, வருஷ வருமுடி நெல்லு, கேப்பை,குருதாலி, சோளந்தேன் நம்ம வகுத்துப் பாட்டுக்கு. இதுல வண்ணாத்தி சோறு ராவுல குடுப்பாக, எம் மக மூக்கம்மாவை வண்ணாத்தி சோறு வாங்கியான்னா போவுதுல்ல என்ற சொக்கப்பனின் புலம்பலக் கேட்ட ராசய்யா, உம் மவள காலா, காலத்துல கட்டிக் குடுக்குற வழியப் பாரு, கோவில் வாசலைக் கூட்டி, தண்ணித் தெளிக்க அதிகாலையில எதுக்கு அனுப்புறே?... ஆத்தா இல்லாத புள்ளப்பா உன் மவ, என்ற ராசய்யாவின் குரல் தனது காதுகளிலும்

விழுந்து அந்தப் பேச்சை கேட்டு ‘‘சுருக்’’ கென முள் தைத்தது போல மூக்கம்மா விதிர்த்து, பின் இயல்பு நிலைக்கு திரும்பினாள்.

தனக்குள் வேர்விட்டு, இப்பொழுது இலைவிட்ட காதலை வளர்ப்பதா? அழிப்பதா?.. என்ற வேதனையோடு அலசிய துணிகளைக் காய வைக்கப் போனவளுக்கு கொஞ்ச தூரத்தில் மரத்தில் சாய்ந்தபடி, தன்னைப் பார்ப்பது பாண்டிதான் என்பதை உறுதி செய்து, வெட்கம் மேலிட்டாலும் ஏதோ ஒன்று••• அனிச்சையாய் அவளின் வெட்கத்தை அழித்துச் சென்றது. தனது முகத்தை வண்ணான் துறைப்பக்கம் திரும்பியவளுக்கு தனக்காகவே வாழும் அப்பு சொக்கப்பன் துவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவள் இரு தலைக்கொள்ளி எறும்பானாள்.

தாலி கழுத்தில் ஏறுவது கூடத் தெரியாத உணர்வில் தாலியை தனதாக்கிக் கொண்ட மூக்கம்மா, ராசய்யாவின் மருகளாகியிருந்தாள்.’’பாண்டி’’- மூக்கம்மாவின் மனதில் முளைத்த இடத்திலேயே கருகியிருந்தான். ராசய்யாவுக்கு வண்ணார் தெருவில் சொக்கப்பனின் வீடும் சொந்தமாகிப் போனது. சொக்கப்பனின் ஓரே மகள் மூக்கம்மா, சொக்கப்பனுக்கு அடுத்து ராசய்யாவின் மகனுக்குத்தானே சொக்கப்பன் வீடு.

பெண் தன்னை தன் உணர்வுகளை தனக்குள் அழித்து, பிறருக்காக சமூகத்துக்காகவே வாழ்பவள், வாழ வேண்டியவள்.

(முற்றும்)

'மிருத்திகா' நேர்காணல்



'வளரி' பட இயக்குனர்

உங்கள் ஆரம்பக் கல்வி, சொந்த ஊர்:

நான் பிறந்து வளர்ந்தது கோயமுத்தூரில் தான். நான்கு பள்ளிகளில் படித்துவிட்டு PSG Arts ல் எனது பட்டப்படிப்பை தொடர்ந்தேன்...

திரைத்துறை ஈடுபாடு எப்படி உண்டானது?

நான் சிறு பிள்ளையாக இருக்கும்போது ஞாயிற்றுக்கிழமை dhoordharshan சேனலலில் A to Z வரிசைப்படி ஒவ்வொரு மொழியிலும் படம் ஒளிபரப்புவார்கள்... அப்படி பிளாக் and வைட்டில் Bengali, Kannada, Marathi, Oriya, என படங்கள் பார்த்தது இன்னும் நினைவிருக்கிறது. திரையரங்கு என்று நான் முதன்முதலில் சென்றது எனது பாட்டியுடன் தான். நான் பள்ளிக்கு போகும் முன்னரே என்னை COURSE ல் சேர்த்துவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும். அப்படி இரண்டரை வயதில் என்னையும் என் மாமா மகனையும் பாட்டி "கந்தர்வ கன்னி" படத்திற்கு அழைத்துச் சென்றார். நான் பார்க்க பயப்பட்டதும் இன்று முதன் முதலில் ஒரு horror-thriller படம் நான் இயக்கியுள்ளது விந்தை தான்! எனது தந்தைக்கு திரைப்படம் என்பதே பிடிக்காது, எங்களை சினிமாவிற்கு அழைத்துப் போனதும் இல்லை. ஆனால் அம்மாவிற்கு சினிமா பார்ப்பது பிடிக்கும். பெரும்பாலும் இந்தச் சிறுமியை அழைத்துக் கொண்டு அண்ணாமலை, ஹம் ஹெய்ன் ரஹி ப்யார் கே, பாஷா, கல் நாயக், மணிச்சித்ரதாழே, திருடா திருடா, என சென்றுள்ளார். இவையெல்லாம் ஈர்த்துவிட்டதா என்னவோ ஆறாம் வகுப்பு படிக்கும் போது ஒரு

முறை தொலைக்காட்சியில் ரங்கீளா படம் பார்த்து முடித்ததும் சொன்னேன் "நான் இயக்குனர் தான் ஆவேன் என்று."

இத்துறையில் பெண்கள் சந்திக்கும் சவால்கள் எவை

நிறைய உள்ளன. அடிப்படை பெண்களுக்கு fitness உம் அழகும் தான், ஒரு film technician ஆக இருக்கும் போது வெய்யிலில் காய தயாராக இருக்க வேண்டும், இரவு கண்விழித்து பகலில் தூங்கும் nightshift duty அல்ல, இரவும் பகலும் விதித்திருக்க நேரிடும், வார விடுமுறை, பண்டிகை விடுமுறை அமைவது எல்லாம் இல்லை ஆதலால் dress maatravo ஏன் துவைத்து அல்லது துவக்கப் போட்டு காய வைக்க கூட இயலாமல் போகும், ஹேர் கலர் செய்ய முடியாது, ஹேர் straightening செய்ய தவறவிடும் ஆக என்னதான் தேவதை தோற்றம் கொண்டிருந்தாலும் ஒரு project துவங்கி அதை முடிக்கும் வரை அழகு கவர்ச்சி என அடிப்படை தோற்றம்

எதையும் பராமரிக்க, பாதுகாக்க இயலாது. தூக்கமும் இன்றி காலை முதல் மாலை வரை வெயிலில் நின்று உழைக்கும் போது சரி production சாப்பாட்டாலும் சரி weight போட நேரிடும். இது தான் direction, art மற்றும் camera team இன் அடையாளம். பெண்கள் location க்கு போனால் கழிவறை பிரச்சனைகள் வரும். நான் உதவி இயக்குனராக பணி புரிந்த போது என்னதான் ஹீரோயின் நட்புடன் இருந்தாலும் அவர்களின் caravan use செய்ய மாட்டேன் அது மரியாதை மட்டுமல்ல அவர்கள் hygeineக்கு மதிப்பளிக்கும் ஒரு பண்பு... so 7 மணி நேரம் முதல் 10 மணி நேரம் வரையில் பாத்ரூம் போகாமல் பணியாற்ற நேரிடும். என் முதல் படத்திற்கு வேல செய்யும் போது "மாட்டான் குப்பம்" எனும் location தான். ஒரு வாரம் போயிற்று costume designer வந்து "இங்கு restroom எங்கு உள்ளது?" என கேட்ட போது தான் நான் அட ஆமா கழிவறை எங்கே என தேடினேன். இது பெண்களுக்கு முக்கியமான நாட்களில் இடையூறாக அமையும். இன்று வரும் genZ மக்கள் இயக்குனர் கேரவனை பட ஒளிப்பதிவாளர் கேரவனை தாங்காமல் பயன்படுத்தி கொள்வது

உண்டு. இப்படியிருக்க ஒரு மகளாகவோ, sagodhari யாகவோ, மனைவியாகவோ, தாயாகவோ, வீட்டிற்கு போய் சமைத்து போட முடியாது, சமைத்துக் கொள்ளவும் முடியாது.

மற்ற வேலைகளை போல் நேரம் காலம் என இல்லாததால் இரவு இரண்டிற்கு வீடு திரும்புவோம், காலை 6.30க்கு வீடு திரும்புவோம் சிலமுறை இரவு 8க்கு போவோம் இதனால் சில குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் யாரேனும் வீட்டில் அல்லது வீட்டருகே இருந்தால் தேவையற்ற அனுமானகங்களை தாங்க வேண்டி வரும். இவை தினசரி சந்திக்க நேரும் physical challenges என்றால் mental challenges தனி ஆண்களாக இருப்பின் குடும்பம் இல்லாவிட்டால் நண்பர்கள் இருப்பர் எந்த நேரமும் சந்தித்து மகிழலாம். நாம் குடும்பத்தை miss seivom, அவர்கள் தாயிடம் sagodhariyidam, மனைவியிடம் மகளிடம் என பொறுப்புகளை ஒப்படைத்து சம்பாதிக்க உழைக்க என எளிதில் கிளம்பிடாலாம் சத்யராஜ் சார் படத்தில் வரும் வசனம் போல் அந்த சகோதரி , தாய், மனைவி, மகளே நாம் தான் என்றால் அவ்ளோ தான்!

இதில் வீடும் office உள்ள ஊரில் இல்லாவிடின், கேட்கவே வேண்டாம். ஆம் தங்க இடம் கிடைக்காது. நான் சென்னை முழுக்க ஒரு கட்டத்தில் ladies hostel தேடினேன் warden வாயைப் பிழந்து tv பார்த்துக் கொண்டு இருப்பாள் ஆனால் திரை உலகில் வேலை பார்கிறேன் என்றால் அந்த ஒரு காரணத்திற்காக தங்க இடம் தர மறுப்பர். இது மதிப்பிற்குரிய கவிப்பேரரசு அவர்களுக்கு தெரியுமா என தெரியாது 12 வருடத்திற்கு முன் அவர் நடத்தும் ladies hostelக்கு சென்ற போதும் அந்த warden பெண்மணி cinema காரர்களுக்கு இல்லை என்று ஆணித்தனமாக முகத்தில் அடித்தார் போல்

மறுத்துவிட்டார். அவ்வளவு ஏன் ஒரு வீடு வாடகைக்கு குடும்பத்தினர் எடுத்தாலும் கூட அதில் ஒருவர் சினிமாவில் இருக்கிறார் என்றால் வீடு தரமாட்டார்கள். அதிலும் அவர் பெண் என்றால் வீடு இல்லை என்பதை வெட்கமே இன்றி வழிந்து cinema வில் நடிக்க, நடிகர்களைப் பார்க்க வாய்ப்புகள் கேட்டு பிறகு வீடு தவறுவதில்லை என கூச்சமின்றி சொல்வார்கள். ஆண்களுக்கு இணையாக என்றெல்லாம் சொல்கிறார்கள், ஆணாகவே ஏன் அதற்கும் மேலாகவே போய் உழைக்க வேண்டும் இங்கு.

வளரி உருவான காரணம்

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நான் சுனிதா கிருஷ்ணன் அவர்களின் இன்டர்நேஷனல் உரை ஒன்றை பார்த்துக் கொண்டிருதேன் அப்போது தான் முதல் முதலில் பிஞ்சு குழந்தைகள் எவ்வாறு வன்கொடுமைக்கு உள்ளாகின்றனர் என்னும் விவரம் தெரிந்தது . . . ஆண் குழந்தைகள் எவ்வாறு சீரழிக்கப் படுகின்றனர் என்னும் தகவலையும் கண்டேன்.

எல்லாமே மிகவும் வேதனையில் ஆழ்த்தியது . . தொடர்ந்து வந்த வருடங்களில் குழந்தைகள் மீதான குற்றங்கள் சமூகத்தில் அதிகரிப்பதை கவனித்தேன் எல்லாரும் பெண் குழந்தைகளுக்கு என்ன கற்று தர வேண்டும் ஆண் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று தான் propaganda செய்தனரே தவிர குழந்தைகளில் ஆண் பெண் என்ற வித்யாசம் இல்லை என்பதை மறந்துவிட்டனர். அதை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை வரவேண்டும் என எண்ணினேன்.

ஏன் திகில் வகை கதை ?

சொல்ல வேண்டிய கருத்தினை தேர்ந்தெடுத்தாகிவிட்டது. அதை எப்படி சொல்வது என யோசித்தேன். எப்படிச் சொன்னால் அது விரைவில் சென்றடையும் என்பதுவே இங்கு முக்கியம். அதுவும் பெரியவர்கள் மட்டும் பார்த்தால் போதாது பிள்ளைகளும் பார்க்க வேண்டும் என்பதில் தீவிரமாய் இருந்தேன். ஆகா, எல்லா தரப்பு மக்களையும் கவர்ந்து இழுப்பது திகில் தானே, அதுதான் நான் அந்த genre தேர்ந்தெடுக்க காரணம்.

வளரி பெயர் காரணம் ?

தமிழ் ஆகட்டும் தெலுங்கு ஹிந்தி மலையாளம் ஆகட்டும் நம் இந்திய மொழி படங்கள் அனைத்தும் ஆங்கில வார்த்தைகளையே தலைப்பாக கொண்டு வெளிவருகிறது, என் இத்தனை மொழிகள் இருந்தும் நாம் நம் நாட்டின் உள்ளே இருக்கும் வார்த்தைகளை வேறு மொழி படத்திற்கு பயன்படுத்த கூடாது என தோன்றியது. அதுதானே நம் சுதந்திர தலைவர்களுக்கு செய்யும் ஒரு சிறு மரியாதை அங்கீகாரம், அது தானே தேசிய ஒருமைப்பாடு வளர முதல் அடியாக இருக்க முடியும் என தோன்றியது. தமிழ் மீதுள்ள பற்றும் நன்றியும் காரணமாக அர்த்தமுள்ள படத்தில் வரும் அந்த ஆயுதத்தின் பெயரையே திரைப்படத்திற்கு வைக்க விரும்பினேன், தயாரிப்பாலும் பெரிய மனதோடு மொழி பேதமை பார்க்காமல் ஒப்புக் கொண்டார். நாம் என்ன செய்கிறோமோ அதை யாரும் பார்க்கவில்லை என நினைத்தாலும் அந்த செயல் நமக்கே திரும்ப வரும் என்பதுதான் உலக

இப்படத்தில் வரும் திகில் பங்களாவின் பெயரும் வளரி? எவ்வாறு?

உண்மை, அது தான் திரைக்கதையும் கூட, பூமராங் என்கிறோம் ஆனால் அதற்கு அப்பன் ஒருவன் நம் நாட்டில் இருந்தான் அவன் பெயர் "வளரி" என நினைவூட்டத் தோன்றியது. பூமராங் கொல்லாது, பெரிதாக தாகவும் தாக்காது, ஆனால் வளரி அப்படியல்ல தாக்கும், கொல்ல வேண்டும் என்றால் கொன்றும் தரும் அற்புத ஆயுதம், இது கொலைகள் அடங்கிய திகில் படம் அல்லவா, பின் வளரியை தவிர என்ன வார்த்தை பொருந்தியிருக்க முடியும்! ஆம். இந்த

படத்தில் முக்கியமான கதாபாத்திரங்கள் நடிகர்கள் அல்லாமல் பல உள்ளன. அவை, பொருட்களே. உதாரணத்திற்கு வீடு. மற்றவை, வளரி, இரும்பு பெட்டி, துருப் பிடித்த மோதிரம், மைகோதி போன்றவை. இதில் இவை அனைத்தையும் connect செய்யும் கதாநாயகியின் வீட்டிற்கு "வளரி இல்லம்" என பெயரிட்டேன். அவள் ஒரு சிலம்ப வீராங்கனை, தெலுங்கரை மணம் முடித்த சிவகங்கை வம்சத்தில் இருந்து வந்துள்ள ஒரு தமிழ் பெண், ஆதலால் அவள் மட்டுமே தேர்ச்சி பெற்ற ஒரு பிரத்யேக பொருளை தானே பெயராக சூட்டுவாள், இல்லத்தரசி அவள் ஆட்சி நடக்க வேண்டிய இடம் ஆயிற்றே!

வெளிய செல்லும் குடும்ப உறுப்பினர் வீடு திரும்பியே ஆக வேண்டும் என்ற நோக்கத்தில் வைக்கப்பட்ட பெயர் தான் என்றாலும், அதன் போலவே கொலைகாரியாய் வெளியேறிய ஹீரோயின் திவ்யாவை பதினைந்து ஆண்டுகளுக்கு பின்னரும் திரும்ப இழுத்து வருகின்றதே. ஆதலால் தான் "வளரி"

சிவகங்கை பெண்ணாக கதாநாயகியின் பூர்வீகத்தை தேர்ந்தெடுத்ததன் காரணம் ?

கதைக்கு ஒரு வீர தாய் தேவைப்படுகிறாள், அவளின் தாய் மொழி தமிழ் என யோசித்தாகிவிட்டது. அவள் வளரி என்னும் இந்தியர்களே சரியாக அறியாத ஆயுதத்தில் தேர்ச்சி பெற்றவள் என கூறவருகிறேன். வீர வரலாறுக்காக மட்டும் இன்றி, வளரி ஆயுதத்தின் பூர்வீகத்திற்காகவே சிவகங்கையை தேர்ந்தெடுத்தேன். வளரி கள்ளர் மறவர் சமூகத்தில் புழக்கத்தில் இருக்கும் ஒரு கருவி. மருத சகோதரர்கள் காலத்தில் பிரபலமாய் இருந்தது. முக்கியமாக 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிழவன் சேதுபதி என்று அழைக்கப்படும் ராஜா விஜய ரகுநாத சேதுபதி மன்னர் தான் வளரி வீசுவதற்கு பெயர் போனவர். இப்படி சிவகங்கையை ரித்திகா சிங்க் இன் பிறந்த ஊராக பயன்படுத்த பல காரணங்கள் இருக்கிறது.

கலையரசி கவிதை

- முகநூல் பதிவு

ஆண் வாரிசு பெறுவதில் தோல்வியுற்று...
நலிந்து கிடக்கிறாள் அடுத்தடுத்து
"பெண் குழந்தைகளை ஈன்றவள்"

ஆண்மை குறைந்தவனை மணந்து...
அரச மரத்தில் தொட்டில் கட்டுகிறாள்...
"மலடி"

மங்கல காரியங்களில் மேடையில் நிற்கத் தயங்குகிறாள்...
"விதவை"

வயிற்றுப் பசிக்கு ஆண்களின் காமப்பசி தீர்த்து...
உணவைப் பெறுகிறாள்
"விபச்சாரி"

கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு
கணவனை அனுமதிக்காமல்...
தன்னை உட்படுத்திக் கொள்கிறாள்...
"வம்ச தர்மம் காப்பவள்"

சீர் கேட்கும் புகுந்த வீட்டிற்கும்...
கொடுக்க மறுக்கும் தாய் வீட்டிற்கும்...
நடுவே திரிசங்கு நரகத்தில் விழுகிறாள்...
"வாழாவெட்டி"

குடிகாரக் கணவனிடம் அடிபட்டு மிதிபட்டாலும்...
தியாகத்தின் புனிதம் காக்கிறாள்...
"பத்தினி"
வீட்டின் அக்கினி மூலையில் நாள் தோறும் தீக்குளிக்கிறாள்...
கல்வியில் தங்கம் வென்றிருந்த
"இல்லத்தரசி"

கணவன் வஞ்சித்துக் கை விட்ட பிறகு...
வேறு துணையோடு சேர்ந்து வாழுகிறாள்...
"நடத்தைக் கெட்டவள்"
தடைகளைத் தாண்டி வேற்று சாதிக் காதலனை மணந்ததால்...
ஒதுக்கப்படுகிறாள்
"ஓடுகாலி"
எத்தனை புரட்சிகள் வெடித்தாலும்...
இத்தனை பெண்களையும் உயிரோடு விழுங்கும் பூமி கொக்கரிக்கிறது...

"பெண் என்பவள் பூமாதேவி...

- கலையரசி திருநாவுக்கரசு

சத்யபிரபா கவிதை

மேகமூட்டம் பார்த்து
குடை கொடுத்தாள் அம்மா

மழையில்லை
வெயில் கொளுத்தியது

குடை விரித்தான் மகன்
'அம்ம்மா'
கரைந்தது மனம்

- சத்யபிரபா

அந்தக் கால மனிதர்கள்

மலர்மதி

சென்னை

ஹாலில் போடப்பட்டிருந்த ஈஸி சேர்களில் அமர்ந்திருந்தனர் தாத்தாவும், பாட்டியும்.

பாட்டி மடியில் பவித்ரா. அவர்களின் செல்லப் பேத்தி.

பேத்திக்கு தினமும் கதைகளைச் சொல்வார் பாட்டி. பழைய காலத்தைப் பற்றி தோண்டித் துருவி பல கேள்விகளைக் கேட்பாள் பவித்ரா. பாட்டியும் சளைக்காமல் பதில் சொல்வார்.

வழக்கம்போல் இருவரும் பேசிக்கொண்டிருக்க, கிச்சனில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள் சீதா.

"அம்மா சீதா..." என்று தாத்தா குரல் கொடுக்க, "என்ன..?" என்று வந்து நின்றாள் அவருடைய மருமகள்.

"காபி கொண்டு வாம்மா."

இரண்டு டபராக்களில் காபியைக் கொண்டு வந்து, 'டொக்'கென்று டீபாயின் மேல் சத்தமாய் வைத்தாள் சீதா.

"ஈஸி சேரில் ஜாலியா உக்கார்ந்துக்கிட்டு ஆர்டர் கொடுக்கறதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல..' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தபடி கிச்சனுக்குள் நுழைந்த சீதாவின் பின்னால் ஓடி வந்தாள் பவித்ரா.

"அம்மா.. அம்மா..."

"என்னடி..?"

"நீ மசாலா எதுல அரைக்கிறே?"

"மிக்ஸிலதான்."

"துணி எப்படி துவைக்கிறே?"

"வாஷிங் மெஷின்ல."

"குழம்பு எதுல செய்யறே?"

‘‘குக்கர்ல. ஆமாம், பெரிய மனுஷியாட்டம் ஏன் இதையெல்லாம் கேக்கறே?’’ என்று கடுப்பானாள் சீதா.

‘‘பாட்டி அந்த காலத்துல அம்மியில் மசாலா அரைச்சிருக்காங்க. கையாலேயே துணி துவைச்சிருக்காங்க. ஆட்டுக் கல்லுல மாவு ஆட்டியிருக்காங்க. உரல்ல அரிசி குத்தியிருக்காங்க. எல்லா வேலையும் கையால செஞ்சு, செஞ்சு ஓய்ஞ்சுபோன அவங்களுக்கு கடைசி காலத்துல கொஞ்சம் ரெஸ்ட் கிடைச்சிருக்கு.’’

-2-

‘‘அதுக்கு என்ன இப்ப?’’

‘‘அவங்களுக்குக் கிடைச்சிருக்கிற இந்த ஓய்வு நேரத்தையாவது அவங்க நிம்மதியா கழிக்கவேணாமா? கொஞ்சம் யோசிச்சுப் பாரும்மா... பாட்டி போல இப்ப உன்னால வேலை செய்ய முடியுமா?’’

ஆறு வயது சிறுமி கேட்ட கேள்விக்கு ஆடிப்போனாள் சீதா.

‘சடா’ரென அந்த உண்மை உறைத்தது.

இனி பெரியவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என தீர்மானித்த சீதா, தன் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட பவித்ராவை வாரி அணைத்து முத்தமிட்டாள்.

பாபு

இரம்யாநடராஜன்

வல்லினச் சிறகுகள், சென்னை

சாரளம் வருடும் எதிர்காற்றில் மண்சாலையோடு பூக்கும் ஊர் வாசம்.நினைவுகள் சுமத்திய ஊருக்கு போவது எல்லோருக்கும் ஒரு வரம்.அது பலவருட காத்திருப்பாய் இருக்கும் போது கூடுதல் சுகம்.‘‘பாபு..நீ ஏன்டா பொண்ணாகனும். இப்டியே இரு. எனக்கு பிடிச்சிருக்கு’’‘‘உனக்கு இப்ப புரியாது டா..’’

மனக்கண்ணில் பாபு வந்து வந்து போனான்.

‘‘ஏம்மா சீக்கரம் ஏறு..எவ்வளவு நேரம்.உங்க அப்பன் ஊட்டு பஸ்ஸா’’அவரின் குரல் தவம் கலைத்தது.அவள் பேருந்தில் ஏறி என் அருகில் அமர்ந்தாள்.ஒரு சிரிப்பு.ஒப்புக்கு ஒரு சிரிப்பு உதிர்த்துவிட்டு மீண்டும் எதிர்காற்றுக்கு முகம் கொடுத்தேன்.அவள் ஏதேதோ கேட்கத் துவங்கினாள்.’’சரிங்க தூக்கம் வருது.கொஞ்சம் டிஸ்டர்ப் பண்ணாதீங்க’’ என்றேன்.

மென்சிரிப்பை உதிர்த்த அவள் பேசத் துவங்கினாள்.’’இது பஸ் சிநேகம் அவ்வளவு தான்.உங்க கனவு கலைக்க எண்ணம் இல்ல.கூட கொஞ்ச தூரம் பயணிச்சாலும் என் கிட்ட முகம் கொடுத்து பேசிட்டாங்கன்னு ஒரு நிறைவா இன்றைய நாள் இருக்கும்.அதான்.என்ன பாத்தா அருவருப்பா இருக்குதா?’’

‘‘அய்யோ அப்டிலாம் இல்லைங்க. நான் வேற ஏதோ நினைவில இருந்தேன்.மன்னிச்சிடுங்க.நீங்க தப்பா நினைக்காதீங்க.ரொம்ப நாள் பிறகு ஊருக்கு போறேன் அதான் இப்படி அசை போட்டுட்டே இருக்கேன்.’’

‘‘எந்த ஊருக்கு?’’

“திருவூருக்குத்தான்.”

“அட! அங்க எந்த வீடு.என்உறவெல்லாம் அங்க இருக்காங்க.”

“சின்னதுல சின்ன தாத்தா பாட்டி கூட அங்க வளர்ந்தேன். ரொம்ப நாள் ஆச்சு அதான்.”“தாத்தா பேரு என்ன டா?”

டா வில் பாபு வந்து சிரித்தான்

“சீனுவாசன் பாட்டி ராசம்மா..உங்களுக்கு தெரியுமா.”

“கேள்வி பட்ட மாதிரி தான் இருக்கு. இப்ப என்ன பண்றீங்க டா?”

“நான் பைலட்டா இருக்கேன்.”

“ஓ ஏரொப்ளேன் ஓட்றது தான..ஹாஹாஹா இங்க பாரு டா எங்க டிரைவரு அப்டி தான் ஓட்றாரு பஸ்ஸ..நீங்கலாம் ஜீஜீபி..”

இழுத்து இழுத்து பேசும் குரலும் பளீர் பளீர் என விழும் சிரிப்பொலியும் கவரத்தான் செய்தது.”எனக்கு கூட ஹேர்ஓஸ்டஸ் ஆக ஆசை”..சொல்லும் போது கழுத்து வெட்டி தலை முடியை காதுவரை கோதிக் காட்டினாள்.சிரித்துவிட்டேன்.”என்ன சிரிப்பு. நானெல்லாம் ஆக முடியாதா?”.”யார் சொன்னா..தாராளமா ஆகலாம்.திருநங்கைங்க பைலட் ஆகிட்டு இருக்காங்க.உங்க ஸ்டைல பட்டாம்பூச்சி பறந்துச்சு அதான் சிரிச்சேன்.”

“அதுக்கு நம்மூர்ல கொஞ்ச வருஷங்கள் ஆகும் டா. இன்னும் பார்வை மாறனும்.நாங்களும் எங்க தரத்த உயர்த்திக்கனும்.ஆமா..படிப்பு தான் எல்லாம்.கற்றவருக்கு தான் சொல்லும் இடமெல்லாம் சிறப்பு..இல்லையாடா.”

“ஆமா. நீங்க என்ன பண்றீங்க?”“நான் இப்படி தெரிஞ்ச வேலை பண்ணிட்டு விடியலுக்கு வெயிட்டிங். டியூஷன் எடுப்பேன்.தையல் பண்றேன்.சில சமயம் ஊருக்கு போயி சில பேன்ஸி அயிட்டம் வாங்கி வந்து விற்பேன்.ப்ளே ஸ்கூல்ல

குட்டீஸ் பாத்துக்கறேன்.இப்படி பல.எனக்கும் பசிக்குமே.தலைக்கு மேல கூரை வேணுமே.’’‘‘சூப்பர்.என்ன படிச்சிருக்கீங்க.’’

‘‘ஒன்பதாவது தான். அதுக்கு மேல படிக்க முடியல. பள்ளிகூடம் நிறுத்தின பிறகு தான் நிறைய படிச்சிருக்கேன்..ஹாஹாஹா.உலக இலக்கியம், நவீன இலக்கியம் எல்லாம்.புகழ்ச்சிக்கு இல்ல.வாசிக்கறவன் தான் வாழறான்னு ஒருத்தர் சொல்லியிருக்காரு.நீ வாசிப்பியா டா.’’

இப்படி தான் ஒரு ஒத்த புள்ளியில் பல நட்புகள் மலர்கிறது. ஏதேதோ பேசிக்கொண்டிருந்தோம்.பேருந்து ஸ்நேகம் ரயில் ஸ்நேகம் எல்லாம் இல்லை.

இது ஆதி தொடர்பு போல இருந்தது.ஒவ்வொரு முறை டா டா எனும் போதும் உள்ளே குறிஞ்சி பூத்தது.

‘‘ஒரே முறை உன் தரிசனம் உலா வரும் நம் ஊர்வலம்’’ அலைபேசி சிணுங்கியது. தன் கைப்பையை திருவிக்கொண்டே கூடவே பாடிக் கொண்டே என்னைப் பார்த்து கண் சிமிட்டினாள்.’’ஆங் சொல்லு. ஆமாமா அடுத்த பஸ் ஏறிடுவோம்.கிட்ட வந்தாச்சு தான் நினைக்கறேன்.ம்ம்ம் அதெல்லாம் அமோகமா நடந்துச்சு.வானத்தையே பிடிச்ச சந்தோஷம்.அங்க ஒன்னும் ரியாக்க்ஷன் இல்ல.பரவாயில்ல புரியும்போது புரிஞ்சிக்கட்டும்.சரி வெயிட் பண்ணு வந்தறேன்.’’

அலைபேசியை அணைத்து பையில் போட்டுவிட்டு என்னைப் பார்த்து ‘‘சரிடா நான் அடுத்து இறங்கனும்.உன் கூட பேசினது அவ்வளவு சந்தோசம்.கை பிடிச்சிக்கவா இறங்கற வரைக்கும்’’ என்று உரிமையுடன் கைப்பிடித்துக் கொண்டாள்.அந்த அழுத்தத்தில் ஏதோ ஒரு செய்தி ஒளிந்திருந்தது.மனசிருந்து மனசுக்கு ஏதோ கடத்தும் மொழி.அரைமணி பேருந்து பயணத்தில் இத்தனை மலர்ச்சியா.ஆச்சரியம் தான்.ஆச்சரியங்களும் வளைவுகளும் நிறைந்தது தானே வாழ்க்கை.இரண்டு கைகளாலும் கன்னம் தொட்டு முகர்ந்து கொண்டாள்.கண்ணில் ஒரு துளி திரண்டு அடங்கியது.’’நீ நல்லா இருடா.வரேன்.’’

பேருந்துவிட்டு இறங்கி நடந்தாள்.கழுத்து திரும்பும் எல்லை வரை அவளை பார்த்துக்கொண்டிருந்தேன்.ஏன் என்று புரியாமலேயே.நம்பர் வாங்கியிருக்கலாமோ.என்னவோ இழந்த மாதிரி இருக்கே.மறுமுறை சந்திக்க வாய்ப்பு இருக்குமா தெரிலயே.பேர் கூட கேட்டுக்கல.என்ன ஒரு நெருக்கம் மனசுக்கு.இந்த பாபுவும் இப்டி தான.மனம் மெல்ல பாபு பக்கம் சரிந்தது.’’ஏன்டா இப்டி பொட்டுலாம் வச்சி லில்பிக்லாம்..அய்யே..கல டா முதல்ல’’

‘‘ஏன்டா நல்லாயில்லையா. ஆசையா இருந்துச்சு.உனக்கு தான் காட்டனும்னு ஓடிவந்தேன்.’’’’நல்லாத்தான் இருக்கு ஆனா வேணாம்.’’

‘‘சரிடா நீ சொன்னா கேட்டுகறேன்•••.’’

எனக்காக எதுவும் செய்யும் பேரன்பன் பாபு.வயது கூடுதலாகத்தான் இருக்கும் ஆனாலும் ‘வா டா போ டா’ வின் உரிமை எதில் வரும்.குடும்ப குழப்பங்களுக்காக தாத்தா பாட்டி வீட்டில் படிக்க வந்த எனக்கு அவன் உற்றத் துணை ஆனதெல்லாம் காலத்தின் எழில் கோலம்.முதல் சந்திப்பே அப்டி ஒரு ஹீரோ என்ட்ரி சீன் தான்.

சந்தையில் தாத்தா எதையோ பேரம் பேசிக்கொண்டிருக்க முதுக்கு பின்னால் ஏதோ ஊர்தல்..என்ன என்று சுதாரிப்பதற்குள் எதிரே வந்து நின்று ‘என்ன’ என்றான் பாபு.நானும் ‘என்ன ஒன்னுமில்லையே’ என்றேன்.கையை பிடித்து

‘தாத்தா அந்தா இருக்கு போ’ என்றான்.’கிறுக்கன்’ என்று திட்டிக்கொண்டேன் நகர்ந்துவிட்டேன்.பின்னால் ‘படேர்’ என்று சத்தம்.எவனையோ செவிலில் அறைந்து திட்டிக் கொண்டிருந்தான்.’பச்சப்புள்ள..அறிவில்ல..த்தூ.’

அன்று விளங்காத அந்த காட்சி மறுமுறை அந்த அறை வாங்கியவன் சீண்டலின் போது புரிந்தது.அப்போதும் பாபு தான் வந்தான்.இவன் என்ன கருப்பனா சரியான நேரத்துக்கு வந்தர்ரான் என்று கூட தோன்றியதுண்டு.ஒரு முறை அப்படி தான் ஊர் தெப்பக்குளக்கரையில் விளையாடிக்கொண்டிருந்த என்னை அழைத்து தலை தடவிக்கொண்டிருந்த கிழவனின் மூக்கு உடைந்தது எல்லாம் பாபு உபயம்.’’பாபு எப்டி எனக்கு ஒன்னுன்னா ஓடி வர.’’

‘‘அதுவா உன்ன எனக்கு ரெம்ப பிடிக்கும். எவ்ளோ அழகா இருக்க.சாந்தமான முகம்.நிறைய அறிவு.அலட்டலே இல்ல.என் கூட ப்ரண்டா இருக்கியே.’’’’ஆமா நீ தான் எப்பவும் வந்து நிக்கற.ஆனா அந்த பாலா கிழவி மட்டும் உன்கிட்ட சேரக்கூடாது பேசக்கூடாதுன்னு சொல்லிட்டே இருக்கு.என் தோழி சாந்தி கூட அது இதுங்கறா உன்ன..ஏன்னே புரில.உன்கிட்ட பேசிட்டுவந்தா அவ என் கூட பேச மாட்டாளாம்.போடின்னுட்டேன்.ஏன் பாபு உன்கிட்ட பேசினா என்னவாம்.’’

சிரித்துக்கொண்டான்.’’இப்ப புரியாது.புரியும் போது புரிஞ்சிக்குவ.சரி சரி.யார்கிட்டயும் நாம பேசிக்கறத பெருசா சொல்லிக்காத.என்ன.சரி கணக்குல என்ன மார்க் கம்மியாகிருக்கு.குடு சொல்லித்தரேன்.’’

‘‘உனக்கு தெரியுமா. ஸ்கூல்லயே உன்ன பாத்ததில்லையே?’’

‘‘நான்லாம் ஸ்கூல் போகாத மேதை. வாயாடி வா படிக்கலாம்.’’

இப்படி படிப்பு முதல் பாரதி,தாகூர்,மில்டன்,கீட்ஸ்,லியோ டால்ஸ்டாய் என ஏதேதோ புது உலகம் காட்டியவன் அவன்.பெருசா வானத்துல பறக்க கனவு காணு டா குட்டி.எதையும் சாதிக்க முடியும் சொல்லி சொல்லியே பைலட் ஆசை துளிர்த்துவிட்டது.நிறைவேறியும் விட்டது.ஆனால் இதை பகிர்ந்து கொள்ள தான் பாபு அருகில் இல்லை.

வாழ்க்கை துரத்த துரத்த ஓடிக்கொண்டிருக்கிறானோ என்றே பட்டது.சொந்த ஊரில் சொந்த மக்கள் தன்னை புரிந்துக்கொள்ள தான் அவனுக்கு எத்தனை பாடு.அது இது என்றும் காதுகூசும் வசனங்களிலும் அருவருக்கும் சீண்டலிலும் தன் மக்கள் என்ற ஒரு நம்பிக்கையில் இருந்தவனை ஊரைவிட்டு ஓடச்செய்தது விதியா மனித மூளையின் கசடா.நினைக்க நினைக்க அடைத்துக்கொண்டுவரும் கண்ணீரை கட்டுப்படுத்த தான் முடிவதில்லை.கிட்டதட்ட ஏழுஎட்டு வருட பந்தம் எனக்கும் அவனுக்கும்.படித்துமுடித்து ஊரைவிட்டு கிளம்பும்போது அவன் சொன்னவார்த்தைகள் இன்றும் மனதில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

“இங்க பாருடா..உன் இலக்கு எப்பவும் விட்டுகுடுக்க கூடாது.பாதை மாறலாம்.போய்சேரும் இடம் உன் இலட்சியமா தான் இருக்கனும்”.

“பாபு..உன்ன விட்டு தூரமா போற மாதிரி இருக்கு.நான் மூனு மாசம் ஒருவாட்டி ஊருக்கு வந்து உன்ன பாக்கறேன்.நீ சண்டைலாம் போடாம அழாம இரு டா.உன்ன தனியா விட்டுபோற மாதிரி இருக்கு.”.

“குட்டி அழக்கூடாது டா. உனக்காக தான் இங்க இருந்தேன்.நானும் வேற வேல தேடி போகனும்.இப்டியே எவ்வளவு காலம் ஓட்ட முடியும்.நீ நல்லா படி.பெரிய ஆளாகு.எப்ப முடியுதோ கடுதாசி போடு.எப்பவும் உன் கூட தான் இருப்பேன்.நினப்புல.எப்ப நேரில சந்திக்கனும்னு இருக்கோ அப்ப பாக்கலாம்.சரியா.இந்தா உனக்கு..கீ செயின்..உன் ஏரோப்ளேன் சாவி மாட்டிவச்சிக்கோ ஹாஹாஹா.”

பேரன்புக்காரன்.எப்படியோ தொடர்பு விட்டுப்போனது.நினைப்பில் இருந்துகொண்டுதானிருக்கிறான்.நிஜத்தில் காண தான் இந்த பயணம்.போன மாதம் கோபைலட் மதி உடனான நட்பில் தான் இந்த எண்ணம் ஆழப் புகுந்து உறுத்திநின்றது.

‘‘மதி உங்கள போல ஒரு பால்ய நட்பு இருந்தது.’’
‘‘திருநங்கையா’’.
‘‘ஆமா ஆனா நான் அவன அவளா பாத்ததே இல்ல.’’

இது என் வாயில் இருந்தே வந்தபோதுதான் புரிந்தது.பாபுவின் அன்பில் திளைத்த எனக்கு அவளின் உள் உணர்வு மதிக்க தெரியவில்லையோ.பொட்டு வைக்கும் போதெல்லாம் எடு டா என்றதும்,பாவாடை கட்டி வந்தபோது சிரித்ததும்.கண் மை லிப்ஸ்டிக் கலைத்துவிட்டதும் நான் செய்த கொடுமைகளாக பூதாகாரம் எடுத்தது.பெண்ணாக தன்னை உணர்ந்தும் லுங்கி சட்டையில் நளினத்துடன் நடந்துவரும் அவள் பிம்பம் தூக்கம் கலைத்துத்தான் போனது.நான் செய்தது தவறா.ஊரே ஒதுக்கிவைத்தது என்று குறை சொன்னாலும் என்னிடம் அவ்வளவு அன்பு வைத்த அவளை அவளாக ஏற்பதில் எனக்கிருந்த தடை என்ன.

ஆயிரம் முறை நான் பாபு வை அவள் என்றாலும் எனக்கு முழுதாய் இன்னமும் ஏற்கமுடியவில்லை.மனத்தின் குழப்பங்கள் தீர்த்தவன் தான் இதையும் தீர்க்க வேண்டும்.அவ்வப்போது ஊருக்கு அவன் வருவான் என்ற செய்தியின் பின்னனி கொண்டே இந்த பயணம்.இத்தனை வருடம் பிறகு அவனை பார்க்கும் போது எப்படி இருக்கும்.கட்டி அணைக்க தோன்றுமா.கைபிடித்து கொள்வானா.கன்னம் பிடித்து அள்ளி கொஞ்சுவானா.என்னடா இவ்வளவு நேரம் என்று கெஞ்சல் மொழி சொல்வானா.வார்த்தைக்கு வார்த்தை டா போடுவானா•••

‘‘வானம் பூமி ஆகலாம் மனசு தானே காரணம்’’ முனுமுனுப்பானா. இத்தனையும் அவன் பக்கத்தில் இருந்து அதே அவன் குட்டியாக நான் ஏற்பேனா.இது எல்லாம் இல்லாமல் அவனை பார்க்காமலேயே இந்த பயணம்••••பாபு’’ஒரு முறை உன் தரிசனம்..’’

“ஒரே முறை உன் தரிசனம்...”

“ஒரே முறை உன் தரிசனம்..”

“எனக்கு கூட ஹேர்ஹோஸ்டஸ் ஆகனும்னு ஆசை..ஹாஹாஹா...நீ நல்லா இரு டா...வரேன்..”

பாபு பேரன்பன் தான் டீ நீ. பக்கத்து இருக்கையில் தள்ளி அமர்ந்தேன்.இப்போது எதிர்காற்றில் ஈரப்பதம.அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்.

சிறகை விரி! - பாவலர் மு.செந்தாமரை

கோயமுத்தூர் 94883 73999

கண்ணே கண்கள் மூடிக் காணும்
கனவினில் பற்பல எண்ணங்கள் சிறகடிக்கும்!
பெண்ணே வண்ணமாக வானவில்லாக வட்டமடி!
மண்ணும் விண்ணும் வென்று சாதிக்க!

துச்சமாக எண்ணியவர் முன்
விருட்சமாகவே!

கண்ட கனவது நனவாகவே
விழித்திடு!

உச்சம் தொடப் போராடு
வாகைசூடு!

சிதையாத நெஞ்சோடு சிரத்தையோடு ஓடு!

வதைக்கும் வன்ம மனிதர்
அழித்திடு!

குறிக்கோள் ஒன்றை மனதினில் குறித்திடு!

சிறப்பாய் வெல்வாய்
செறிவாய் உழைத்திடு!

சிறகை விரித்துச் சுதந்திரமாய்
பறக்கவே விரும்பிடு!

மருந்து அரைக்கும் அம்மிகள்

பேரா ப. தேவி அறிவு செல்வம்

தாவர மருந்தியல் துறை தலைவர்,
சிற்பத்துறை ஆய்வாளர்,
தனலட்சுமி ஸ்ரீனிவாசன் மருந்தியல் கல்லூரி,
பெரம்பலூர்.
9865377764, devipharm18@gmail.com

நோய் உருவான காலத்திலேயே மருத்துவ முறையும் மருந்துகளும் உருவாகி இருக்கும் அவற்றை நீக்க தாவரங்களை பயன்படுத்தி இருப்பர் அதனைத் தொடர்ந்து மருந்து செய்முறைகளும் மருந்து பொருள்களும் மூலிகை தாது உலகப் பொருள்கள் உயிர் பொருள்கள் கொண்டு மருத்துவம் வளர்ந்துள்ளது. இம்முறையில் மூலிகைகளை பயன்படுத்தி பக்குவப்படுத்தி வழங்கும் முறை உருவாகின.

பழங்காலத்தில்போர் வீரர்கள் வெட்சி, கரந்தை மலர் மாலைகளை அணிந்துள்ளனர். வெட்சி மலரின் சாறு களைப்படையாமல் வைக்கவும் வீக்கத்தை குறைக்கவும் வெட்டுக் காயத்திலிருந்து வரும் குருதியை நிறுத்தும் முதல் உதவி மருந்தாக பயன்பாட்டில் இருந்துள்ளது . கரந்தையும் உடல் சுரத்தை குறைத்து வீக்கத்துக்கும் வாத நோய்க்கும் மருந்தாக இருந்துள்ளது.

இலக்கியங்களில் மருந்து கொடுப்பது பற்றி நற்றிணை 136, மரத்திலிருந்து மருந்து எடுப்பது பற்றி புறநானூறு 180 வது பாடல் மற்றும் கலித்தொகை அகநானூறு கீழ்க்கணக்கு நூல்கள் தொல்காப்பியம் திரிகடுகம்

சிறுபஞ்சமூலம் ஏலாதி பதின்வராக கருதப்படும் அகத்தியரின் பாடல்கள் வழியாக தெரிந்து கொள்ள முடிகிறது.

சாறு, சுண்ணம், சூரணம் போன்ற மருந்து தயாரிப்பு முறைகளுக்கு கல்வம் ஆட்டு அம்மி, ஒருதலை குழவி அம்மி, இருபக்கம் தலை உள்ள குழவி அம்மி போன்றவை மருந்து தயாரிக்கும் பொருள்களைபயன் இடிப்பதற்கு படுத்தப்பட்டிருக்கின்றன. இது போன்ற அம்மி குழவிகளை திருப்பரங்குன்றம் நக்கீரர் குகை, அருவி மலை போன்ற குகை அமைப்புகள் கொண்ட மலைகளின் முன்புறமும், குகை அமைப்பு இல்லாத பாண்ட முத்துமலை, திருச்சுனை மலை போன்ற மலைகளிலும் காணலாம். பழங்காலத்தில் மலைப்பகுதிகளில் தமிழ் சித்த மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து உள்ளனர் என்று இதன் வழியாக தெரிந்து கொள்ள முடிகிறது. இன்று இம்முறை வழக்கொழிந்து விட்டாலும் இந்த அமைப்புகளை இம் மலைகளில் பார்க்க முடியும்.

தரவுகள்

1. சித்த மருத்துவ ஆய்வு கோவை, சரஸ்வதி மஹால் 2009.
2. மருந்து செய்முறைகள், தி. லலிதா உலகத் தமிழாராய்ச்சி, 1985

கூலானிபட்டி கன்னிமார் கோயில்

பேரா ப. தேவி அறிவு செல்வம்

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், அ. வல்லாளப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கூலானிபட்டியில் 100 அடி உயரத்தில் அமைந்துள்ளது கருத்தமலை என்னும் கன்னிமார் மலை.

தமிழக பல்லுயிரிய பாரம்பரிய தளமான அரிட்டாப்பட்டி அருகே உள்ள இந்த மலை மேலே கன்னிமார் கோயில் உள்ளது. 30 அடி நீளம் அகலம் ஒரு அடி உயரம் உள்ள சுற்றுச்சுவரின்உள்ளே 1200 ஆண்டுகள் தொன்மையான தவ்வை, கொற்றவை மற்றும் சப்த மாதர்கள் சிலையும், 700 ஆண்டுகள் பழமையான வட்ட வடிவ ஆவுடையார், நந்தி சிற்பங்களும் உள்ளது.

தவ்வை/ மூதேவி/ ஜேஷ்ட்டா தேவி:

தமிழகத்தில் கிபி ஒன்பதாம் நூற்றாண்டு வரை வழிபாட்டில் இருந்த தாய் தெய்வங்களானதவ்வை என்னும் மூதேவிக்கான கோயில் மதுரையில் திருப்பரங்குன்றம் முருகன் குடைவரைக் கோயிலில் தனி குடைவரையில் சன்னதியாக இருக்கிறது. மேலும் மதுரை சுற்று வட்டாரங்களில் ஆனையூர்,

செல்லப்பநேந்தல் போன்ற இடங்களிலும் சிறப்பான வழிபாட்டில் உள்ளது. அவ்வாறான கிபி ஏழாம் -ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்த தவ்வை சிற்பம் இரண்டடி உயரம் நான்கு அடி அகலம் கொண்ட பலகை கருங்கல்லில் மாந்தன் மற்றும் மாந்தியுடன் தலையில்லாத நிலையில் தவ்வை சிற்பம் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது.

இந்த தெய்வத்தை வணங்கினால் நோய் தீரும் என்று காமிக ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொற்றவை:

போர்க்குடி தெய்வமான கொற்றவை பற்றி தொல்காப்பியத்தில் குறிப்புகள் உள்ளன. போருக்கு செல்லும் முன் வெற்றியடைவதற்காக வீரர்கள் கொற்றவையைவணங்கி விட்டும் வெற்றியடைந்த பிறகு நன்றி செலுத்திய செய்திகளை இலக்கியங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது.

தவ்வை சிற்பத்திற்கு எதிரே கூம்பு வடிவில் மூன்றரை அடி உயரம் இரண்டடி நீளம் உள்ள பலகை கல்லில் நின்ற நிலையிலான கொற்றவை சிற்பம் புடைப்புச் சிற்பம் கால் பகுதி இல்லாமல் உள்ளது. உடைந்த சிற்பத்தின் கால் பகுதியானது தனியாக இச் சிற்பத்தின் பின்புறம் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இதனை சுற்றி தற்போது சிமெண்ட் போட்டு பூசி உள்ளார்கள். நான்கு கரங்கள் கொண்ட

இச்சிற்பத்தின் கீழ் இடது கை தொடையில் வைத்தும், கீழ் வலது கை,மேல் இரு கைகள், முழுவதும் சிதைந்து உள்ளதால் ஆடை ஆபரணங்கள், கை அமைதிகளின் விவரங்களை அறிய முடியவில்லை.

ஏழு பெண் தெய்வ சிற்ப தொகுதிகள்:

மூன்றடி உயரம் 10 அடி நீளம் கொண்ட செவ்வக கருங்கல் பலகை கல்லில் ஏழு பெண் தெய்வங்கள் / சப்த மாதர்கள் அமர்ந்த நிலையில் இருக்கின்றனர். இவர்களுக்கு காவலாக விநாயகரும் வீரபத்திரர் போன்றவர்களை வைக்கும் வழக்கம் உள்ளது. இங்கு இருக்கும் சப்த மாதர்கள் சிற்பத் தொகுதியில் காவல் தெய்வங்கள் இல்லாமல் இருப்பது இவர்கள் காலத்தால் முந்தியவர்கள் என்று கருத முடிகிறது.

மருந்து குழி:

இக் குன்றில் காலடி நீளம், அகலம், ஆழம் கொண்ட மருந்து குழி என்று சொல்லப்படும் சிறிய பள்ளமும் உள்ளது.

கோயில் வளாகத்தின் உள்ளே மையத்தில் தொன்மையான செங்கல் கட்டிடத்தின் அடிப்பாகமும் காணப்படுகிறது. இங்கே 7 ஆம் நூற்றாண்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டை சேர்ந்த சிற்பங்கள் கிடைப்பதை அடிப்படையாக கொண்டு இப்பகுதியில் தொன்மையான கோயில் ஒன்று வழிபாட்டில் இருந்துள்ளதை தெரிந்து கொள்ள முடிகிறது.

மதுரை வைகை படித்துறை

பேரா ப. தேவி அறிவு செல்வம்

சங்ககாலத்து நூலான பரிபாடலில் திருப்பரங்குன்றம் முருகன், வையை மற்றும் திருமாலை பற்றி பல பாடல்கள் உள்ளன. வைகை ஆறு பெருக்கெடுத்து வருதல், ஊர்களையும், வயல்களையும் அழித்தல் மதுரை மாநகரத்து மக்கள் மகிழ்வோடு புதுநீராடுதல், மார்கழி நோன்பு கொண்டாடுதல் ,வையைக்கு வாழ்த்து கூறல் முதலிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பரிபாடலில் மதுரையைப் பற்றி ஆலவாய் அண்ணல் கோயில் தாமரை பொகுட்டாகவும் சுற்றியுள்ள தெருக்கள் தாமரை இதழ்களாகவும் உருவகம் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறது.

பரிபாடலில் வைகையை பற்றி *6, 7, 10, 11, 12, 16, 20, 22* என எட்டு பாடல்கள் உள்ளன.

மதுரை மாநகரின் மதிலை ஒட்டி வைகை சென்றது. அதில் பெருகி வரும் வெள்ளத்தின் அலைகளை விண்ணுற உயர்ந்த மதிலின் மீது மோதும் பொழுது ஏற்படும் ஓசை கேட்டு மக்கள் துயில் எழுவர்.சங்க இலக்கியங்களில் புதுநீர் விழவு முந்நீர் விழவு, புனலாடல், புது நீராடல், புதுப் புனலாடல் என நீருடன் தொடர்புடைய நிகழ்வுகள் பற்றி குறிப்புகள் உள்ளன.

இம் முந்நீர் விழாவினை பல்யாக சாலை முதுகுடி பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் கொண்டாடியதாக புறநானூறு கூறுகிறது.

மழை பொழிந்து அவற்றால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவரும் வேளையில் மக்கள் மகிழ்ச்சி பொங்க கூத்தும் கும்மாளமும் கொண்டாட்டமுமாக நீராடி மகிழ்வதே புனலாட்டு விழா/ ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடும் புதுப்புனலில் பாய்ந்து நீந்தி விளையாடுவதை புனல் விளையாட்டு என்பர்.

வைகை ஆற்றின் வளமான கரையில் அமைந்த இந் நகரின் மக்கள் இறங்கி நீராடும் துறையாக மருதந்துறை என்றொரு நீர்த் துறை இருந்ததை பரிபாடல் பகிர்கின்றது . அந்த மருதந் துறை அடர்ந்த மருத மரங்கள் நிறைந்த கரையை கொண்டிருக்கும்.

மேகம் திரண்டு மலைகளில் மழையை பொழிய மழைநீர் வழிந்து வெள்ளம் பெருக்கெடுத்து சோலை பொழில்களில் உள்ள நறுமணப் பூக்களை அடித்துக் கொண்டு வந்து சேர்த்தும் இதன் வருகையை பறையடித்து அறிவித்தும் அங்கு நீராடி மகிழ, வாழ்த்தி போற்ற, அதனை கொண்டாட பல்வகை ஆபரணங்களையும் மலர்களை கொண்டு மாலையாக சூட்டியும் சென்றதாக பரிபாடல் கூறுகிறது.

கரை புரண்டு வரும் வைகை கரையான திருமருதமுன் துறையில் நீராட குதிரை, தேர் ,மாட்டு வண்டி, யானை முதலியவற்றில் சென்று தோள்வளை அணிந்தும், ஆரங்கள், முத்துச் சரங்கள் அணிந்தும் செம்பஞ்சுக் குழம்பும் சந்தனமும் பூசி வந்தவை பற்றி பரிபாடல் குறிப்பிடுகிறது.

வெள்ளப் பெருக்கை கொண்டாடும் பொழுது இசைக்கருவிகள் இசைத்தும் ஆடல் மகளிர் நடனமாடியும் நீர் விளையாட்டுகள் விளையாடும் உள்ளனர். இவ் விளையாட்டுக்களுக்கு வாழைத்தண்டுகளை நீரிலிட்டு தண்டுக்கு தண்டு தாவி விளையாடியும் படகுகளில் அமர்ந்து ஆற்று நீரோட்டத்திற்கு ஏற்ப செலுத்திய ஆற்றில் குதித்து விளையாடியும் பெருக்கெடுத்து வரும் நீரில் கொண்டாடிக் மகிழ்ந்து உள்ளார்கள்.

இக் கொண்டாட்ட நிகழ்வில் நீராட வருவார் தங்குவதற்குரிய தண்பொழில் அமைந்த அழகிய துறை இந்த திரு மருதமுந்துறை ஆகும்.

கூடலார் எல்லாம் வந்து கூடினாலும் கூடர் கோமான் படையுடன் வந்து நாடினாலும் தங்குவதற்கு வாய்ப்பு உடைய வளமான பொழில் சூழ்ந்த எழில் துறை இந்தத் திருமருதமுந்துறை.

நீர் வற்றிய வேனில் காலத்திலும் கரையை சார்ந்து நீர் சென்று கொண்டிருக்கும் இந்த திருமருத முந்துறை சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் பல ஆயிரம் வருடங்கள் தொன்மையான சிறப்பு பெற்ற படித்துறை மதுரையில் இப்பொழுது எங்கே?

வைகை கரை சாலை அமைத்த போது அழிந்து விட்டதோ.

காணவில்லையே மதுரை படித்துறையை.

வைகை படித்துறையும் கரைகளில் மருத மரங்களும் மீண்டும் வந்தால் 3000 ஆண்டுகள் தொடர்ச்சியாக உலகத்தில் வாழ்விடமாக இருக்கும் இந்த மதுரையின் தொன்மை இன்னும் பல நூற்றாண்டுகள் சங்க இலக்கியத்தில் காண்பது போல் தொடர்ந்து காணலாம்.

தொடர் நாகரீக வளர்ச்சி நகர வளர்ச்சியினால் வைகை கரையில் இருந்த பல தொல்லியல் இடங்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கிறது. முக்கியமாக ரோமன் தங்க நாணயங்கள் கிடைத்த உத்தமபுரம் இன்று காணாமல் போனது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

விடுதலை இயக்கத்தின் தாய்– ரோசாப்பார்க்ஸ்

அ. திவ்யகுமாரி கண்ணம்மா

ஐயை உலக தமிழ் மகளிர் மன்றம்

இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உலகமயமாக்கல் கொள்கைக்குப் பிறகு மேற்கத்திய கலாச்சார பரவல் இந்திய இளைஞர்களிடம் மிக அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

தொன்மையான மரபணு கொண்ட இந்தியர்கள் கருப்பு மற்றும் மாநிறத்தில் இருப்பதை தாழ்வு மனப்பான்மையோடு பார்க்கும் ஒரு தவறான சமுதாயப் பார்வையை உண்டு பண்ணியது மாடலிங் உலகம்.

இந்திய பெண்மணி ஒருவரை உலக அழகியாக அறிவிப்பதும் .

அவர் மூலமாக பல அழகு சாதன பொருட்களை இந்தியாவில் விற்பதுமே, அந்த அழகி போட்டியின் உண்மையான இலக்கு.

பல நாட்களாக திருமணமாகமல் இருக்கும் கருப்பான பெண் ஒருவர் பேர்னஸ் கிரீமை பயன்படுத்தி சிவப்பாக மாறியதும் மாப்பிள்ளை கிடைத்து விடுவதாக விளம்பரங்கள் இந்திய வீடுகளில் ஒளிபரப்பாகிக் கொண்டே இருந்தன.

இந்த வியாபார நோக்கத்தினால் தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்களை பார்த்து எத்தனை பேர்னஸ் கிரீம்களை வாங்கி தங்கள் முகம் சிவப்பாக மாற மெருகேற்றி இருப்பார்கள். இது மட்டுமா சூரியன் தான் உங்களின் மோசமான எதிரி அவன் உங்கள் நிறத்தைக் கருமையாக மாற்றி விடுவான் சன் ஸ்கிரீன் பயன்படுத்துங்கள் என்றும் மஞ்சள் பூசி வெயிலில் சென்றால் கருப்பாகி விடுவீர்கள் என்ற கட்டுக்கதைகளையும் கிளப்பிவிட்ட பெருமை இந்த விளம்பரங்களையே சேரும் .

இதெல்லாம் பட்டிக்காட்டு வழக்கம் என தூக்கிப் போட்ட மஞ்சளையும் சந்தனத்தையும் பூசி இருந்தாலே இன்று இந்தியச் சந்தைக்குள் தோல் புற்று நோய் மருந்துகள் வராமல் இருந்திருக்கும்.

இந்த பேர்னஸ் விளம்பரங்களின் மூலம் பல ஆண்கள் மற்றும் பெண்களின் மனதில் ஒரு தாழ்வு மனப்பான்மையையும் தன்னம்பிக்கை இல்லாத நிலையும் உண்டு பண்ணியது மேற்கத்திய மோகம்.

வளரும் நாடான இந்தியாவில் இந்த நிலைமை என்றால்...

சுய ஆட்சியும் வலிமையான ராணுவ பாதுகாப்பையும் கொண்ட கேப்பிட்டலிஸ்ட் நாடான அமெரிக்காவில் நிறம் பற்றிய நிலைப்பாடு என்ன ?

அமெரிக்காவின் மற்றொரு பக்கத்தை பார்க்கலாம் வாங்க..

ஒரு காலம் இருந்தது. கருப்பின மக்களுக்கு எதிராக உலகில் பல்வேறு இடங்களில் அநியாயங்களும் அராஜகப் போக்கும் நடந்து கொண்டிருந்தது.



சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் நிறவெறி தலை விரித்து ஆடியது. இங்கு சட்டங்கள் கூட நிறத்திற்கு ஏற்ற மாதிரியாக தான் இருந்தது .

அக்காலகட்டங்களில் (ஐரோப்பிய) அமெரிக்கர்களுக்கு ஒரு சட்டமும் ஆப்பிரிக்கக் கருப்பு நிற அமெரிக்கர்களுக்கு வேறொரு சட்டமும் இருந்து வந்தது.

கருப்பின மக்கள் பல அடக்குமுறைகளையும் அநியாயங்களையும் எதிர் கொண்டனர். இதற்கு எதிராக ஏராளமான போராட்டங்கள் நடைப்பெற்றன ஆனாலும் அமெரிக்க அரசுக்கு அது ஒரு பொருட்டாகவே இல்லை.

அமெரிக்காவில் ஆப்பிரிக்கர்களின் இந்நிலையை முற்றிலுமாக மாற்றியவர் ஒரு பெண் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா.

சமுதாயப் பொறுப்புகள்,போராட்டங்கள், கடமைகள் என வந்துவிட்டால் அனைத்து பெருமைகளும் போவது ஆண்களுக்குத் தானே !.

பெண்களின் சமுதாயப் பங்களிப்பு மிகவும் மறைக்கப்படும் நிலையில் தங்கள் இனத்திற்காக இடைவிடாமல் போராடியவர் ,

விடுதலைப் போரின் தாய் ” ரோசா பார்க்ஸ்.

ஆப்பிரிக்கக் கருப்பின மக்கள் அமெரிக்காவில் அல்லல்படும் காலகட்டத்தில் தான் அலபாமா மாகாணத்தில் பிறந்தார் ரோசா பார்க்ஸ்.

‘‘ரோசா லூசி மெக்காலி’’ என்பது இவரது இயற்ப்பெயர்.

ரோசா பார்க்ஸ் சிறுவயதிலேயே பல இன்னல்களைக் கண்டவர் . தனது தாய் தந்தை இருவரின் மணமுறிவுக்குப் பிறகு பாட்டி வீட்டிலேயே வளர்ந்தார் . மற்ற அமேரிக்க குழந்தைகளைப் போல எல்லாவற்றையும் பார்த்து விளையாடி மகிழ்ந்து ஆனந்தமாக இருக்கவில்லை அவரது குழந்தைப்பருவம்.

பள்ளிப் பருவம் முதல் வேலைக்கு பயணம் செய்யும் காலம் வரை எல்லாவற்றிலும் நிற பாகுபாட்டினை அவர் எதிர்கொண்டார்.

ஒரு போர் பூமியில் அகதியாக வாழ்ந்தாலும், இன நிறவெறி கொண்ட நாட்டில் வாழ்ந்தாலும், அதன் வலியும் தாக்கமும் நூற்றாண்டுகளைத் தாண்டியும் தலைமுறைகளைத் தாண்டியும் பேசப்பட்டுக் கொண்டே தான் இருக்கும்.

அவ்வாறான ஒரு வலியை எதிர்கொண்டார் ரோசா பார்க்ஸ்.

ரோசா பாக்ஸ் தனது பள்ளிப் பருவத்தில் பேருந்தில் பயணம் செய்வதை பெரிய கனவாகவே நினைத்துக் கொண்டிருந்தார்.

பொதுவாக பேருந்துகளில் ஆண் பெண் என இரு வேறு பிரிவுகள் இருக்கும்.

ஆனால் ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்குப் பள்ளிப் பேருந்தில் பயணம் செய்யவே இடமில்லை.

அமெரிக்கக் குழந்தைகள் பேருந்தில் ஏறி ஜன்னல் இருக்கைகளில் அமர்ந்து கொண்டு ஊர்கோலமாய் கிளம்புவதை ஆப்பிரிக்க குழந்தைகள் ஏக்கத்துடன் பார்த்தபடியே நடந்து செல்வார்கள்.

பள்ளிப் பேருந்தில் தான் இப்படி என்றால் மற்ற பேருந்துகளிலும் கூட இருக்கைகள் இப்படித்தான் பிரிக்கப்பட்டிருக்கும். அமெரிக்கர்களுக்கு பல முன்வரிசைகள் வழங்கப்பட்டிருக்க ஒரு சில பின் வரிசைகள் மட்டுமே ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் . அதிலும் அதிகமான அமெரிக்கர்கள் அந்த பேருந்தில் பயணித்தால் ஆப்பிரிக்கர்கள் எழுந்து தனது இருக்கையை அமெரிக்கர்களுக்கு

விட்டுக் கொடுக்க வேண்டும். இது ஒரு மனித உரிமை மீறல் என்றாலும் , இது அன்றைய அமெரிக்காவின் நடைமுறை சட்டமாக இருந்தது.

இவற்றையெல்லாம் அடியோடு வெறுத்தார் ரோசா பார்க்ஸ்.

உயர் கல்வி படிக்கும் வேலையில் பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டார்.

1932 ல் ரோசாவுக்கு திருமணம் நடந்தது. வாழ்க்கை ஓட்டத்தில் ஒரு புறம் ஓடிக் கொண்டிருந்தாலும் ரோசாவின் மனதில் இருந்த தீ என்றும் எரிந்து கொண்டே தான் இருந்தது. தன் கணவரோடு சேர்ந்து ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் முன்னேற்ற சங்கத்தில் உறுப்பினராக வேலைக்கு சேர்ந்தார். தன் கணவரின் உதவியோடு பாதியில் நின்ற தன் படிப்பைத் தொடரவும் செய்தார்.

நம் வாழ்வும் நம் செயல்பாடுகளும் நம் பணிகள் குறித்தான நினைவுகள் மற்றவர்களின் செயல்பாடுகளில் தொடர்ந்து வரும் என்று ரோசா முழுமனதோடு நம்பினார்.

சில வருடங்கள் உருண்டோடின அமெரிக்க வாழ் ஆப்பிரிக்கர்களுக்காக பல திட்டங்களில் கலந்து கொண்டார் ரோசா பார்க்ஸ்..

1943 இல் கடுமையான மழை காலத்தில் தனது வேலை முடிந்து பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்த ரோசா பாக்ஸ், மோசமான சம்பவம் ஒன்றுக்கு ஆளானார். அன்று தான் அவர் நிற பாகுபாட்டின் மோசமான பிடியில் சிக்கினார்.

சுயமரியாதையும் , மனித உரிமையும் கேள்விக்குறியான (?) நாளாக, அந்த நாள் அவருக்கு அமைந்தது.

ரோசா பயணித்த பேருந்தில் அமெரிக்கர்களின் கூட்டம் அதிகமாகவே , ஓட்டுனர் ஜேம்ஸ் ரோசாவை இருக்கையை விட்டு நகர்ந்து பின்பக்கம் செல்ல பணித்தார். என்ன செய்வதென்று தடுமாறிய ரோசா சற்று முன் பக்கமாகவே நகர்ந்தார். அந்த பேருந்து ஓட்டுநர் ஒரு அமெரிக்கர் (வெள்ளையர்) . அவருக்கு ஒரு ஆப்பிரிக்கர், தான் சொல்வதைக் கேட்கவில்லை என்று கடுமையான கோபம் வந்தது. பேருந்தை நிறுத்தி ரோசாவை வழியிலேயே இறக்கி விட்டார். கொட்டும் மழையில் நனைந்தபடியே வீடு வந்து சேர்ந்தார். பின்னர் ஒரு நாள் இதே போல அமெரிக்கர் கூட்டம் அதிகமாக ஏற.. பேருந்தின் முன்பக்க வாசல் வழியாக கீழே இறங்கி பின்பக்க வாசல் வழியாக

செல்ல (பின் இருக்கைக்கு செல்ல) வலுக்கட்டாயமாக இறங்குமாறு பணித்தார் ஓட்டுனர்.

அவ்வாறே ரோசாவும் இறங்கிப் பின்பக்க வாசல் வழியாக ஏறுவதற்குள்ளேயே பேருந்தை வேகமாக இயக்கிக் கொண்டு புறப்பட்டார் ஓட்டுநர்.

இது போன்ற தொடர் சம்பவங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டார் ரோசா.

பல இயக்கங்களின் மூலம் பலதரப்பட்டப் போராட்டங்களில் தீவிரமாக பங்கேற்றார் ரோசா " அனைத்து மனிதர்களுக்கும் சம உரிமை வேண்டும் " என்பதே அவரது மூச்சாக இருந்தது.

ஆப்பிரிக்கர்களுக்கு எதிரான அநீதிகளுக்குப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே தான் இருந்தது. காலங்களும் உருண்டோடின .

மீண்டும் ஒருமுறை நிற ஒடுக்கு முறை ரோசாவை சீண்டிப் பார்த்தது. 1955 டிசம்பர் 1ஆம் தேதி மாலை வேளையில் வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

ரோசாவை அன்று கோபத்துடன் பேருந்தை விட்டுக் கீழே இறக்கிய அதே நடத்துனர் தான் இன்றும் பேருந்தை இயக்கிக் கொண்டிருந்தார்.

எதையும் கண்டுகொள்ளாததைப்போல பேருந்தில் ஏறி பயணச்சீட்டை வாங்கிக் கொண்டு இருக்கையில் அமர்ந்தார் . சில நிறுத்தங்களுக்குப் பிறகு நிறைய அமெரிக்கர்கள் பேருந்தில் ஏறினார்கள்.

ஓட்டுனர் அமெரிக்கர்களுக்கு இருக்கையை விட்டு தரும் படி கேட்க அங்கு அமர்ந்திருந்த மூன்று ஆப்பிரிக்கர்கள் உடனே இடத்தை அவர்களுக்கு விட்டுக் கொடுத்து நகர்ந்தார்கள்.

இவர்கள் மூவரையும் பார்த்த ஓட்டுநர் திரும்பி ரோசாவை பார்த்தார், ரோசா பார்க்ஸ் ஜன்னலோரம் நகர்ந்து அமர்ந்தார். கோபம் தலைக்கு ஏறிய ஓட்டுனர் இருக்கையை விட்டு எழாவிட்டால் வண்டியை எடுக்கப் போவதில்லை எனக் கத்தினார். சற்றும் தளராத ரோசா பார்க்ஸ், " இந்த சீட்டுக்கு நான் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி இருக்கிறேன். எதற்காக நான் எழ வேண்டும்? என்று பதிலளித்தார். ஓட்டுநர் பேருந்தை இயக்க முடியாது என்று கூறிவிட்டு காவலர்களை அழைத்தார் . ரோசா பாக்ஸ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த செய்தி பத்திரிகைகளில் பரவியது. ரோசா பார்க்ஸின் துணிச்சல் சக ஆப்பிரிக்கர்கள் மனதில் எழுச்சி கொள்ளச் செய்தது.

பெயிலில் வெளியே வந்த ரோசா பாக்ஸ் , " என் கைது காரணமாக பலரும் பலதரப்பட்ட கருத்துக்களை முன் வைத்திருக்கின்றனர் ஆனால் எல்லோரும் சொல்வது போல நான் வயதானவள் அல்ல.... எனக்கு 42 வயது தான் ஆகிறது... நான் நோய்வாய்ப்படவும் இல்லை... எனக்கு மயக்கமோ வேலை களைப்போ இல்லை... ஆனாலும் நான் எழுந்து இருக்கையை விட்டுக் கொடுக்காததற்கு காரணம் , விட்டுக்கொடுத்து விட்டுக் கொடுத்து களைப்படைந்தது தான்" என்று ஆப்பிரிக்கர்களின் வலி நிறைந்த வாழ்க்கையை வார்த்தைகளால் சொன்னார்.

ரோசா வசித்த அலபாமா மாகாணத்தில் வாழ்ந்த அனைத்து ஆப்பிரிக்கர்களும் ஒன்று திரண்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இனி பேருந்துகளில் சம உரிமை வேண்டும் என்ற நிலைப்பாட்டினைப் போராட்டமாக நடத்துவது என முடிவெடுத்தனர். அமெரிக்காவின் பல மாகாணங்களில் இந்தச் செய்தி பரவியது ஆப்பிரிக்கார்களின் மத்தியில் ஒரு ஐக்கானாக பார்க்கப்பட்டார் ரோசா ..

போராட்டம் தீவிரமடைந்து பேருந்துகளையே புறக்கணிக்க தீர்மானித்தனர் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன . டாக்ஸி உபயோகிக்க பணம் இல்லாதவர்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். பலர் கால் நடையாகவேச் சென்று வந்தனர்

குழந்தைகள் பலரும் பேருந்துப் பயன்படுத்தாததால் பள்ளிக்கு செல்லவில்லை இருப்பினும் நிற பாகுபாட்டின் இந்த மனித உரிமையற்றச் செயலை கண்டித்துப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

இந்தப் போராட்டத்தில் தங்களது உரிமைகளையும் மீட்டு விட வேண்டும் என்று எண்ணம் உருவானது இளைஞர்கள் வயதானவர்கள் குழந்தைகள் கர்ப்பிணிகள் என அனைத்து அமெரிக்க வாழ் ஆப்பிரிக்கர்களும் இந்தப் போராட்டத்தை நடத்தினர் .

மாதக்கணக்கான இந்தப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட தங்கள் இனம் தலைநிமிர வேண்டும் என்பதால் எத்தனையோ இன்னல்களை அமெரிக்க வாழ் ஆப்பிரிக்கர்கள் பொறுத்துக் கொண்டார்கள். ரோசா பார்க்ஸ்க்கு சரியான நியாயம் வழங்க வேண்டும் என்று அமெரிக்க வாழ் போராளிகளை ஒன்று சேர்த்தார் மார்டின் லூதர் கிங்.

ரோசா கைதானதைத் தொடர்ந்து குடிமக்கள் உரிமை இயக்கத்தின் சின்னமாகப் போற்றப்பட்டார்.

கைதானதில் எதிரொலியாக இவரது வேலை பறிப்போனது. சில வெள்ளை நிற அமெரிக்கர்களால் அவர் மிக மோசமாக மிரட்டப்பட்டார். நீதிமன்றம் ரோசா செய்தது தவறு என்று தீர்ப்பு எழுதியது. அபராதமும் விதிக்கப்பட்டது ஆனாலும் போராட்டங்கள் கைவிடப்படவில்லை.

மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு மேல்முறையீடு செய்யப்பட்டது.

போராட்டங்கள் தொடர்ந்து நடைப்பெற்று வந்ததால் பேருந்துகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்ததால் அரசுக்கு வருமானம் குறைந்தது. பேருந்துகள் காலியாகவே சென்றன.

1956 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் தேதி ரோசா பார்க்ஸுக்கு வழங்கப்பட்ட தண்டனை தவறானது என்று தீர்ப்பு வந்தது. பேருந்துகளில் இனி நிற வேறுபாடு சட்டம் செல்லாது என அறிவித்தது அமெரிக்க அரசு.

கடுமையானப் பேருந்துகள் புறக்கணிப்பு போராட்டத்திற்குப் பிறகு நிறவேறுபாடுச் சட்டத்தினை ரத்து செய்தது அமெரிக்க அரசு. ஒரு வருடத்திற்கும் மேலான இந்த அமைதி போராட்டம் முடிவுக்கு வந்தது இது போன்ற ஒரு போராட்டத்தை இனி வரலாற்றில் காண்பது அத்தனை எளிதானதல்ல.

ரோசா பாக்ஸ் ஆப்பிரிக்கர்களின் மத்தியில் புகழின் உச்சிக்கும் அளவில்லா அன்பிற்கு அடையாளமானார்.

அரசின் சட்டத் திருத்தத்திற்குப் பிறகு ரோசாவுக்கு தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வந்தன.

ஆப்பிரிக்க போராளிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மிரட்டல்கள் வந்தன. அவர்களது வீடுகளும் தாக்கப்பட்டன. டெட்ராய்ட்டில் உள்ள ஆப்பிரிக்க அரசு அதிகாரியிடம் பணி புரியும் வாய்ப்பு கிடைத்தது.

ரோசாவும் அவரது கணவரும் டெட்ராய்டுக்கு குடி பெயர்ந்தனர். ஏழ்மையின் பிடியில் இருந்தாலும் வருமானத்தை ஆப்பிரிக்கர்களின் நலனுக்காகவே செலவிட்டார். பெண்களின் மனதிடத்திற்கு சான்றாகவும், ரோசாவின் தைரியத்தைச் சோதனைக்கு உள்ளாக்கிய பல அசம்பாவிதங்கள் அறங்கேறின. இவர் குடும்பத்தில் கணவர் தாய் என அடுத்தடுத்து பலரும் கேன்சருக்கு நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பல இழப்புகளைச் சந்தித்தார்.

பல இன்னல்களுக்கு மத்தியிலும் சோர்ந்துப் போகவில்லை, " ரேமண்ட் ரோசா பாக்ர்ஸ் இன்ஸ்டியூட்டை" ஆரம்பித்தார். பெண்ணுரிமை, சம உரிமை, விடுதலை குடியுரிமை சட்டங்கள் போன்றவற்றையும் சுய முன்னேற்றத்தையும் இந்த அமைப்பு மூலம் பல ஆப்பிரிக்கர்களுக்கு வலியுறுத்தினார். "மை ஸ்டோரி'' என்ற தன் சுயசரிதை நூலையும் வெளியிட்டார்.

தன் வாழ்நாள் முழுக்க அமெரிக்க வாழ் ஆப்பிரிக்கர்களுக்காக முன்னேற்றத்தையும் வீரிய மனித உரிமை செயல்பாடுகளையும் தொடர்ந்து செய்து வந்த ரோசா 2005 ஆம் ஆண்டு 98 வயதில் இயற்கை எய்தினார். வாஷிங்டனில் உள்ள அரசாங்கமாளிக்கையில் இவரது உடல் இரண்டு நாட்கள் வைக்கப்பட்டு அரசு மரியாதை அளிக்கப்பட்டது..

இவரது இறுதிச் சடங்கின்போது டெட்ராய்ட்டு, மாண்ட்கோமெரி நகர அரசுகள் மரியாதை செலுத்தின. எந்த நகரப் பேருந்தில் ரோசா பார்க்ஸ் பாதியில் இறக்கி விடப்பட்டாரோ அதே நகர அரசு தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் தொங்கவிட்டது. அரசு அதிகாரியாக இல்லாதவர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது குறைவு. அமெரிக்காவில் இப்படி மரியாதை அளிக்கப்பட்ட முதல் பெண் இவரே.

ரோசா பாக்ர்ஸ் இன்று குடியுரிமை சட்டங்களின் தாய் என்று போற்றப்படுகிறார்

தி லிகசி ஆஃப் ரோசா பார்க்ஸ்'' என்ற ஆவணத் திரைப்படம், அவரது வாழ்வின் இன்னல்களை மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றது.

''விடுதலை போரின் தாய்'' என அழைக்கப்படும் ரோசா பார்க்ஸ் எழ மறுத்ததால் தான் இன்று நாங்கள் தலைநிமிர்ந்து நிற்கவும் தன்மானத்தோடு நடக்கவும் முடிகிறது!'' என அவரின் மரணத்தின் பொழுது கண்ணீரோடு அவரை வழியனுப்பினர் ஆபிரிக்க கருப்பின பெண்கள்.

ரோசா பாக்ஸ் மில்லியன் கணக்கான ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் வாழ்க்கையையும் வரலாற்றையும் மாற்றியமைத்து விட்டார். அன்று மட்டும் அவர் அந்த பேருந்து இருக்கையில் இருந்து எழுந்திருந்தால் இன்று வெள்ளை மாளிகையில் ஒரு ஆப்பிரிக்க அமெரிக்கர் அதிபராக அமர்ந்திருக்க முடியாது.

சாவி கொடுக்கப்படும் பொம்மை தானே பெண்

மொ.பெ கவிதை - தமிழில் அதிரன்

பதினேழு வயதின் வாசலில்
ஈரக் கனவுகளை
தெற்குப்புறம் ஒதுங்கி நின்ற அறையின் கொடியில்
காயப் போட்டுவிட்டு
அதைத் துரத்திச் சென்றாள்
குழந்தை தயாரிப்புக் கருவியாகவும்
சலவைக் கல்லாகவும் அம்மிக்கல்லாகவும்
இளமைக்காலம் அரைந்து தேய்ந்து
நடுவயதுக்கு வழிமாறியது
முதுமையின் பரிசாக வாய்த்ததோ
பூரணமான சேவகி பட்டம்
இன்னமும் சாவி கொடுத்து முடுக்க
யாருமில்லையென ஆன போது தான்
தானாக நடனமாடும் திறமை
தனக்கில்லையென அவள் தெரிந்து கொண்டாள்.

- மலையாள கவிஞர் பத்மதாஸ்

தமிழ்ப்புலவர்கள் கோட்டோவியம்

இங்கர்சால், நார்வே

வள்ளுவர் வள்ளலார் வட்டம்

https://commons.wikimedia.org/wiki/Category:Tamil_Iconography

தமிழ் உலகுக்கு வணக்கம்.

திருவள்ளுவர், ஔவையார் போன்ற சில புலவர்களுக்கு மட்டுமே, ஓவிய வடிவிலும் சிலை வடிவிலும் உருவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக அவை நம்மைப் பார்ப்பது போல இருப்பதில்லை. மற்ற புலவர்களின் ஓவியங்கள் நல்ல தரத்தில் கிடைப்பதில்லை. வள்ளுவருக்கு கொடுக்கப்பட்ட உருவம்போல இங்கு வேறு யாருக்கும் நிரந்தர உருவம் கொடுக்கப்படவில்லை. ஒரே புலவரின் ஓவியத்தை, வெவ்வேறு புலவர்களுக்குத் தேவை ஏற்பப் பயன்படுத்துகிறார்கள்.

இதனை உடைக்கும் முயற்சிகள் ஒன்பது தமிழ் புலவர்களின் ஓவியத்தை உருவாக்கியுள்ளேன். பொதுவகத்தில் இருக்கும் உருவங்களைப் பெரிதும் மாற்றாமல், அவற்றின் அடிப்படையில் இவற்றை உருவாக்கியுள்ளோம்.

இவைகள் அனைத்தும் விக்கிக் காமனில் CCo பொது உரிமையில் பதிவேற்றப்பட்டுள்ளது. உலகெங்கும் உள்ள உறவுகள் அதனைப் பதிவிறக்கம் செய்து. தங்கள் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளலாம், மாற்றிக் கொள்ளலாம்.

தொல்காப்பியர், 2. திருவள்ளுவர், 3. ஔவையார், 4. கணியன்பூங்குன்றனார், 5. காரைக்கால்அம்மையார், 6. இளங்கோவடிகள், 7. கபிலர், 8. கம்பர், 9. நக்கீரர்

இணைய விதிப்படி ஆடையின்றி ஓவியம் வரைய முடியாது என்பதன் அடிப்படையில் காரைக்கால் அம்மையாரின் ஓவியம்

ஆடையோடு உருவாக்கப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் இணையத்தில் பயன்படுத்த முடியாது. கம்பர் சைவர் என்று சிலரும் வைணவர் என்று சிலரும் உவச்சார் என்று சிலரும் கூறுகிறார்கள், இவை போன்ற மாற்றுப் பார்வை மாற்று கருத்தியல் உள்ளவர்கள் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஓவியங்களை மாற்றிக் கொள்ளுங்கள். இது ஒரு முதல் முயற்சியே. ஏற்கவும் தமிழ் உலகமும், நமது முன்னோர்களும், தமிழ் புலவர்களும், இதில் குறைகள் இருப்பின் அதனை மன்னித்து அருள் புரிவார்கள் என்று நம்புகிறேன்.

எஸ். புனிதா, அவர்களின் கவிதைகள்

வாசல் நிறைத்து
பாசத்தைப் படரவிட்டு
காணாது போகும்
பெருமழை
வேறென்ன
செய்து விட முடியும்?
சற்றே
வழுக்கலை விட!!

வறண்ட பாலையில்
கடந்த பயணத்தில்
தோற்றபிழையென
கண்ணில்
காட்சிபடும்
கானல்நீருக்கெல்லாம்
கடவுளின்சாயல்!

எஸ். புனிதா

ஏதோவொரு தவிப்பில்
ஏதோவொரு இழப்பில்
ஏதோவொரு சோர்வில்
தளர்வுறும்
போதெல்லாம்
என்
மனக்குருவியின்
மௌனத்தை
கலைத்து போடும
அச்சிறு குருவி
வெட்டப்பட்ட
தன் கூடமைந்த
மஞ்சணத்தி
மரத்தினை
தேடி
பரிதவிக்கையில்
என்ன சொல்லி
தேற்றுவது
இயலாமையால்
பரிதவிக்கும்
என் மனக்குருவி
மௌனக்குருவியாய்

சிறுகதை

அம்மாவின் காதல்

த. ஜான்சிபால்ராஜ்

திருநெல்வேலி. 7397156808

"டேய்...விக்கி.... நான் சொல்றது உண்மைடா".என்றான் தினேஷ்.

"இல்ல...இருக்கவே முடியாது. என் அம்மாவைப் பற்றி எனக்குத் தெரியும்.நீ பேசாமல் போய்டு"என்ற விக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"இரண்டுநாளுக்கு முன்னால கூட, உங்க அம்மாவை அவரோட சிவாஜிநகர் லைப்ரரில் பார்த்தேன். நான்தான் நீ வந்ததும், வராததுமா இதைக் கேள்விபட்டா வருத்த படுவேன்னு உங்கிட்ட சொல்லல.நீ லாஸ்ட் இயர் இங்க வந்துட்டுப் போன பிறகு இந்த நான்கைந்து மாதமா ஒவ்வொரு முறையும் உன்னோடு போனில் பேசும்போதெல்லாம் இதை உங்கிட்ட சொல்லணும் போலவே இருக்கும்.ஆனா.. ஏதோ ஒன்னு என்னைத் தடுத்திடும். நீ வந்த பிறகு சொல்லிக்கலாமுன்னு இருந்திடுவேன்"என்ற தினேஷ் சற்றுத் தயக்கத்தோடு விக்கியைப் பார்த்தான்.

"நோ..... ஐ கான்ட் பிலிவ்...!"என்றபடி மீண்டும் திரும்பி நின்று கொண்டான் விக்கி.எரிச்சலில் முகம் சுருங்கியிருந்தது.

"சரி சரி,விடு. நீயே தெரிஞ்சுக்குவ.
இப்ப நான் போறேன்டா. லதா ஒரே ஃபோனா அடிக்கிறா..

இன்னும் லேட்டானா கொன்னுடுவா.பட்... யூ பி ஹப்பி..ஓகே? தோளைத் தட்டியபடி வண்டியில் ஏறிக் கிளம்பினான் தினேஷ்...அது மெல்ல நகர்ந்தது.

நின்று கொண்டிருந்த அந்தப் பூங்காவில் எங்கோ ஒரு திசையில் எந்த உணர்வுமின்றிப் பார்வையை வெறுமையாய்ச் செலுத்தினான்,விக்கி.

சில வினாடிகளில் அவனது நெற்றியைச் சுருக்கி நிலைக்குத்தி நிற்க வைத்தன அவனது கண்கள்.உதடுகள் தானாய் பிளந்து கொண்டன...!

தொலைவில் தெரிந்த அந்தச் சிமெண்ட் இருக்கையில் அவர்கள் இருவரும் ஓரடி இடைவெளியில் அமர்ந்திருந்தனர்.தினேஷ் சொன்ன அத்தனை அடையாளங்களும் அப்படியே இருந்தது அந்த மனிதருக்கு..!
ஆனால் அவன் சொன்னபோது மனத்தில் படிந்த அந்தக் கற்பனை உருவத்தைவிட அதிகமாகவே அழகு அவரது நிஜ தோற்றத்தில் தொற்றிக்கொண்டிருந்ததாய் உணர்ந்தான்.

"அதுசரி, என் அம்மாவா அவர் அருகில் இருப்பது!?" புதிதாகப் பார்ப்பதைப் போல் அவளைப் பார்த்தான். ஐம்பத்தைந்தைத் தாண்டியவள் என்று வேறு எவராலும் கூறிவிட முடியாது. எப்போதும் இருப்பதைவிட ஒருபடி அதிக வனப்பும் அமைதியும் அவள் முகத்தில் அப்போது தெரிந்தது அவனுக்கு.!

சற்று நகர்ந்து தன்னை அவர்கள் பார்த்துவிடக் கூடாதென்று அருகிலிருந்த பசுஞ்செடிகளின் மறைவில் நின்று கொண்டான்.

இப்போது அவர்கள் இருவரது உருவமும் தெளிவாகத் தெரிந்தது .அவர் ஏதோ பேசினார். அம்மா புன்னகைத் தவழ, அதற்குப் பதிலளித்துக் கொண்டிருந்தாள். அந்தப் புன்னகையில் அம்மாவின் இளம்பருவத்தின் சாயல் பளிச்சிட்டதைப் பார்த்தான்.

"இருவருமே ஒருவரையொருவர் முகம்பார்த்துப் பேசிக்கொண்டதைப் போல் தெரியவில்லை. பார்ப்பவர்கள் சந்தேகித்துவிடக் கூடாதென்ற அவர்களது முதிர்ந்த எண்ணங்களாக இருக்கலாம்" என்றது அவனது மனம்!

அம்மாவோடு இருந்த அந்த மனிதர் நல்ல அடர்ந்த கருப்பு. தலைமுடி இன்னும் அடர்த்திக் குறையாமல் முக்கால்வாசி வெள்ளையாய் காற்றில் மெல்ல அவ்வப்போது அசைந்தபடி இருந்தது.இடதுபுறம் உச்சி வகுந்து நேர்த்தியாய்ச் சீவியிருந்தார்.

வயது அறுபதை தாண்டியிருக்கும் அவருக்கு.அந்த இருக்கையில் இரண்டு பக்கமும் கைகளை ஊன்றியபடி நிமிர்ந்து அமர்ந்திருந்தார்.பேசும் போதெல்லாம் அடிக்கடித் தலையைக் கீழே கவிழ்த்துத் தரையைப் பார்த்துக் கொண்டார்.

தொலைவிலிருந்து பார்க்கும்போதும் அவரது பற்களின் வெண்மையை மட்டும் முகத்தில் மிகத்தெளிவாகப் பார்க்க முடிந்தது. நல்ல உயரம் , அளவான பருமன். மீசைமுடிகளும் தலைமுடிகளோடு போட்டியிட்டு நரைத்து விறைத்து நின்றன.ஆனாலும் ஒருவிதமான அழகிய ஆளுமை அவரது உடல்மொழியில் தெரிந்தது. அம்மாவை இதுதான் கவர்ந்து விட்டதோ...!?

சேச்சே... இருக்காது நல்ல நண்பர்களாக இருக்கலாம்.

ஏற்கமறுத்த அவனது ஆழ்மனம் பெருமூச்சொன்றை வேகமாய் வெளியேற்றியது.

அப்பா திடீரென இறக்கும் போது, எனக்குப் பதிமூன்று வயது. எனக்குத் தெரிந்து அம்மாவை மறுமணம் செய்ய விரும்பியவர்கள் நான்கைந்துபேர் இருந்தனர். அப்போதெல்லாம் 'இனி எனக்கு எதுவும் தேவையில்லை. என் மகனுக்காக மட்டுமே வாழ விரும்புகிறேன்' என்ற பதிலையே எனது மாமன்மார்களிடம் கூறி திருமணத்தை நிராகரித்தவள்.

பிறகு இந்த வயதிலேயா....

இப்படி?! நம்ப முடியாமல் குழம்பினான்.

சிந்தனையை உதறிவிட்டு மீண்டும் அவர்களைத் தேடினான்...

இருவரும் எழுந்து விட்டனர்.

அம்மா முன்னால் நடக்க, பின் தொடர்ந்தார் அவர்.இருவரும் பூங்காவின் வெளிவாசலுக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டே செல்வதும் தெரிந்தது.

நடையிலும்,பேச்சிலும் நிதானம்.மிக மெதுவாக நடந்து கொண்டிருந்தனர். பிரிவு யாருக்குத்தான் பிடிக்கும்? அந்நிலையிலும் அவனது ஆரம்பக் காலக் காதல் நினவுகள் வந்து போனது அவனுக்குள்.!

இருந்தாலும் .... அவனால் அம்மாவின் இந்த மாற்றத்தை சீரணிக்கவே முடியவில்லை .

அவர்கள் அமர்ந்திருந்த அதே இருக்கையருகில் வந்து பூங்காவின் வெளியே அவர்கள் வெளியே செல்லும்வரை உன்னித்துக் கவனித்தான். அவர் வாசலருகே வந்த ஆட்டோவைக் கையசைத்து நிறுத்துவது தெரிந்தது. அம்மா ஒருமுறை அவரைப் பார்த்துவிட்டு உள்ளே ஏறினாள். அவர் சற்றுக் குனிந்துக் கையசைத்து அனுப்பி வைத்தார். ஆட்டோ மறையும்வரை நின்று பார்த்த அவர்...பின்னர் சாலையைக் கடந்து தனது வண்டி நின்ற பக்கமாக நடந்து சென்று ஏறுவதையும் கவனித்தான்.

வெறுமையைச் சுமந்து விரிந்து கிடந்த அந்தச் சிமெண்ட் இருக்கையை மீண்டும் ஒருமுறை திரும்பி பார்த்தவன்... மெளனமாகத் தனது வண்டியை நோக்கி நடந்தான்.இதயம் ஏனோ படபடத்து அமைதியடைய மறுத்துத் துடித்துக்கொண்டிருந்தது.

அப்போது

சட்டைப்பையில் அலைப்பேசி சிணுங்கியது. எடுத்துப் பார்த்தான், மனைவி லினோலியா.பதிலளிக்க விரும்பமின்றி அதை அணைத்து வைத்தான்.

விக்கி மனைவி குழந்தைகளோடு அமெரிக்காவில் குடும்பமாக வாழ்கின்றனர்.ஆண்டிற்கு ஒருமுறை இந்தியாவிற்கு வந்து அம்மாவோடு இருந்துவிட்டு செல்வது வழக்கம் . ஆனால் இந்தமுறை இவன் மட்டும்தான் வரவேண்டிய கட்டாயச் சூழலாகி விட்டது.

எந்தக் கவனமும் செலுத்தப்படாமலே அவனின் உடல் வண்டியை இயக்கி பதினைந்தே நிமிடத்தில் வீட்டில் கொண்டுவந்து நிறுத்தியது.
வீட்டு வாசலில் ஒரு பைக் நின்றிருந்தது .கதவு திறந்திருந்தது. குழம்பிய பார்வையோடு உள்ளே சென்றவன். ஹாலில் இருந்த சோபாவில் அதே நபர் ஒய்யாரமாய் அமர்ந்திருந்தார். தூக்கிவாரிப் போட்டது விக்கிக்கு. படபடத்த இதயத்தை வெளிக்காட்டாமல் ...அவரை ஏறிட்டுப்பார்த்தான். அதற்குள் அம்மா காப்பி டம்ளரோடு...

"இப்ப வந்திடுவான்"
என்றவாறே கிச்சனிலிருந்து வந்தாள்.

விக்கியைப் பார்த்தவள்..."விக்கி உனக்காகத் தான் காத்திருக்கிறோம்" என்று அவளே முந்தி கொண்டு ....

"இவர் ஜெயசேகர்",என்றாள்.

அவன் அவரை அப்போதுதான் பார்ப்பதைப் போல்..ஹலோ என்று கைநீட்டினான். குதூகலப் புன்னகையோடு எழுந்து நின்று கைக்குலுக்கினார்...அவர்.

"விக்கி உங்களை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன்"என்றார்.
புன்னகைத் தவழ..!

"என்னையா...!?"

"ம்....ஆமா.
மொபைலில் தான்... போட்டோஸ்"என்றார் சுருக்கமான பதிலில்.

"ஓ".....சிரித்துக் கொண்டான் லேசாக...விக்கி.

"உட்கார்...விக்கி" என்றவள் இருவரின் அருகிலும் அமராமல் தனியாக மற்றொரு சோபாவில் சென்று அமர்ந்தாள்.

அவர் , "தம்பி...!"என்றவர் சற்று குரல் மாற அதை மறைக்கமுயன்றார்.
"சொல்லுங்க சார்" என்றான்...அவரை ஏறிட்டுப் பார்த்தவாறே.

"நாங்க இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம்; சேர்ந்துவாழ விரும்புகிறோம்". என்ற ஜெயசேகர்,அம்மாவைப் பார்த்தார்.

அவளும் ஆமோதிப்பதைப் போல.. எந்தவிதச் சலனமும் காட்டாமல் லேசானப் புன்னகையோடு விக்கியைப் பார்த்தாள்.
அந்தப் பார்வையில்... 'நீ அதைச் சந்தோசமாக ஏற்றுக் கொள்வாய் என்று அறிவேன்' என்ற நம்பிக்கை வேறூன்றி இருந்தது.

அவர் மேலும் தொடர்ந்தார்."ஒரு இரண்டு ஆண்டுகளாக நாங்க நண்பர்களாகப் பழகினோம். இப்போது ஒரு ஆறுமாதமாகத்தான்
இந்த முடிவிற்கு வந்தோம்" என்றதில் தெளிவும் உறுதியும் மிளிர்ந்து நின்றன.

"ஆமாம்" என்றாள் அம்மா.

அவர் தொடர்ந்து "என் மனைவி ஐந்து வருடங்களுக்கு முன்பு கேன்சரில் இறந்திட்டா" என்று கூறிக் கொண்டிருக்க...

எதையோ எண்ணி பதிலேதும் பேசாமல் வினாடி நேரத்தில் இருவரையும் ஒருமுறை பார்த்தவன்... சட்டெனத் தரையைப் பார்த்தபடி குனிந்து

அமர்ந்திருந்தான்.
அதுவரை அவனுக்குள் இருந்த அம்மா என்ற அந்த மொத்த ஆளுமையின் சாரமும் ஏதோ ஒன்றால் திரிந்து நின்றதைப்போன்று உணர்ந்தான்.

"விக்கி... என்னாச்சுடா?" அருகில் வந்து அமர்ந்து, அவன் கையைப் பிடித்தவளின் குரலில் லேசான தடுமாற்றம்.
"நிமிர்ந்து அம்மாவைப் பார்ரா... நீ இதை ஏற்றுக்குவன்னுதான் நான் நினைச்சிட்டேன்.இதில் உனக்கு விருப்பம் இல்லைன்னா நாங்க நண்பர்களாகவே இருக்கோம். உன் விருப்பம் இல்லாம நான் எதையும் செய்ய மாட்டேன்.ஏய் விக்கி, இங்க அம்மாவ பாரு.. பாரு ...பேசு... என்றாள் அவனது தலைமுடியை வருடியபடி" அவள் குரலில் வலியும் வேதனையும் தொனித்தன.

அவன் இதயம் கனத்துச் சோகம் மேலிட...முகம் விரக்தியில் தொங்குவதை மட்டும் உணர்ந்து கொண்டாள்.

"விக்கி...நீ நினைப்பது எனக்குப் புரியுதுடா...இந்த ஊரு..உலகம் என்ன நெனைக்குமுன்னுதானே...? நீ என்னோடு எனக்கென்று இருக்கும்வரை எதுவும் தெரியல.நீ அமெரிக்காபோன
பிறகு முழுசா வாசிப்பு, கற்பனை, எழுத்துன்னு நேரத்தைப் போக்கினேன்.எதேச்சையாய் நம்ம ஊர் லைப்ரரியில் எங்களுக்குள் ஏற்பட்ட இந்த நட்பு பிறகு அன்புத் தேடலாக மாறிடிச்சு.
ஆனா...ஏன்னே தெரியலடா இவரது மீதான நட்பை முழுமையாக எனக்கானதாக்க நான் நினைத்தது தவறுன்னு உனக்குத் தோணுச்சுன்னா... நான் நிச்சயமா என் முடிவை மாத்திக்கிறேன்"
ஓரிரு வினாடிகள் இடைவெளியில் "ஆனா...ஆனா..விக்கி"என்று எதையோ சொல்ல வந்த அவளது மெல்லிய குரலைத் துக்கம் அடைத்தது.

*நாங்க நட்பாகவும் இருக்கக் கூடாதுன்னு மட்டும் நினைச்சுடாதேடா.அம்மாவுக்கு இனி அது கஸ்டம்பா..."

என்றவள், துக்கம் நிறைந்த விழிகளோடு ஜெயசேகரை பார்த்தாள்.
வேகவேகமாக வடிந்தோட ததும்பிய கண்ணீரை அவசர அவசரமாய் விழுங்க முயன்றும் தோற்றுக்கொண்டிருந்தது அவரது கண்கள்.!

"அ...அ...அதெல்லாம் இல்லமா...நான் ...நீங்க..."
என்று வார்த்தைகள் பொருளின்றிப் புலம்ப... நிமிர்ந்து அமர்ந்தபடி அவளது முகத்தை உற்றுப் பார்த்தான் விக்கி.
சற்று நேரத்திற்கு முன்பிருந்த அவளது முகக்களை அடியோடு பொலிவிழந்து போயிருந்தது. அதிலிருந்த நம்பிக்கை வேர்கள் நலிவடைந்து அவனிடம் மன்னிப்புக் கோரிநின்றன. வேதனையில் வெளியேறிய சுவாசம் வழிமாறி அவள் வாய்வழியே வெளியேறிக் கொண்டிருந்தது.

எனக்காகவே வாழ்ந்தவள். எங்கோ பிறந்து வளர்ந்த ஒருத்தியைக் காட்டி... 'இவளை தான் விரும்புகிறேன்' என்று நான் சொன்னதும்.. எதுவும் கேட்காமல் திருமணத்தை முடித்து வைத்து பார்த்துப் பார்த்து இரசித்தவள்.அவன் நினைவுகள் அவனைமீறி எங்கெங்கோ சென்று எதையெதையோ நினைத்து நினைத்துத் திரும்பியது.
"என் மகிழ்ச்சியையே
தன் வாழ்க்கையாக நினைத்து வாழ்ந்த உனது இந்த மகிழ்ச்சியை நான் அழிக்க மாட்டேன்மா" ,என்று மனத்திற்குள்
சொல்லிக்கொண்டான்...ஒரு முடிவுக்கு வந்தான்..அதை சொல்ல வாயெடுத்தவன்,
"அம்மா..."என்றதோடு அவளது தோளில் முகத்தைப் புதைத்து விம்மினான். அவனைத் தேற்றியபடி...கண்ணீர் மல்க ஜெயசேகரையும் விழிகளால் ஆற்றுப்படுத்தினாள்.

அவனது அலைப்பேசி மீண்டும் அழைக்க ,எடுத்துப் பார்த்தான்...தினேஷ்! அவன்முகம் லேசாக வெளிரியது.அணைத்து வைத்தான்.

"அழாதம்மா... எனக்குப் புரியுது"..என்றவன் அவளது முகத்தில் வடிந்திருந்த ஈரத்தைத் துடைத்தான்.மீண்டும் அலைபேசி அழைக்க.... இந்தமுறை அதை எடுத்துக் காதில் வைத்தான்.

" தினேஷ்..."

"சொல்லுடா விக்கி, வீட்டுக்குப் போய்ட்டியா, இன்னும் பார்க்கிலேயே தான் நிற்கியா?"
"வீட்டுக்கு வந்துட்டேன்டா, உங்கிட்ட ஒன்னு பேசணும் வீட்டுக்கு வாயேன்"

"என்ன பேசனும்டா...அவசரமா, நாளைக்கு வாறேனே...?"

"இல்ல, உடனே வா, முக்கியமான விசயம் உடனே பேசணும்"

"என்ன விசயமுன்னு சொல்லுடா"

*கல்யாண விசயமா தான் தினேஷ்"

"என்னது கல்யாணமா, யாருக்குடா விக்கி!?"

"என் அம்மாவுக்குதான்டா"

என்றவன் புன்முறுவலோடு சட்டென அதை அணைத்து வைத்தான்.அவனது முகத்தில்
அடர்ந்திருந்த அதிர்ப்தியின் கீறல்கள் அகன்று கொண்டிருந்தன.விக்கியின் அந்தப் பதிலில் இருவரும் ஸ்தம்பித்து நிற்க..விக்கி எழுந்தான், எழுந்து ஜெயசேகர் அமர்ந்திருந்த இருக்கையருகில் சென்று தனது கையை நீட்டினான், அவர் எழுந்து நின்று அவனையும் அவளையும் ஒருமுறை பார்த்துவிட்டு, அவனது முகத்தில் மிகுந்திருந்த முழு மகிழ்ச்சியின் நிறைவை பார்த்தபடி....சொல்வதறியாமல் கைக்கூப்பினார்....அவன் நெருங்கிச் சென்று அவரது தோளை வருட...இருவரும் அணைத்துக் கொண்டானர்.

அந்த அணைப்பில் இதுவரை அனுபவியாத அன்பின் ஸ்பரிசம்..!

மறந்தேபோன தன் தகப்பனின் அரவணைப்பும், கண்ணியமும்... அமைதியடையச் செய்து கொண்டிருக்க...

கண்ணீரைத் துடைத்தபடி அதீத மகிழ்வோடு இருவரையும் பார்த்துக் கொண்டே எழுந்து நின்றிருந்தாள்.....

அம்மா...!!

- தளம் காலாண்டிதழ்

முட்டித் தழுவும் இளவேனில் – முத்தமிழ் விரும்பி

வெண் தோள் தொட்டு
விளையாடும்
நெளி பனைக்கூந்தல்
மலர் மணம்
நாகப் படமேத்தாட
மகுடியான
எனதிரு கண்கள்

நீயும் நோக்க
யாழ் வண்டுகள்
விழும் பாதவிரல்
தொட்டு நாகப் பூவில்
முட்டித் தழுவும் இளவேனில்
சிறு பொழுதொன்றில்
பல்கதிர் விரியும்
பார்வைகளின் புள்ளி
இணையம்

கொடியின் கசப்பூறி
கொழுங்காந்தள் கரமிணைய

தார்ச்சாலை இளகி
அருவியென்று
வீழ் பறவை

இருமேனிச் சிறையில்
மாயம்

புனலாடு
வெண்சிறகெடுத்து
மாமழை வீழ் பறவை
சமவெளியில் தந்தி தாவி ஓடும்.

புதையல் (நாவல்)

கவிஞர் மாலதி இராமலிங்கம்
புதுச்சேரி

கதை சொல்லுதல் என்பது ஒரு கலை. அதனைக் கேட்டு இரசித்தலும் ஒரு கலையே! நம் வாழ்வியலில் கதையென்பது பிரிக்கவியலா ஒன்றாகும். மூத்தோர்கள், இளையோர்களுக்கு இடையே உள்ள உறவெனும் ஊஞ்சலில் கதைக்கண்ணிகளும் உண்டு. ஆனால், தற்போதையக் காலத்தில் அவ்வாறானப் பிணைப்பு குறைந்துள்ளது. இதுபோன்ற நிலையில், சிறார்களுக்கானப் படைப்பாக, நாவல் எழுதுவதற்கு, 12ஆம் வகுப்பு மாணவி நா. திவ்யா முனைந்திருப்பது மனமகிழ்வை அளிக்கிறது. நாமக்கல், குமாரபாளையம், அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஒரு 15 வயது கொண்ட படைப்பாளர் உருவாகியுள்ளார். முதற்கண் அந்தப் படைப்பாளருக்கு வாசகர்களின் சார்பாக நல்வாழ்த்துகள்!

“புதையல்” எனும் இந்நூலின், முன் அட்டையில், வண்ணங்களுடனான ஓவியம், சிறார்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. அதுவும், ஓவியங்களையும் தானே வரைந்து, "புதையல்" எனும் நாவலுக்குக் கூடுதல் கவனத்தைக் கொடுத்துள்ளார் செல்வி நா. திவ்யா. குறிப்பாக, ஓவியங்களின் வழி வெளியாகும் முகத்தோற்றங்களை, முடிந்த வரையில் ஒவ்வொரு அத்தியாயத்திலும், தொடர்புபடுத்தி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். பின் அட்டையில், இந்த இளம் படைப்பாளர், தனக்குக் கதை எழுதத் தூண்டிய அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார். முதலாவதாக, அவரின் கவனித்துக் கேட்கும் திறன் முதற்புள்ளி ஆகியுள்ளது. அடுத்து, பெற்றோர்கள் பிள்ளையிடத்தே காட்டிய கவனம், எழுத்துகளின் வழியே பயணிக்க, வழிகாட்டி ஆனது. “வண்ணத்துப்பூச்சிகள்” நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்களின் கவனம்,

இதோ, எழுத்தாளராக, அதுவும், சிறார் இலக்கியத்திற்கான ஒரு படைப்பாளராக செல்வி நா. திவ்யாவை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர், நகைச்சுவைப் பேச்சாளர் திருமிகு திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களின் வாழ்த்துடனும் பாராட்டுடனும் இந்நூல் திகழ்கிறது. முதல் படைப்பிலேயே இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது கூடுதல் சிறப்பாகும்.

முதல் அத்தியாயத்தில், நட்பு பாராட்டும் நான்கு மாணவச் சிறுவர்களை அறிமுகம் செய்கிறார் நாவலாசிரியர் நா. திவ்யா. இவர்களுடன் ராமு என்ற நாயும் உண்டு. அது கபிலனின் சகோதரனாக வருகிறது. அஃறிணையிடத்தும் அன்பு செலுத்துதல் மனிதத்தில் மகத்தானது அன்றோ? பிள்ளைகளுடன் இந்த ராமுவிற்கும் முக்கியப் பங்கு, கதையில் உள்ளது. இன்னும் சொல்வதானால், கதையின் சுவாரசியம் ராமுவிடமிருந்தே தொடங்குகிறது.

இக்கதையில், முதல் ‘‘புதையல்’’ எனச் சொல்வதுபோல, ஒரு புத்தகம் கிடைக்கிறது. அந்தப் புத்தகத்தில் உள்ளவற்றை அறிந்துகொள்ள சபரியின் பாட்டி உதவுகிறார். மூத்தோரின் வாய்ச்சொல் முத்திற்கு ஒப்பன்றோ? ‘‘புதையல்’’ கதையில் சிறார்களுக்கான நற்பண்புகள் பற்றியக் குறிப்பு ஆங்காங்கே விரவியுள்ளன.

அத்தியாயம் இரண்டில், புத்தகம் காணாமல் போனது பற்றிச் சொல்வதானால் சபரியின் வருத்தம், முகிலன் மற்றும் நண்பர்களின் கோபம் என்று பரபரப்பானச் சூழல் நிலவுகிறது. தேடுதலுக்குப் பின், எதிர்பாரா விதமாக, சபரியின் தந்தையிடமிருந்து அப்புத்தகம் கிடைத்து விடுகிறது.

மூன்றாவது அத்தியாயத்தில், ஆவலுடன், ஐவரும் பயணத்தைத் தொடங்குகிறார்கள். வழிகாட்டியாக, புத்தகத்தில் உள்ள வரைபடம் இருக்கிறது. இங்குதான் வழியில் அவர்களுக்கு, பலாப்பழத்தில் தங்க நிறத்தில் சாவி கிடைக்கிறது. இவர்களின் அனுபவம் இவ்விதமாக இருக்கையில், வீட்டில் பிள்ளைகளைக் காணாது, பெற்றோர்கள் அவர்களைத் தேடத் தொடங்குகிறார்கள்.

ஆனால், நண்பர்கள் ஒரு அரண்மனைக்குள் சிக்கி விடுகிறார்கள். இங்கு, திருடர்களும் இருக்கிறார்கள். அங்கிருந்து சமாளித்து வெளிவருவதை, இந்த அத்தியாயத்தில், நகைச்சுவையாகக் கூறியுள்ளார் நாவல் ஆசிரியர் நா. திவ்யா. இதில் சிறுவர்கள் ‘‘கராத்தே’’ கற்றதின் பயனை உபயோகப்படுத்துவாகவும் கதையின் நிகழ்வு வருகிறது.

நான்காம் அத்தியாயத்தில் ஒரு குகைக்குள் ஐவரும் நுழைகிறார்கள். அங்கும் ஒரு எதிர்பாராத திருப்பம் நிகழ்கிறது. பலாப்பழத்தில் கிடைத்த சாவி இங்கு பயன்படுவதாக கதை அழகாக நகர்கிறது.

ஐந்தாவது அத்தியாயத்தில், சிறுவர்களின் பயணம் குகை மற்றும் அங்கிருக்கும் புலி என்று பரபரப்பாகச் செல்கிறது கதை. பெரியோர்களும் சிறார்களைத் தேடும் பணியில் மும்முரமாகின்றனர். இந்த அத்தியாயத்தில், வருகின்ற இயற்கைப் பிண்ணனி, நேரில் காண்பதுபோல் எழுத்துக்களால் வர்ணிக்கப்படுகிறது. செல்வி நா. திவ்யாவின், இயற்கையைக் குறித்த இப்பகுதியில், கதையினூடே நாமும் பயணிப்பது போன்ற அனுபவம் கிட்டும்.

இதுவரை, கடந்து வந்த பாதையும் மாறி இப்போது ஆறாம் அத்தியாயம் கடற்கரையில் சிறுவர்களை

ஆசுவாசப்படுத்துகிறது. ஒரு அழகானச் சிறுமி இங்கு நண்பர்களின் கைவினைத் திறமைகளை வெளிப்படுத்தும்படியான கதையின் தொடர்ச்சி செல்கிறது. பெரும்பாலும், நம் கதைகளில், ஒரு தேவதை, ஒரு நாயகன், ஒரு முதியோர் இப்படி என்று எந்தவிதத்திலாவது ஒரு உதவி செய்யும் கதாபாத்திரம் வரும். அதுபோல், இங்கு அச்சிறுமி தமிழினி எனும் பெயரில் வந்துவிடுவாள்.

ஏழாம் அத்தியாயத்தில், நண்பர்கள் படகில் ஏறுகிறார்கள். பயணத்தில், ஒரு தீவினைப் பார்க்கிறார்கள். இன்னோர்புறம், சிறுவர்களின் வேகத்தைப்போல் அவர்களின் பெற்றோர்களும் காவலர்களும் தேடுதலில் தொடர்ந்து செயல்படுகின்றார்கள்.

எட்டாவது அத்தியாயம், உண்மையானச் செல்வம் கல்வி என்பதை நிலைநிறுத்தி நிறைவாகிறது. சிறார்களின் கடல் கடந்து வந்த இந்தப் பயணத்தை, அனுபவத்தை, வாசகர்கள் படிக்கவேண்டும். அப்போது இன்னும் நிறைய விறுவிறுப்புடன் நண்பர்கள் ஐவரும் பெரும் ‘‘புதையல்’’ கண்டதை கதைவழியே காணலாம். உணரலாம்.

இவ்வாறாக, நாம் இந்தப் படைப்பில் கவனம் செலுத்தினால், இந்த இளம் படைப்பாளர், இன்னும், நிறைய படிப்பார்; எழுதுவார்! அத்துடன் மற்றோரையும் அவ்வண்ணமே செய்யத் தூண்டுவார் என்பதில் ஐயமேது? மீண்டும் இளம் படைப்பாளர், செல்வி நா. திவ்யா அவர்களுக்கு நல்வாழ்த்துகள்!

நிறைவாக, ‘‘வண்ணத்துப் பூச்சிகள்’’ நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்களுக்கு, நன்றிநிறை வணக்கங்கள்! அவர் வழியே, இந்நூலின் வாசிப்பனுவத்தைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி!

நூல் விபரம்

நூலின் பெயர்: புதையல் (நாவல்)
ஆசிரியர்: மாணவி நா. திவ்யா
பக்கங்கள்: 72
விலை: ரூ 70/-
பதிப்பு: வண்ணத்துப்பூச்சிகள் பதிப்பகம், சென்னை – 28.
அலைபேசி எண்.: *7010 30 9595 / 9382 301 898*

A POEM BY AGAR FATHIN

When you're wrong
But in this world,
Fear follows you along
Even if you are a woman
But the beauty of women
Defines overcoming that fear
I know it's onerous
But are difficulties new for us?
Never. So, just overcome it
When you got power in it.

If you wanna be an athlete, be it
If you wanna be a piolet, be it
If you wanna be a painter, be it
If you wanna be a dancer, be it
If you wanna be a teacher, be it

Being a woman should never put an end to what you wanna do and what you like
Who said that only home is the place of women
It's what we should decide
And I think your mind needs an aid.

We're born around negativities

Grown around controversies

Experienced around enemies

But also learned around despondencies.

So, if you can't appreciate us

Cease making fun

When we wanna run

Cease your dissensions

If you're not good at your intentions

Cease being lame

By degrading our fame.

The beautiful poetry I had ever heard is MOM.

And who is she?

A Woman.

So, if you're being a woman

The first thing you wanna be proud of is

that you're a woman.

And those men who respect women wholeheartedly,

You should be proud of what you're too.

சுருங்கிய மனம்

சசிகலா விஸ்வநாதன்

மீனலோசனி உதவி இயக்குநர் சகுந்தலாதேவியின் அறைக்குள் தயங்கியபடியே வந்தாள். " அம்மா! இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டும். தஞ்சாவூர் போய் என் பெற்றோரை பார்த்து வர வேண்டியுள்ளது" என்றவாறு விடுப்பு விண்ணப்பக் கடிதம் கொடுத்தாள்.

"சரி. தாராளமாக போய் வா. போன மாதம் தானே போய் வந்தாய்? அவர்கள் நலம்தானே என்று கேட்டார்.

"நலம்தான்... ஆனாலும் என் தந்தைக்கு கண் புரை சிகிச்சை செய்ய வேண்டும். என் அண்ணன் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறார். ஏதேதோ காரணம் சொல்கிறார். இன்னதென்று புரியவில்லை. என்னவென்று சொல்ல! இப்போது தந்தையின் ரத்த அழுத்தம் சர்க்கரையின் அளவு எல்லாம் சிகிச்சைக்கு ஏற்ற அளவில் உள்ளன. வியாபாரத்தில் பணம் புரளவில்லை. வருமான வரி நெருக்கடி வேறு. என் அண்ணன் பெண் வேறு "திடும்" என் வயசுக்கு வந்து விட்டாள். குடும்பத்தில் செலவு வரும் தானே. சமாளிக்கத் தானே வேண்டும். கையை பிசைந்து கொண்டு இருந்தால் என்ன நடக்கும்?" என்றாள் மீன் லோசனி. சகுந்தலா தேவி அவளிடம்" உனக்குத்தான் இன்று ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும், பண்டிகை கால முன்பணமும் இன்று வந்துள்ளதே. ஏன்; நீயே முன்வந்து கண் புரை அறுவை சிகிச்சை செய்து விடலாமே. தவறாக நினைக்காதே. ஏதோ நெடுநாள் பழகியதால் வாய் தவறி சொல்லிவிட்டேன்" என்றார்.

மீனலோசனியின் அகம் சுருங்கியது, அவள் முகம் காட்டியது." மேடம்! அப்படி எல்லாம் நான் எப்படி தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது; மேடம். என்னவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அவருக்குத் தெரியாமல் ஒரு ஐந்து

ரூபாய் கூட செலவழிக்க முடியாது.வீட்டில் பெரிய கலவரம் உண்டாகும். ஆகாயத்திற்கும் பூமிக்கும் குதிப்பார். எனக்கும் பண்டிகை செலவு இருக்கிறது. இந்தப் பணத்தை எதிர்பார்த்து பெண்ணுக்கு பொன்வளையலுக்கு முன்பணம் கொடுத்துள்ளேன். தாய் - தந்தையரை பார்க்கும் கடமை ஆண் பிள்ளைக்குத் தானே!" என்று சுலபமாகக் கூறி அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

அவருக்குத் தெரியாமல்தான் அலுவலகத்தில் ஐம்பதினாயிரம் ஏலச்சீட்டுக்கு பணம் கட்டி வருவதும், தவணையில் கோஆப்டெக்ஸில் பட்டுப்புடவை எடுத்ததும் சகுந்தலாதேவிக்குத் தெரியும். இவர் தானே பிணை கையெழுத்து போட்டு இருக்கிறார்! அதை இப்போது,எப்படி சொல்ல முடியும்? சண்டை இல்லாமலா குடும்பம் பண்ணமுடியும்? ஏதோ ஒரு சண்டை வரத்தானே வரும்! பத்தோடு பதினொன்று.. என்று நினைத்து தந்தைக்கு அறுவை சிகிச்சை செய்யலாம் தான்! பையனுக்கு மட்டும்தான் தாய்- தந்தையின் பொறுப்பா? பெண்ணுக்கு இல்லையா; அதுவும் சம்பாதிக்கும் பெண்ணுக்கு?" நினைப்பே மனதிற்கு வலியைக் தந்தது. பெண்கள் திருமணத்திற்குப் பிறகு எத்தனை சுயநலவாதி யாக மாறுகிறார்கள்! என்று மனதிற்குள் மறுகினார்; அந்த அலுவலர். குறுகிய எண்ணத்திற்கும், சுருங்கிய மனதிற்கும் அவரால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியாதே! பெருமூச்சுடன் லீவு விண்ணப்பத்தில் கையொப்பம் இட்டுவிட்டு; வேறு வேலைகளை பார்க்க ஆரம்பித்தார்; சகுந்தலா தேவி.

கோயில் தேவரடியார்களின் தொடர் போராட்டம்

முனைவர். எஸ். சாந்தினிபீ

மேனாள் வரலாற்று பேராசிரியர்
சென்னை

போராட்டம் இன்றைய வாழ்வியலில் மிகவும் பழகிய ஒன்றே. வேண்டும் என்றாலும் வேண்டாமென மறுக்கவும் போராட்டம் தேவைப்படுகிறது. அதுவே ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் புரியும் மொழியாகி இன்று பயனற்றதாகிவிட்டது. சுதந்திர போராட்ட காலத்தில் மகாத்மா காந்தி அரசியலில் நுழையும் தருவாயில் 1918-ல் அகமதாபாத், சம்ப்பாரன் போன்ற இடங்களில் ஆங்கில அரசை எதிர்த்து மக்கள் போராடிவந்தனர். காலனி ஆதிக்க அரசு கதிகலங்கிபோனது. அது அந்தக்காலம். இன்று டங்ஸ்டன் எதிர்ப்பு அலை தமிழகத்தில் நிலவி வருகிறது. நாளை மறந்தும் போகலாம்.

இதுவே உண்மை நிலவரமாயினும், தமிழக மக்கள் எல்லாவற்றுக்கும் போராடுகிறார்கள் என்ற பேச்சும் ஏச்சும் இந்திய அளவில் நிலவிவருதலையும் நாம் அறிவோம். ஆனால் இதற்கெல்லாம் ஒரு வரலாற்று காரணமிருப்பதை நம்மில் பலர் அறியவில்லை. அதைச் சொல்லவே இந்த அடிநாதம்.

இன்றைய உதவிக் கரம் 'கூகுளை' ஒருமுறை தொட்டுப் பார்த்தால் போராட்ட வரலாற்றில் உலகளவில் இந்தியாவின் பெயரோ தமிழர்களின் பெயரோ காணலை. வரலாற்றின் இந்த முக்கியப் பக்கங்களை அறிந்தும் பதிவிடாமல் பின்னர் 'வரலாற்றை மறைத்து விட்டர்கள் தமிழா, பொங்கி எழு' என புலம்பவும் வேண்டாமே தோழா!

பின்னோக்கி போகும் அரசியல் ட்ரெண்ட்டோடு நாமும் ஆறு நூற்றாண்டுகளைக் கடந்து விசயநகர மன்னர்கள் ஆட்சியின் துவக்கக் காலத்திற்கு செல்வோம். சென்னை திருவொற்றியூரில் உள்ள ஆதிபுரியீசுவரர் சிவன் கோயிலில் . 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு கோயில்

பணிப் பெண்களின் வேலைநிறுத்தம் குறித்து சொல்கிறது. காலகாலமாகச் செய்துவந்த பணி தாங்களே செய்ய வேண்டும் என்பதற்காக நடத்திய உரிமைப் போராட்டம் அது. கி.பி.1338 முதல் 1371 வரையிலும் இந்த கோயில் பெண்களின் பிரச்சனைகள் தீர்க்க இயலாமல் இழுத்தது. இப்போராட்டம் குறித்து மிக விரிவாக எனது 'கல்வெட்டில் தேவதாசி' எனும் நூலில் மிக விவாக சொல்லியுள்ளேன்.

மூன்று முறை பேச்சுவார்த்தை நடந்தது. 1338 ஆம் ஆண்டில் முதல் பேச்சுவார்த்தையில், சிதம்பரம், பிக்ஷ மடத்தின் தலைமை முதலி, இக்கோயிலின் மகேஸ்வரர்கள், அறக்கட்டளை நாட்டார் இப் பெண்கள் மற்றும் பலர் என அனைவரும் முதலியின் தலைமையில் கூடினர். திருவொற்றியூர் சிவன் கோயிலின் மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. ஆனால் எடுக்கப்பட்ட முடிவில் உடன்பாடு ஏற்படாமல் போராட்டம் தொடர்ந்தது.



முப்பதாண்டுகள் கழித்து 1368 ஆம் ஆண்டில் இரண்டாம் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடானது. திருவொற்றியூரில் மன்னரின் கருவூலப் பொறுப்பிலிருந்த விட்டப்பர் இக்கோயில் பெண்களின் வேலை நிறுத்தத்தை அதிகாரிகள் மூலம் அறிகிறார். அவர் மீண்டும் ஒரு சமரசத்திற்க்கு ஏற்பாடு செய்கிறார். இந்தமுறை இரு கட்ட விசாரணை. முதலில் கோயில் அதிகாரிகளிடம் விசாரணை, பின்னர் ஸ்ரீருத்திரர்கள், ஸ்ரீமகேசுவரர்கள் மற்றும் பலரை வைத்து ஏதோ முடிவுகளை எடுக்கிறார். கல்வெட்டில் அதன் குறிப்புகள் இல்லாததால் இவர் எடுத்த முடிவுகளை நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் சமரசம் ஏற்படவில்லை என்பது மட்டும் தெளிவாகிறது. ஏனெனில் 1371 ஆம் ஆண்டில் மூன்றே ஆண்டுகள் கழிந்த நிலையில் மீண்டும் வேலைநிறுத்தம் முடிவுக்கு கொண்டுவர மூன்றாம் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கி.பி 1371 ஆம் ஆண்டில் விஜயநகர மன்னர் கம்பன்ன உடையார், நேரடியாக இப்பிரச்சனையில் தலையிடுகிறார். மன்னனின் ஆணைக்கு ஏற்ப மீண்டும் தொடர்புடைய அனைவரும் கோயிலின் அதே கூடத்தில் கூடுகின்றனர். இதில் கோயில் அறக்கட்டளையினர், மாநிலப் பிரதிநிதிகள் உட்பட பலரும், துணை இருந்த நம்பி கொங்கராயர் எனும் அதிகாரியின் தலைமையில் ஒன்று கூடினர். இக்கூட்டத்திலும் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி, கோயிலுக்குள் நடத்தப்படும் விழாக்களின் போது ரிஷபதளியிலார் இறைவனின் சன்னிதியிலும், தேவரடியார் அம்மனின் சன்னிதியிலும் தங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும். ஆனால் திருவிழாக்களின் போது இறைவனும் ஏனைய சிறுதெய்வங்களும் வீதிஉலா வரும் போதும், மண்டபம், தோட்டம், ஏரி போன்ற முக்கியமான இடங்களுக்கு உலா வரும் போதும் இவர்களுக்கான பணிமுறைகளில் மாற்றம் சொல்லப்பட்டிருந்தது. மாணிக்கவாசகர் திருஉலாவின் போதும், திருவெம்பாவை கேட்கும் விழாவின் போதும் பல மாற்றங்கள் சொல்லப்பட்டன. மன்னன் தலையிட்ட பின் இவர்களின் பிரச்சினை தீர்ந்தது போலும். ஆனால் இதை கூகுளில் பதிவேற்றம் செய்து உலகிற்கு தெரிவிக்க வேண்டிய நமது கடமை மட்டும் இன்னும் பாக்கி உள்ளது.

ஒரு போராட்டம் முடிந்துவிடலாம் அல்லது முடிவுக்கு கொண்டுவரப்படலாம். ஆனால் அதன் தாக்கம் முடிவதில்லை. பல்வேறு விளைவுகளை சமுதாயத்தில் உண்டாக்கும் வல்லமை அந்த நிகழ்வினுள் மறந்துள்ளது. இவை மக்கள் மனதில் புது நம்பிக்கையை உருவாக்கும். தங்கள் உரிமையை உணரச் செய்யும், போராட்டத்திற்கு முன் இரு பக்கத்திலும் இருந்த உறவுமுறை அல்லது மனோனிலையில் மாற்றம் வரும். இருபுறமும் இருந்த சக்தி ஏற்ற இறக்கம் காணும். அடுத்தடுத்த போராட்டங்களுக்கு வித்திடும்.

புரட்சியும் ஆட்சிமாற்றமும் கூட உண்டாகலாம். அதிகாரத்தில் உள்ளவர்களின் கருத்துக்கு மாற்றுக்கருத்துச் சொல்ல, உரத்த குரல் கொடுக்க, வேலைநிறுத்தம் செய்ய, துணிச்சல் தேவை என்பதை எளிமையாக கடக்கவியலாது.

இத்தகைய பின் விளைவுகளைக் கொண்ட மிக அழுத்தமான ஒரு செயலை 600 வருடங்களுக்கு முன் கோயில் பணிப் பெண்கள் தொடர்ந்து 30 ஆண்டு காலம் செய்தனரென்றால் அதுவும் முடிகொண்ட மன்னராட்சியில் செய்தனர் என்பது பெண்சக்த்தியின் உச்சம் எனலாம். வரலாறு அறிதலும் அதனை பதிவு செய்தலும் ஒரு சமுதாயத்தின் தலையாய கடமையாகும்.

சுவடுகள்

கடலை நோக்கிச்
சென்றிருந்த சில கால் தடங்களைக்
காண்கிறான்
அது
ஒரு ஆணின் அல்லது
பெண்ணினுடையதாக
இருக்கலாம்
அதன் ஒழுங்கற்ற வடிவம்
ஒரு அவசரத் தன்மையை
வெளிப்படுத்தியது.

இன்று ஏனோ கடல்
மிக அமைதியாக
அலை பாய்ந்து கொண்டிருந்தது

கடலை வெகு நேரம்
வெறித்துப்பார்த்துக்
கொண்டிருந்தவன்
தனது முடிவை
நாளைக்குத்
தள்ளி வைத்தான்.

-அதிரன்

சற்றுத் தொலைவில்
கரையை நோக்கிச் சென்றிருந்த
சில கால் தடங்களைக்
காண்கிறான்
அதன் ஆழமான பதிவு
ஒரு உறுதிப்பாட்டை
வெளிப்படுத்தியது.

உலக பெண் கவிஞர்கள் ஒர் அறிமுகம் – 9

ஜாய் ஹர்ஜோ

கவிஞர் வழக்கறிஞர் கனிமொழி

வி்ர்ஜினியா

Joy Harjo (ஜாய் ஹர்ஜோ) ஒக்லஹோமவில் 1951ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் அமெரிக்காவின் 23வது பொயிட் லாரியட் (poet laureate) எனும் அங்கிகாரம் பெற்ற முதல் பூர்வ குடி அமெரிக்கர்(Native American).

இரண்டாம் செவ்விந்திய மறுமலர்ச்சி அலையில் இவரின் பங்கு முக்கியமானது. எழுதுவதோடு இவர் பல்வேறு பல்கலைக்கழகங்களில் கற்றுத் தந்த அனுபவம் பெற்றவர். ஒன்பது கவிதைத் தொகுப்பினை இதுவரை அவர் வெளியிட்டுள்ளார். 1975ஆம் ஆண்டு "The last song" என்ற தன் முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். 2019 இல் "An American Sunrise" என்ற கவிதைத் தொகுப்பு 2020இல் ஒக்லஹோமவில் சிறந்த நூலாக வெற்றி பெற்றது. சிறார்களுக்கான இரண்டு நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். "The Good Luck Cat", "For a girl Becoming". இரண்டு நூல்களுமே விருதினை வென்ற நூல்கள்.

தனது இருபத்திரண்டாவது வயதிலிருந்து அவர் கவிதை எழுதத் தொடங்கி இன்று வரை வெற்றியுடன் பயணிக்கின்றார். கவிஞர் எழுத்தாளர் என்பதோடு இவருக்கு மற்றொரு முகமும் உள்ளது. இசை ஞானம் பெற்றவர். சாக்சோபோஃனும் புல்லாங்குழலும் வாசிப்பதில் தேர்ந்தவர். பல தனியிசைப்பாடல்களையும் வெளியிட்டுள்ளார். பூர்வ குடி அமெரிக்கர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து செயல்பட்டு வருபவர்.

இவரின் கவிதைகளும் அதையே பெரும்பாலும் பாடுபொருளாகக் கொண்டிருக்கும். அதோடு காலனிய ஆதிக்கம், பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றியும் இவர் கவிதைகள் பேசுகின்றன. காலனியத்தை எதிர்த்து இன்றும் பண்பாட்டு ரீதியாகத் தொடரும் பூர்வ குடி அமெரிக்கர்களைப் பற்றியே அவர் தொடர்ந்து பேசியும் எழுதியும் வருகின்றார். 2015 இல் வாலேஸ் ஸ்டீவன்ஸ் விருதினை கவிதைகளுக்காக அவர் பெற்றார்.

அவரின் முதல் கவிதைத் தொகுப்பு, "The Last Song" பூர்வ குடியினரின் வரலாற்றைக் கவிதைகள் மூலம் பேசியது. 1994 ஆம் ஆண்டு வெளிவந்த "The



woman who fell from the sky" நவீன சமூகத்தில் அழிவினைத் தூண்டும் காரணிகளைப் பற்றிப் பேசியது. "An American Sunrise(2020)" என்ற நூலில் 1830 களிலிருந்து பூர்வ குடி அமெரிக்கர்கள் எவ்வாறு தங்கள் வாழ்விடங்களை விட்டும் வாழ்வாதாரங்களை விட்டும் தொடர்ந்து விரட்டியடிக்கப்படுகின்றனர் அதன் தாக்கம் குறித்தும் பேசுகின்ற முக்கிய நூல்.

"We were running out of breath, as we ran out to meet ourselves. We Were surfacing the edge of our ancestors' fights, and ready to Strike" தங்கள் மூதாதையரின் சண்டைகளின் தடங்களைத் தேடி அலைவதாகவும் நவீன உலகில் அதன் அடையாளங்கள் தொலைந்திருப்பதாகவும் இந்த கவிதை நீள்கிறது.

“Sin
was invented by the Christians, as was the Devil, we sang. We were the heathens, but needed to be saved from them — thin chance. We knew we were all related in this story, a little gin will clarify the dark and make us all feel like dancing. We had something to do with the origins of blues and jazz
I argued with a Pueblo as I filled the jukebox with dimes in June, forty years later and we still want justice. We are still America. We know the rumors of our demise. We spit them out. They die soon.”

இந்த வரிகளின் சாரம் எவ்வாறு பூர்வ குடிகள் நிறுவன மயமாக்கப்பட்ட கிறித்துவ மதத்தால்

தாங்கள் பாவம் செய்தவர்கள் என நம்பவைக்கப்பட்டனர் என்றும் அவற்றை உடைத்துக் கொண்டு பூர்வ குடியினர் எவ்வாறு வாழத் தொடங்கினர், வாழ்கின்றனர் என்றும் கூறுகிறது.

“Eagle” என்ற கவிதையில் இயற்கையிடம் நம்மை எவ்வாறு ஒப்படைத்துக் கொள்ள வேண்டும் என்றும் இயற்கை தன் அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாப்புடன் பார்த்துக் கொள்ளும் என்றும் அதனால் இயற்கையின் மொழியை ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்றும் இயற்கையின் மடியில் ஒருவர் இந்த வாழ்வின் பொருளை உணர்ந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார். அந்த கவிதையின் சில வரிகள்,

Joy Harjo

“To pray you open your whole self
To sky, to earth, to sun, to moon
To one whole voice that is you.
And know there is more
That you can’t see, can’t hear;

Can't know except in moments
Steadily growing, and in languages
That aren't always sound but other
Circles of motion."
"Don't bother the Earth Spirit",

என்ற கவிதையில், பூமியின் கதை எப்போதும் மாறுதலுக்கு உட்பட்டது எனத் தொடங்கி, அந்தக். கதையைப் புரிந்துகொள்ள நில அதிர்வுகளையும் மின்னல்களையும் அன்பானவர்களின் மரணத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் இழப்புகளைத் தாண்டி அந்த கதையை விட்டு வெளியேற விரும்பமாட்டோம், இப்படித்தான் இயற்கை உங்களை சிறைப்படுத்துகின்றது. என எழுதுகிறார்.

"Don't bother the earth spirit who lives here.
She is working on a story.
It is the oldest story in the world and it is delicate, changing.
If she sees you watching she will invite you in for coffee,
give you warm bread,
and you will be obligated to stay and listen.
But this is no ordinary story.
You will have to endure earthquakes,
lightning, the deaths of all those you love,
the most blinding beauty.
It's a story so compelling
you may never want to leave;
this is how she traps you.
See that stone finger over there?
That is the only one who ever escaped."

இவ்வாறு பல சிறந்த கவிதைகளைப் படைத்துப் படிப்போருக்கு பூர்வ குடி அமெரிக்கர் வரலாற்றைக் கூறும் ஜாய் அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

வட இந்தியாவில் வைணவத் திருத்தலங்கள்

நா. காளிதாசம்மாள்

முன்னாள் உதவிப் பேராசிரியர்
பொருளாதாரத் துறை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி
(தில்லிப் பல்கலைக்கழகம்)
புது தில்லி -110 021.
Mail id: jayakalithas@gmail.com

'தில்லி' ஒரு தந்திர பூமி என்று வர்ணிப்பார் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி. இந்தியப் பெருநகரங்களுள் இரண்டாவது பெரிய மாநகரமாகத் திகழ்கிறது தில்லி. இந் நகரத்தில் கி. மு. ஆறாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று தொல்லியல் வரலாறும், யமுனைக் கரையிலும் மக்கள் குடியேறி வாழத் தொடங்கினர் என்று சமூக வரலாறும் கூறுகிறது. தில்லியை முகலாயர்களும் அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும் நீண்ட காலமாக ஆட்சியதிகாரம் செய்துள்ளனர். முகலாயப் பேரரசன் ஷாஜகான் உருவாக்கிய தில்லி 'ஷாஜகானாபாத்' என்று அழைக்கப்பட்டுள்ளது. ஏழு புராதன நகரங்களை இணைத்து ஷாஜகான் உருவாக்கிய நகரம் தான் தில்லி என்றும் கூறப்படுகிறது. முகலாயர்கள் காலத்தில் நான்கு தில்லிகள் தோன்றி மறைந்து விட்டன என்றும் இப்போதுள்ள பழைய தில்லி ஏழாவது தில்லி என்றும் இந்தியக் குடியரசின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள பகுதி எட்டாவது தில்லி என்றும் வரலாறு பதிவு செய்கிறது. இந்த எட்டாவது டெல்லிதான் இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களையும் ஆளும் மைய அரசின் தலைநரமாகத் திகழ்கிறது.

தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கோவில்கள், திருத்தலங்கள், மசூதிகள் மற்றும் இடப் பெயர்களின் அடிப்படையில் தில்லி உருவான வரலாற்றை மாற்றுக்

கோணத்தில் கட்டமைத்துள்ளார் வரலாற்று ஆராய்ச்சியாளர் ஒருவர். அந்த வகையில் தில்லி உருவாக்கப் பின்புலத்திற்கு கோவில்கள் மற்றும் திருத்தலங்களின் பங்களிப்பு இருந்துள்ளதை அறிய முடிகிறது.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது சான்றோர் வாய்மொழி. இப்பூவுலகில் தோன்றிய உயிர்க் குலங்களில் மனித குலம் மட்டுமே மாண்புடையதாக விளங்குகிறது. மனித குலம் தனது மன அமைதிக்காகவும் ஆனந்த வாழ்வுக்காகவும் ஆண்டவனை வழிபடுவதை ஒரு சிறந்த வழியாகக் கருதுகிறது. வழிபாடு என்பது 'மனித உயிர் தனது வாழ்க்கைப் பயணத்தை உன்னதமாக அனுபவித்து அதிலிருந்து மேம்பட்ட நிலையை அடைவதற்கான நெறியாகும்' என்று வரையறுக்கப்படுகிறது. மேலும், வழிபாடு என்பது காலங்காலமாக மக்களால் பின்பற்றப்படும் ஒன்றாகும்.

தெய்வ வழிபாடு மக்கள் நல்வாழ்வும் நற்பண்பும் உடையவர்களாகத் திகழ உதவுகிறது. அத்துடன் மனிதனை விலங்கு நிலையிலிருந்து விடுவித்து நல்வழிப்படுத்தும் வினையாற்றுகிறது. சான்றோர் பலர் இதைப் பதிவு செய்திருப்பதோடு கடைபிடித்தும் வந்துள்ளனர். 'தமிழ்நாட்டிலிருந்து காஞ்சி காமகோடி பீடம் சுவாமிகளான பெரியவரும்,, அகோபில மடத்து ஜீயரும் மற்றும் சைவ, வைணவ மடங்களின் தலைவர்களும், வள்ளலார் கொள்கைகளைப் பரப்புகிறவர்களும், கிருபானந்த வாரியார் சுவாமிகளும், கதா காலட்சேப விற்பன்னர்களும், பக்திப் பாடல் குழுவினரும் அடிக்கடி வடமாநில நகர்களுக்குச் சென்று அங்கு வாழ்பவர்களின் ஆன்மீக உணர்ச்சிகளை ஊக்குவித்து வருகிறார்கள்' (சோமலெ. 1988 : 66)

வைணவமும் வைணவத் திருத்தலங்களும்:

பக்தி இலக்கிய வரலாற்றில் வைணவ சமயத்தின் பங்கு மகத்தானது. வைணவம் என்பது இந்து சமய வேதங்களில் மரபுவழியாக வழக்கிலுள்ள பிரிவுகளில் ஒன்றாகும். பாகவதம், மகாபாரதம், ராமாயணம், பகவத் கீதை முதலான நூல்கள் வைணவ வேதாந்தங்களை விளக்கும் ஆதாரங்களாகும். இதனடிப்படையில்

வைணவத்தை அகில இந்திய மதமாகக் கருத இடமுள்ளது. நாதமுனிகள், ஆளவந்தார், ராமானுஜர் போன்றோரால் நெறிப்படுத்தப்பட்ட சமயமாக வைணவம் வளர்ந்துள்ளது. தென்னிந்தியப் பகுதிகளில் ஸ்ரீ வைஷ்ணவம் கடைப்பிடிக்கப்படுகிறது. இது ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ லக்ஷ்மிக்கு அளித்த இறையியல் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். ஸ்ரீ வைஷ்ணவம் என்பது ராமானுஜரும் அவரது பிற்காலத்திய சீடர்களும் உருவாக்கிய தென்னிந்திய வைணவமாகும். 'அடிப்படையான தன்னடக்கம், கழிவிறக்கம், திருமால் மீதும் அவருடைய பல்வேறு அவதாரங்கள் மீதும் பக்தி' ஆகியவை வைணவத்தின் எல்லாப் பிரிவினருக்கும் பொதுவானவை எனக் குறிப்பிடுகிறார் கே. சேஷாத்ரி.

வடகலை தென்கலை மடங்கள் :

ராமானுஜர் காலம் வரை ஒற்றுமையாக இருந்த வைணவ சமயம் ராமானுஜர் மறைவிற்குப் பின்னர் பிளவை எதிர்கொண்டது. வைணவ சமயம் வடகலை, தென்கலை எனப் பிளவுபட்டு, இரு குரு பரம்பரையினர் உருவாகத் தொடங்கினர். வேதாந்த தேசிகர் வடகலைப் பிரிவுக்கும் பிள்ளை லோகாச்சாரியார் தென்கலைப் பிரிவுக்கும் தலைமைப் பொறுப்பேற்றனர். இருவரும் வைணவ இலக்கியங்கள் பலவற்றை எழுதியுள்ளனர். வடகலைப் பிரிவினரின் தலைமை இடமாக 'அகோபில மடம்' தோற்றுவிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'வானமாமலை மடம்', திருப்பதியிலுள்ள ' திருமலை மடம்', ஸ்ரீ ரங்கத்திலுள்ள 'நாராயண ஜீயர் மடம்', மேலக்கோட்டையிலுள்ள 'யதிராஜ மடம்' ஆகியன தென்கலைப் பிரிவினரின் முக்கியமான மடங்களாகும். இம்மடங்களுக்கெனத் தனித்தனியே திருத்தலங்களும் உருவாகின. டெல்லியில்

ராமணாசிரமம், சங்கரமடம், பஜனை சமாஜம், ராமலிங்க சமாஜம், சுத்த சன்மார்க்க சபை முதலான அமைப்புக்களும் நிறையவே உள்ளன.

இந்து சமூக மக்களிடையே நிலவும் பெரும்பாலான நம்பிக்கைகளில் கோவில் மையப் புள்ளியாகத் திகழ்கிறது. அவர்கள் ஆலயப்பணியில் அதிகக் கவனம் செலுத்தியுள்ளனர். உலகம் முழுக்க ஆயிரக்கணக்கான சைவ, வைணவத் திருத்தலங்கள் நிறைந்து காணப்படுகின்றன. சிவபெருமான், முருகன், விநாயகர் அம்மன் போன்ற சைவப் பெருதெய்வங்களும் வட இந்தியாவில் இருக்கின்றன. பாலாஜி, பெருமாள், கண்ணன், ராமர் முதலான வைணவப் பெருந்தெய்வங்கள் வடஇந்தியாவில் அதிகமாகக் காணப்படுவதைக் கள ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது. வைணவத் திருத்தலங்களில் உள்ள விக்கிரகங்கள் பெரும்பாலும் பூ மற்றும் பொன்னாலான அழகான அலங்காரத்துடனேயே காணப்படுவது வழக்கமாக உள்ளது.

தென்னிந்தியாவில் தெலுங்கு மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் பெருமாளின் அவதாரமான நரசிம்ம மூர்த்திக்கு அதிக எண்ணிக்கையிலான திருத்தலங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழக, ஆந்திர எல்லையிலுள்ள சோளிங்கர் தொடங்கி ஆந்திராவின் வடகோடியில் உள்ள சிம்மாச்சலம் வரை ஏராளமான நரசிம்மர் கோவில்கள் உள்ளதாக கே. சேஷாத்ரி அடையாளம் கண்டுள்ளார். ஆந்திராவின் காக்கிநாடா அருகில் சார்பாவரம் என்ற இடத்திலுள்ள 'பவநாராயண சுவாமி கோவில்', கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள 'பலதேவன் பள்ளி கோவில்' மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள 'பொன்னூர் கோவில்', குண்டூர் மாவட்டத்திலுள்ள 'பாபட்லா கோவில்' ஆகியன வைணவப் புண்ணியத் தலங்களுள் முக்கியமானவை ஆகும்.

தென்னிந்தியா மட்டுமல்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் வைணவத் திருத்தலங்களுக்குக் குறைவில்லை. வடநாட்டில் சுவாமி ராமானந்தர், கபீர்தாசர், சைதன்யர் போன்ற ஆன்மீகத் தலைவர்கள் தோன்றி வைணவ சமயத்தை வளர்த்தனர். வடநாட்டில் டெல்லி, ராஜஸ்தான், குருக்ஷேத்திரம், ஜம்மு உட்பட பல இடங்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட வைணவத் திருத்தலங்கள்

நிர்மாணிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது. வட இந்தியாவில் குறிப்பாகத் தலைநகர் டெல்லியில் அமைந்திருக்கின்ற வைணவத் திருத்தலங்கள் தொடர்பான அரிய தகவல்களைத் தமிழ் வாசகர்களுக்கு அறியத் தரும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா (பாலாஜி) திருத்தலம் :

தில்லியில் அமைந்துள்ள வைணவத் திருக்கோவில்களுள் இது மிகவும் பழமையானது. பிரசித்தி பெற்றதும் கூட. இக்கோவில் தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு அடுத்துள்ள இராமகிருஷ்ணா புரம், செக்டார் : 3 - இல் அமைந்துள்ளது. செல்வச் செழிப்புடைய இக்கோவிலில் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் மற்றும் திருப்பாவைப் பாராயணப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இக்கோவிலின் மூல விக்கிரகம் 1964 - இல் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1960-களில் இந்திய தேசத்திற்கு சீனர் மற்றும் பாகிஸ்தானியர்களால் பல அச்சுறுத்தல் ஏற்பட்டதாகவும் அந்த சிரமங்களிலிருந்து நாட்டைக் காப்பதற்காகப் பெருமாள் தலைநகர் டில்லியில் கோவில் கொண்டருளியிருக்கிறார் என்றும் திருக்கள்ளம் நரஸிம்ம ராகவாச்சாரியார் கூறுகிறார். 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா மந்திர் சொசைட்டி' என்ற அமைப்பின் கீழ் தமிழ் அய்யங்கார்களால் இக்கோவில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு வடகலைக் கோவிலாகும். கருவறையில் மூலவராக பெருமாள் காட்சியளிக்கிறார்.

மூலவர் விக்கிரகத்தை வடிவமைத்தவர் கணபதி ஸ்தபதி ஆவார். கருவறையின் இருபுறமும் மூலவர்களாக ஸ்ரீ தேவி, பூதேவி சன்னதிகள் உள்ளன. பெருமாள் சன்னிதியின் அர்த்த மண்டபத்தில் உற்சவர்களாக ரங்கநாதர், வரதராஜர், லக்ஷ்மி நரசிம்மர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், இராமானுசர், வேதாந்த தேசிகர், ராமர், லட்சுமணர், சீதை, அனுமன் ஆகிய தெய்வங்களின் விக்கிரகங்கள் காணப்படுகின்றன. இங்கு ஆண்டாள், ஆஞ்சநேயர், கருடர், வராகர், ஹயகிரிவர் ஆகியோருக்கும் தனித்தனியே சந்நிதிகள் உள்ளன. ஆச்சார்ய சன்னிதியில் மூலவர்களாக திருமங்கை ஆழ்வார், ராமானுஜர்,

நம்மாழ்வார், வேதாந்த தேசிகர், பெரியாழ்வார், நாதமுனிகள், ஆழவந்தார் ஆகியோர் காட்சியளிக்கின்றனர். பெருமாளின் அவதாரங்கள் மற்றும் பன்னிரு ஆழ்வார்களின் திருவுருவங்கள் வரைபடங்களாக வரையப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா கோவிலில் இராமநவமி, அனுமன் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி போன்ற சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. தின, மாத, வருட வழிபாடுகளும் குடமுழுக்குத் தினங்களில் ஆராதனை, அபிஷேகம், தீப, தூப வழிபாடுகளும் செய்யப்படுகின்றன. திருப்பதியிலுள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா கோவிலில் நடைபெறுவதைப் போன்றே பிரம்மோற்சவம், பத்மாவதித் தாயார் கல்யாண உற்சவம், பவித்ர உற்சவம், மகா நிவேதனம் முதலான அனைத்து நிகழ்வுகளும் இக்கோவிலில் மேற்கொள்ளப்படுகின்றன.

சுதர்சன ஹோமம் முதலான முக்கியமான வேள்விகளையும் கோவில் நிர்வாகத்தினர் அவ்வப்போது நிகழ்த்தி வருகின்றனர். வைணவர்களுக்கு மட்டுமல்லாமல் தில்லியில் வாழும் தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடர்கள் மற்றும் கேரள மக்களுக்கும் ஒரு உன்னத வழிபாட்டுத் தலமாக இக்கோவில் விளங்குகிறது. இக்கோவிலுக்கு வருகை புரிவோர் தங்களுக்குத் திருப்பதிக்குச் சென்று வந்த திருப்தி ஏற்படுவதாகக் கூறுகின்றனர். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் நிகழ்வதற்கொரு சிறந்த வழிபாட்டுத் தலமாக இக்கோவில் திகழ்வதாகப் பக்தர்கள் கருதுகின்றனர். வட இந்தியர்கள் இக்கோவிலை 'பாலாஜி மந்திர்' என அழைக்கின்றனர். தில்லி மற்றும் வடநாட்டிற்குச் சுற்றுலா வரும் தமிழர்கள் இக்கோவிலைத் தவறாமல் தரிசனம் செய்து வழிபட்டுச் செல்கின்றனர்.

திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தலம்:

தில்லியின் மத்திய பகுதியில் உள்ள கோல் மார்க்கெட் பகுதியில், உதயான் மார்க்கில் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலைத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் 2013 - இல் முறைப்படி பிரதிஷ்டை செய்துள்ளது. இந்தக் கோவிலில் வெங்கடேசப் பெருமாள், மகாலட்சுமி மற்றும் பூதேவி சகிதம் காட்சியளிக்கிறார். பக்தர்கள் அமைதியாகத் தியானம் செய்வதற்கான விசாலமான கூடம் ஒன்றும் இக்கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. தென் மாநிலத்தவர்கள் மட்டுமல்லாது பிற மாநிலத்தவர்களும் வழிபடும் புண்ணியத் தலமாக இக்கோவில் திகழ்ந்து வருகிறது.

தென்மேற்குத் தில்லிப் பகுதியில் உள்ள தவுலாக் குவான் என்னுமிடத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி அமைந்துள்ளது. இது 1961- ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் நிறுவப்பட்டது. 2011-இல் இக்கல்லூரி தனது பொன்விழா ஆண்டைக் கொண்டாடி மகிழ்ந்தது. இக்கல்லூரியின் உள்முகப் பகுதியின் வலது புறத்தில் 'ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோவில்' ஒன்றை ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் ஒத்துழைப்புடன் 2000-இல் அக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் ஏ. சங்கர ரெட்டி அவர்கள் நிறுவியுள்ளார். கல்லூரியில் பயிலும் மாணவர்கள், பணிபுரியும் ஊழியர்கள் தினமும் இக்கோவிலை வழிபட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். கல்லூரி முதல்வர் மற்றும் ஊழியர்கள் மனமுவந்து அளிக்கும் நன்கொடையிலிருந்து அவ்வப்போது சிறப்புப் பூசைகளும் இக்கோவிலில் நடைபெறுவதுண்டு.

இதே போன்ற ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவில் ஒன்று இந்தியா கேட் அருகில் அசோகா ரோட்டில் உள்ள ஆந்திரா பவனிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இங்குப் பூசாரி ஒருவர் நியமிக்கப்பட்டு காலை மாலை தீபாராதனை நடைபெறுகிறது. பக்தர்களின் தனிப்பட்ட வேண்டுகோள் மற்றும் நன்கொடைகளின் அடிப்படையில் சிறப்புப் பூசைகளும் நடத்தப்படுகின்றன.

மத்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகள், அலுவலர்கள், பொது மக்கள் மற்றும் சுற்றுலா வரும் பக்தர்கள் ஆகியோர் இக்கோவிலை வழிபட்டு அருள் பெற்றுச் செல்கின்றனர்.

தில்லி கண்டோன்மெண்ட் பகுதிலுள்ள ஆர்மி பேஸ் ஆஸ்பிட்டல் (Army Base Hospital) வளாகத்திற்குள் எழுமலையானுக்குக் கோவில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இக்கோவிலுக்கு 'ஸ்ரீ வெங்கடேஸ்வர் ஸ்வாமி (பாலாஜி) மந்திர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இருபத்து நான்கு கிலோ எடை வெள்ளியினால் வெங்கடேசப் பெருமான் விக்கிரகம் வடிவமைக்கப்பட்டு முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சீனிவாசப் பெருமாள் மூலவராகக் காட்சியளிக்கிறார். இங்கு ஸ்ரீ தேவி, பூதேவி இருவருக்கும் தனித்தனியே சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவில் ஒரு கூட்டுக் கோவிலாகவும் காட்சியளிக்கிறது. இங்கு அனுமன், சாயி பாபா, ராதா கிருஷ்ணன், சந்தோஷி மாதா, சத்ய நாராயணர், கிருஷ்ணா ருக்மணி, துர்கா மாதா, விஷ்ணு பகவான் (பத்மநாபன்), ராமர் தர்பார், கருட பகவான், நாகராஜ், ஜகன் நாத் , விஷ்ணு லக்ஷ்மி, வால்மீகி ஆகியோருக்கும் இங்கு சிலைகள் உள்ளன. இக்கோவிலில் காலை 5.30 முதல் 7.30 வரையிலும் மாலை 6 மணி முதல் 8 மணி வரையிலும் இருவேளை பூசைகள் நடைபெறுவதாகவும் ஸ்ரீ ராமநவமி, ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி , ஸ்ரீ கணேஷ் சதுர்த்தி பூஜை, விஜயதசமி, ஸ்ரீ மகா சிவராத்திரி ஆகிய தினங்களில் சிறப்புப் பூசைகள் நடத்தப்படுவதாகவும் கோவில் பூசாரி திரு. அனில் குமார் திவேதி தெரிவிக்கின்றார். மேஜர் ஜெனரல் வி. வி. எஸ். பிரதாப ராவ் என்பவரின் சீரிய முயற்சினால் இவரது பணிக்காலத்தில் *26.5.1980* அன்று இக்கோவில் முறைப்படி உருவாக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இதே தில்லி கன்டோன்மெண்ட் பகுதியில் சுப்ரோத்தோ பார்க்கிலும் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவில்' ஒன்று உள்ளது. இக்கோவில் இந்திய விமானப்படையினர் பராமரிப்பில் செயல்பட்டு வருகிறது. தெற்குத் தில்லியிலுள்ள பத்ரா மருத்துவமனை அருகிலுள்ள வாயுசேனாபாத் என்னுமிடத்தில் அமைந்துள்ள துக்ளகாபாத் 'ஏர் ஃபோர்ஸ் ஸ்டேசன்' (Air Force

Station) வளாகத்திற்குள்ளும் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவில்' ஒன்று அமைந்துள்ளது. மேலும் சாஸ்த்ரி நகர் அருகிலுள்ள குலாபி பாக்கிலும் கிழக்கு தில்லியிலுள்ள காக்கதியா அப்பார்ட்மெண்ட் வளாகத்திலும் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவில்' உள்ளதாக அறிய முடிகிறது. லோதி ரோட்டிலுள்ள சீரடி சாய்பாபா கோவிலுக்கு அடுத்து ராமர் கோவில் ஒன்று உள்ளது. இங்கு ஏழுமலையான் திருவேங்கடவனுக்குச் சந்நிதானம் அமைக்கப்பட்டுப் பூசைகள் நடைபெறுகின்றன. பெருவாரியான தென்னிந்தியப் பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து திருவேங்கடவனைத் தரிசித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

வைகுண்ட நாதர் திருத்தலம் :

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவர் ஆஸ்ரமத்தினரால் 1972 - ஆம் ஆண்டு இக்கோவில் எழுப்பப்பட்டது. தென்மேற்குத் தில்லியிலுள்ள பேர்சறாய் பகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது. இதுவும் ஒரு வடகலைக் கோவிலாகும். தில்லியில் அமைந்துள்ள வைணவத் திருத்தலங்களுள் முதன்மையானதும் பழமையானதும் ஆகும். 'நின்றான், இருந்தான், கிடந்தான்' என்ற தத்துவத்தை விளக்கும்

வகையில் இக்கோவில் கட்டப்பட்டுள்ளதாக' சோமலெ குறிப்பிடுகிறார். (1988 : 74) இக்கோவிலின் கருவறை மூல தெய்வமாக 'ஸ்ரீ வைகுண்ட நாதர்' திகழ்கிறார். ஸ்ரீரங்கநாதரும் ஸ்ரீரங்க நாயகியும் உற்சவ மூர்த்திகளாகக் காட்சியளிக்கின்றனர். கருவறையில் உள்ள மூலவர் விக்கிரகங்கள் கல்லில் வடிவமைக்கப்பட்டவையாகும். கருவறையில் பெருமாள் ஆதி சேஷன் மீது அமர்ந்த நிலையில் பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். அருகில் ஸ்ரீதேவி, பூதேவியரின் வடிவங்கள் நின்ற நிலையில் காணப்படுகின்றன. மகாலட்சுமி, ஆண்டாள், லட்சுமி ஹயகிரீவர், தன்வந்திரி ஆகிய தெய்வங்களுக்கும் ஆழ்வார்கள் நான்கு பேருக்கும் பஞ்சலோகத்திலான தனித்தனியான சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் வெளிப்பிரகாரத்தில் ஆஞ்சநேயர், நரசிம்மர் மற்றும் சுதர்சனர் ஆகியோருக்குத் தனியான சந்நிதிகள் உள்ளன. இக்கோவிலின் சுற்றுப்புறத் தாழ்வாரத்தில் சக்கரத்தாழ்வார், சுதர்சன மூர்த்தி, அனுமன் முதலான தெய்வங்களுக்குத் தனிச் சன்னதிகள் எழுப்பப்பட்டுள்ளன. இங்கு ரங்க நாயகித் தாயாருக்குத் தனிச் சன்னதி இல்லை. இக்கோவிலின்



ராஜகோபுரமும் மூலவர் சன்னதியும் மேற்குத் திசையை நோக்கி அமைக்கப்பட்டுள்ளன.

வைகுண்ட ஏகாதசி, ஜீயர் சுவாமிகளின் ஜெயந்தி, அனுமன் ஜெயந்தி தினங்களில் ஆராதனைகள் வெகுசிறப்பாக நடத்தப்படுகின்றன. வேதாந்த தேசிகர் தினம், கருட சேவை, நவராத்திரி பூஜை எனப் பல உற்சவ நிகழ்வுகள்

இக்கோவிலில் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி தினத்தன்று இக்கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். அன்றைய தினம் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் அதிகாலையிலிருந்து இரவு வரை வைகுண்ட நாதரைத் தரிசிக்க மக்கள் வந்தவண்ணமிருப்பர். பவித்ரோத்சவம், மகாநைவேத்யம், வைகுண்ட ஏகாதேசி, நரசிம்ம ஜெயந்தி ஆகிய உற்சவ நிகழ்வுகள் இக்கோவிலின் சிறப்பு அம்சங்களாகும். தங்கள் முன்னோர்களுக்குத் திதி செய்ய விரும்பும் பொது மக்களுக்கு இக்கோவிலின் பின்புறத்தில் தனி அறை வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கள் வீடுகளில் திதி செய்துகொள்ள முடியாதவர்களுக்கு இது ஒரு நல்ல வரப்பிரசாதமாகும். இந்த ஏற்பாடு பிற கோவில்களில் இல்லாத சிறப்பு அம்சமாகப் பக்தர்களால் கருதப்படுகிறது. வைகுண்டநாதர் கோவில் இந்தியாவில் ராஜஸ்தான், கொல்கத்தா, தில்லி ஆகிய மூன்று நகரங்களில் மட்டுமே நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்கிறார் இக்கோவிலின் மேலாளர் திரு. வெங்கடேசன். இக்கோவில் அமைந்திருக்கும் சாலைக்கு ‘ ஸ்ரீ வேதாந்த தேசிகர் சாலை’ எனப் பெயரிட்டுச் சிறப்பித்துள்ளது தில்லி மாநகராட்சி.

இராமர் திருத்தலம் :

தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தின் அருகில் உள்ள சீரடி சாய்பாபா கோவிலுக்கு அடுத்து இந்த ராமர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு முப்பது வருடங்களுக்கும் மேலாகிறது. தமிழர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமான வழிபாட்டுத் தலமாக இக்கோவில் விளங்குகிறது. இரு தளங்களைக் கொண்ட இக்கோவிலில் கீழ்த் தளத்தில் நாமம் தரித்த பிள்ளையார், நவ கோள்கள், மகாலட்சுமி, அனுமன், ஆழ்வார்கள், இராமனுசர் சன்னதிகள் உள்ளன. முதல் தளத்தில் வேங்கடவன், ஸ்ரீராமன், சயனக் கோலத்தில் திருவரங்கன், விஷ்ணு, சுதர்சனர் – நரசிம்மன் ஆகிய சன்னிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதே தெய்வங்கள் ஐம்பொன் விக்கிரங்களாக உள்ளன. தெற்குத் தில்லிவாழ் தமிழ் மக்களுக்கும், வைணவர்களுக்கும் ஒரு புண்ணியத் தலமாகவும் இக்கோவில் விளங்குகிறது. இக்கோவிலின் இராஜ கோபுரமும் மூல விக்ரகமும் தென்திசை நோக்கியே

அமைக்கப்பட்டுள்ளது. வருடத்தின் சிறப்பு நாட்களில் இக்கோவிலில் நடைபெறும் விழாக்கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்கோவில், சுதர்சன ஹோமம், வைகுண்ட ஏகாதசி வேள்விகள் மற்றும் சிறப்பு ஆராதனைகளுக்குப் புகழ்பெற்றதாகும். நவக்கிரகங்களின் சந்நிதிகளை வழிபடப் பக்தர்கள் சனிக்கிழமை தோறும் இக்கோவிலுக்கு வருகை புரிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தில்லியில் தமிழர்களுக்கான வழிபாட்டுத் தலங்களில் இக்கோவில் முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. துவாரகா என்னும் துணை நகரம் தில்லியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு வாழும் தமிழர்கள் இராமருக்குக் கோவில் ஒன்றை எழுப்பியுள்ளனர். தில்லியிலுள்ள 'பஜனை சமாஜம்' என்னும் அமைப்பினரால் இக்கோவில் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதியில் வாழும் தமிழர்கள் இக்கோவிலுக்கு 'ராம் மந்திர்' எனப் பெயரிட்டு வழிபட்டு வருகின்றனர். தில்லியிலுள்ள தசரத்புரி என்னுமிடத்திலும் ஸ்ரீ ராமருக்குக் கோவில் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. 'அகில பாரத சாது சமாஜம்' என்ற அமைப்பின் மேற்பார்வையில் இக்கோவில் செயல்படுகிறது. இக்கோவிலின் கும்பாபிஷேகம் 2008-ஆம் ஆண்டில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் திருத்தலம்:

தில்லியின் மத்தியில் அமைந்துள்ள கரோல்பாக் பகுதியிலுள்ள பிரசாத் நகர் என்னுமிடத்தில் இக்கோவில் அமைந்துள்ளது. மிகவும் சக்தி வாய்ந்த கோவிலாக அப்பகுதி வைணவர்களாலும் அனைத்துத் தமிழர்களாலும் நம்பப்படுகின்றது. எழுபதுகளில் 'ஸ்ரீ லக்ஷ்மி நரஷிம்ம சபா' என்ற அமைப்பின் கீழ் செயல்பட்டு வந்த இக்கோவில் பின்னர் பாலாலயமாக அமைக்கப்பட்டு உற்சவரின் விக்கிரகம்

1987- இல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ அகோபில மடத்தின் 45 - வது ஜீயர் 1997- இல் வட நாட்டு யாத்திரை மேற்கொண்டார். அவரது தில்லி விஜயத்தின் போது இக்கோவில் நிர்வாகம் இக் கோவிலை ஸ்ரீ அகோபில மடத்திடம் ஒப்படைத்தது. இந்நிகழ்வை முன்னிட்டு ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் கோவிலில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு ராஜ கோபுரமும் நிர்மாணிக்கப்பட்டுப் பூரண கும்பாபிஷேகமும் நடந்தேறியது (1997). அப்பொழுது மூலவரின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இக்கோவிலின் சம்ப்ரோக்ஷணம் 2013- ஆம் ஆண்டு மே 2-ஆம் நாள் நடந்தேறியது. இங்கு ஆதி சேஷன் மீது மூலவர் அமர்ந்த நிலையில் இடது தொடையில் (மடியில்) லட்சுமியை அணைத்தவாறு லட்சுமி நரசிம்ம மூர்த்தியின் வடிவில் காட்சி தருகிறார். மூலத் தெய்வத்திற்கு கீழே ஸ்ரீதேவி, பூதேவி நின்ற கோலத்தில் உள்ளனர். உற்சவர் சிலையைப் 'பிரகலாத வரதன்' என்ற பெயர் கொண்டு பக்தர்கள் அழைக்கின்றனர். பிரகலாதனுடன் உபய நாச்சிமார்களான ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோரின் ஐம்பொன் சிலைகள் நின்ற கோலத்தில் காணப்படுகின்றன. சக்கரத்தாழ்வார், நம்மாழ்வார், தேசிகன், ஆதிசிவன், சடகோபயதீந்திர மகாதேசிகன், ஜெய் அனுமன், ஆண்டாள், மகாலட்சுமி ஆகியோருக்கும் இக்கோவிலில் தனித்தனிச் சன்னதிகள் அமைந்துள்ளன.

வைணவர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை ஒருசேரக் கண்டுகளிக்க உகந்ததாக இதனைக் கருதுகின்றனர். அகோபில மடத்தின் 43 - வது ஜீயர் சுவாமிகளுக்கு இக்கோவிலில் ஜன்ம நட்சத்திர பூசைகள் நடைபெறுகின்றன. காரோல்பாக் பகுதியில் வாழும் வைணவ அன்பர்களால் 1957 முதல் இன்று வரை இது

தொடர்ந்து நடத்தப் பெறுகிறது. இப்போது வரை இக்கோவில் ஸ்ரீ அகோபில மடத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. வைணவர்களின் புண்ணிய தினங்களான நரசிம்மர் ஜெயந்தி, அனுமன் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, ஆடிப்பூரம் முதலிய விஷேச நாட்களில் இக்கோவிலில் அபிஷேகங்களும் ஆராதனைகளும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. விழாக்கள் நடைபெறும் நாட்களில் சிறப்பு வேள்விகள், இசைச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், நடைபெறுவது வழக்கம். இச்சமயத்தில் தமிழர் கலைகள், வேத உபநிடதங்கள், ஆழ்வார்களின் பாசுரங்கள், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் குறித்து ஆச்சார்யார்கள் ஓதுவதைக் காணமுடிக்கிறது.

முடிவுரை

ராஜஸ்தான், டெல்லி, ஹரியானா, பஞ்சாப், ஜம்மு, உத்தரப்பிரதேசம் முதலான வடமாநிலங்களில் வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்தபதிகளைக் கொண்டு சிலைகளை வடிவமைத்து கோவில்களில் பிரதிஷ்டை செய்துள்ளனர். கோவில்களை நிர்மாணிப்பதில் திராவிடக் கட்டடக்கலை முறையைக் கையாண்டுள்ளனர். தமிழர்கள் வழிபடும் வட இந்தியத் திருத்தலங்களில், தமிழகக் கோவில்களில் நிகழ்த்தப்படும் வழிபாடு மற்றும் ஆகம விதிமுறைகளின்படியே நடைபெறுகின்றன. அந்த வழிபாட்டு முறைகளை நேரில் காண்போருக்குத் தமிழ்நாட்டுக் கோவில் திருவிழாக்களை நினைவுபடுத்துகின்ற விதத்தில் உள்ளன. வைணவத் திருத்தலங்கள் பெரும்பாலும், பெரு நகரங்கள் மற்றும் நகரங்களின் மையப் பகுதிகளிலே அமைந்திருப்பதைக் காண முடிகிறது. புறநகர்ப் பகுதிகளிலோ நகர எல்லையை ஒட்டியோ வைணவத் திருத்தலங்கள் அமைந்திருப்பதை அதிகம் அறிய முடியவில்லை. டெல்லியில் தமிழர் வாழும் பகுதிகளில் சைவ - வைணவ விழாக்களான வரலட்சுமி நோன்பு, நவராத்திரி, கோகுலாஷ்டமி, பங்குனி உத்திரம், கந்த சஷ்டி, சூரசம்ஹாரம் முதலான பல விழாக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவதைக் கள ஆய்வின் மூலம் காண முடிகிறது.

உதவிய நூல்கள்

1. அகில். 2004. இந்துமதம் மறைபொருள் தத்துவ விளக்கம், சென்னை: திருமகள் நிலையம்.

2. உத்ரபல்குனி. எம். (தமிழில்: டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணா ஸ்வாமி), 'ஸ்ரீ பிரசன்னா வெங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்- கீலபட்லா', திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஸப்தகிரி- சமய மாத இதழ், ஜூலை, 2019, பக். 24-26.

3. சக்திவிநாயகம். தி. 'அத்திக்கிரி அருளாளன் அருட்தரிசனம்' திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஸப்தகிரி-சமய மாத இதழ், ஜூலை, 2019, பக்.34-35.

4. சேஷாத்ரி. கே. 2016. (தமிழில் மு. கோபால கிருஷ்ணன்)' வைணவமும் சமூக மாற்றமும்', சென்னை : பாவை பப்ளிகேசன்ஸ்.

5. சோமலெ. 1988. வடமாநிலங்களில் தமிழர்: ஆய்வு அறிக்கை, தஞ்சாவூர்: பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6. பத்மாவதி வெங்கட்ரமணா (தமிழில்: ஏ. அருணா), ' பத்மாவதித் தாயார் ஆலயம்- திருச்சானூர்', திருமலை திருப்பதி தேவஸ்தானம் , ஸப்தகிரி- சமய மாத இதழ், ஆகஸ்ட், 2019, பக் . 34-36.

7. ராஜேஸ்வரி. செ., பௌத்தத்தை வெற்றிக்கொண்ட வைணவம், தமிழணங்கு- இலக்கிய , சமய, பண்பாட்டு ஆய்விதழ், மதுரை, நவம்பர், 2024. பக்.31-40.

8. லலிதா கிருஷ்ணமூர்த்தி. பி. (தமிழில் : எஸ். வைஷ்ணவி), ' ஸ்ரீ பிரசன்னா வெங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்- அப்பளாயகுண்ட்டா' திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஸப்தகிரி- சமய மாத இதழ், ஜூன், 2019, பக். 18-20.

9. ஜனக்புரி சீனிவாசன். 'ஆழ்வார்கள் அறிமுகம்-6', தமிழணங்கு- இலக்கிய , சமய, பண்பாட்டு ஆய்விதழ், மதுரை, நவம்பர், 2024. பக்.87-90.

10. Rajagopalan.R.2014. Sri Vaishnava Brahmins of Tamil Nadu, Chennai : Madhava Mudhra.

11. Sri Venkateswara Mandir Society (Regd.) Delhi, Golden Jubilee Souvenir: 1964- 2014.

தாய்மையைப் போற்றிடு!

அன்பு ஜெயா, சிட்னி

பா வகை: கழி நெடிலடி ஆசிரியப் பன்னிரு சீர் மண்டிலம் (விருத்தம்).

பெண்ணுமே கற்றால் குடும்பமே கற்கும்
பெரியோர் கூற்றிதுவே!
பெரியதாய் ஆணும் கற்றுமே அவன்தான்
பெயரும் பெற்றிடுவான்!
எண்ணியே பார்த்து மெய்யிதே என்று
ஏற்று வாழ்ந்திடுவோம்!
இடையறா இன்னல் வந்துமே எளிதாய்
எம்மைக் காப்பவள்தாய்!
மண்ணிலே விதைத்த விதையினைக் காக்கும்
மண்போல் காப்பவளே!
மனமது மலர்ந்தே மலரென நம்மை
மகிழ்ந்தே காப்பவளே!
உண்மையே உலகில் உயர்ந்தது தாய்மை,
உன்னைக் காத்ததுமே!
உன்னுயிர் போல அதனையும் உயர்வாய்
உலகில் காத்திடுவாய்! *(1)*

எண்ணமும் சிறப்பாய் விதைப்பவள் அவளே
ஏற்பாய் சிந்தையிலே!
எத்தனைத் தடைகள் வந்துமே உன்னை
என்றும் காத்தவளே!
வண்ணமாய் ஆடை பூட்டியே உனக்கு
வாழ்வில் மகிழ்ந்தவளே!
வருபவர் எல்லாம் உன்னைக் கண்டால்
வாழ்த்தும் வகைசெய்தாள்!
கண்ணுதான் படுமே என்றவள் கருப்பும்
கன்னத் திட்டிடுவாள்!
கருப்பினில் சட்டை என்னவோ தவிர்ப்பாள்,
காத்துக் கருப்புக்கோ?
திண்ணமாய் உரைப்பேன் தாய்தனை என்றும்
திடமாய்க் காத்திடுவீர்!
திரும்பிடும் திசைகள் எங்குமே உம்மை
திருவும் காத்திடுமே! *(2)*

கிம்பளம் !!!

பாரதிராஜன் (ரங்கராஜன்)

சென்னை

சந்திரன் ஒரு அரசு ஊழியர். நல்ல பணம் வரும் வருவாய்த்துறை ஒரு அதிகாரி. அவர்மனைவி யாழினி இல்லத்தரசி. ஒரே மகள் ரோஷினி.

சந்திரன் சம்பளம் தவிர கிம்பளம் வாங்குவதில் கில்லாடி. ஆனால் எதிலும் மாட்டிக்கொள்ளாமல் செய்வது அவர் வழக்கம். மனைவி படுகில்லாடி, லஞ்சமாக வாங்கும் பணத்தை எப்படி பாதுகாப்பது எனத்தெரியும்.மகளை பிளஸ் 2 வரை, தனியார் பள்ளியில் சேர்த்தார்.மகள் நல்ல மார்க்குகள் வாங்கியவுடன், சந்திரன் தன் அரசு செல்வாக்கைப் பயன் படுத்தி ,பொறியியல் கல்லூரி யில் பணம் கொடுத்து சேர்த்தார், அதுவும் ஹாஸ்டலில் தங்கி படித்தாள்.

முதல் இரண்டுவருடம் அரியர்ஸ் இல்லை, மூன்றாவது வருடம்முதல் அரியர்ஸ், நண்பர்களாக வந்தவர்கள் சரி இல்லை, ரோஷிணியின் பணவசதி தெரிந்து, ஊர்சுற்ற ஆர்ம்பித்தாள். அதன்மூலமாக அவருடைய தந்தை மாதாமாதம் நிறையபணம் கொடுக்கவேண்டிவந்தது.

ரோஷிணி தன்பெண் மற்றும் ஆண் நண்பர்களுடன் கன்னியாகுமரி சென்று இளம் வயது ஆண் நண்பர்கள், ஜூஸில் மயக்க மருந்து கொடுத்து பெண்களை.. எழுதவே கைகூசுகிறது. சந்திரன் தன் அரசு செல்வாக்கால் அதனை சமாளித்தார். பெண்ணின் இந்த நிலைக்கு, பெண்ணின் தாயும் காரணம். சந்திரனின் மனைவிக்கு கருப்பையில் புற்றுநோய் வர ஏகப்பட்ட மருத்துவ செலவு ஒருபுறம், மகளின் படிப்பு பாதியில் முடிந்தது, சந்திரனால் அலுவலக வேலையில் கவனம் செலுத்த முடியாமல், கிம்பளம் வாங்கியவர்களின் வேலை முடிக்க முடியாத நிலை.

ஆண்சரியாக நடக்க பெண் தான் காரணம், இங்கு ஆண் கிம்பளம் வாங்குவதை மனைவி ஊக்குவித்ததால், கிம்பளம் கொடுத்தவர்கள் சாபம் காரணமாக,

மகளின் படிப்பு பாழ், மனைவிக்கு கருப்பையில் புற்றுநோய். மனைவியின் புற்றுநோய்க்கு லட்சகணக்கில் பணம் செலவழித்தும் மனைவி மரணம், இதெல்லாம் யாரால் என்று யோசிக்க வேண்டுமா? மனைவி அமைவதெல்லாம், இறைவன் கொடுத்தது என்று புரிய வேண்டுமே.

மொ.பெ. கவிதை

உன் தேநீரைச் சுவைத்துப் பருகு - செ. ராஜேஸ்வரி

அழகாகவும்
நிதானமாகவும்
எந்த நேரத்தில் கிளம்ப வேண்டும்
என
எவருக்கும் தெரியாது
அப்போது கொண்டாடி மகிழ
அவகாசம் இருக்காது
எனவே
உன் தேநீரைச் சுவைத்துப் பருகு
அழகாகவும் நிதானமாகவும்

வாழ்க்கை குறுகியது
ஆனால்
நீண்டது என நினைக்கிறோம்
நிறையச் செய்ய வேண்டும்
அவற்றில்
நிறையத் தவறாகி விடுகிறது
பெரும்பான்மையான நேரங்களில்
நம்மை
வல்லவராகக் காட்ட போராடுகிறோம்.
நேரமாகி விடுவதற்குள்
கிளம்பும் நேரம் வருவதற்குள்
உன் தேநீரைச் சுவைத்துப் பருகு
அழகாகவும் நிதானமாகவும்

சில நண்பர்கள் இருப்பார்கள்
மற்றவர்கள் போய்விடுவார்கள்
அன்பானவர்களை மதிக்கிறோம்
ஆனால்
அவர்கள் எல்லோரும்

முனைவர் செ. ராஜேஸ்வரி

இருப்பதில்லை
பிள்ளைகள் வளர்ந்து
பின் பறந்து விடுவார்கள்
எல்லாம் எப்படி விட்டுப் போகும்
என்று எவரும் சொலவடை சொல்லவில்லை
எனவே
உன் தேநீரைச் சுவைத்துப் பருகு
அழகாகவும் நிதானமாகவும்

கடைசியில்
உண்மையில்
எல்லாமே இந்த உலகத்துக்கும்
மேலே
மின்னும் நட்சத்திரங்களுக்காகவும்
நேசத்தைப் புரிந்து கொள்வதுதான்.
யார் அக்கறை மிகுந்தவரோ
அவரைப் போற்றிப் பாராட்டு
புன்னகையோடு சுவாசி
உன் துயரங்கள் விலகட்டும்
எனவே
உன் தேநீரைச் சுவைத்துப் பருகு
அழகாகவும் நிதானமாகவும்

நீ எனக்குத் தேவை! [மொ.பெ. கவிதை]

ஆங்கிலத்தில் - மெக்கென்சி ரியான் & தமிழில் - செ. ராஜேஸ்வரி

குழந்தைக்குத் தேவைப்படும் பொம்மை போல் அல்ல
நாயக்குத் தேவைப்படும் எலும்புத்துண்டு போல் அல்ல
மனிதருக்குத் தேவைப்படும் அலைபேசி போல் அல்ல

கடலுக்குத் தேவைப்படும் உப்பைப் போல்
மலருக்குத் தேவைப்படும் தண்ணீரைப் போல்
இதயத்துக்குத் தேவைப்படும் இரத்தத்தைப் போல்

நான் உயிர் வாழ
நீ எனக்குத் தேவை

அழியாச் சித்திரம்

கு. ப. சேது அம்மாள்



தான் சொல்ல வேண்டியதைக் கச்சிதமாகப் பத்து வார்த்தைகளில் சொல்லிவிட்டு, எழுந்து நின்று, பணிவான குரலில், "நாட்டாண்மைக்காரருக்குத் தெரியாததை நான் எடுத்துச் சொல்லலை ! முறை தவறி நடந்து, கெட்ட பேரும் வாங்கி அவமானமும்பட என் மனம் சம்மதப்படாததைத் தான் நான் தெரிவிச்சுக்கிட்டேன். மத்தபடி வேறே எதுவா யிருந்தாலும் உங்க உத்தரவை நிறைவேற்றத் தயங்க மாட் டேன். மன்னிக்கணும்! நான் வரட்டுங்களா ?" என்று கை குவித்து விடை கேட்டான் ஐயணனம்பலம்.

வாய் பேசாமல் தலையை அசைத்து விடை கொடுத்தார் நாட்டாண்மைக்கார காத்தான் அம்பலம்.

அவன் சென்றதும் உள்ளே வந்து பொறி கலங்கிய நிலையில் வெறித்த பார்வையுடன் கூடத்துச் சுவரில் சாய்ந்து கொண்டிருந்த மகளைப் பார்த்தார்! கோபம் பொங்கியது. நாற்பது வருஷ காலமாகக் காப்பாத்திக்கிட்டு வந்த என் கௌரவத்தையும், மானத்தையும் மண்ணாக்கிட்டே பார்த்தாயா? 'முறைமைக்காரன் இருக்கறப்ப, என்னை வந்து பொண்ணு கேக்கச் சொல்றியோ'ன்னு எம்மூஞ்சியிலே காறி உமிஞ்சிட்டில்ல போய்ட்டான்! உன் மனசு குளுந்து போச்சில்ல?"

அழகம்மாள் சீறியெழுந்தாள் ! "என் போகலே! குமுறுது எரிமலையா! நான் கேடுகெட்ட வையாபுரியையும் கட்டிக்கலை, யோக்கியனான ஐயணனையும் கட்டிக்கலை, கன்னியாகவே வாழ்ந்துட்டுப் போறேன் போ!"

“செய்யி! அங்கே நின்னா இங்கே நின்னா அவன் கூடப் பேசினா, அவனோட சிரிச்சான்னு நாலுபேர் பேசிச் சிரிக்க இடம் கொடுத்து என் மானத்தை வாங்கு……” என்று பல்லைக் கடித்தார் காத்தான்.

“மானத்தோட செத்திடுவேனே தவிர மானத்தை வாங்கமாட்டேன் அப்பா.”

“ஊம், தாராளமா! கம்மாய்லே விழு. இல்லேன்னா கயத்திலே தொங்கி போலீசிலே மாட்டி வை. ஜெயிலுக்கு அனுப்பு!…”

அழகம்மாள் தத்தளித்தாள்! ஐயணனின் புறக்கணிப்பால் ஏற்பட்ட அதிர்ச்சியும் ஏமாற்றமும் இடியாகத் தாக்கி உட்கார்த்தியிருக்க, பெற்ற தகப்பனும் பேச்சினாலேயே சுடுவதைத் தாங்க மாட்டாமல் தடாரென்று குப்புற விழுந்து ‘அம்மா, நிர்க்கதியாக என்னை இப்படி வுட்டுட்டுப் போயிட்டியே ஆத்தா!’ என்று அலறினாள்.

நாட்டாண்மைக்காரரின் மனம் பதைத்தது! அழகம்மாளின் மனநிலையை உணர்ந்தார்! ஏதும் பேசாமல் வாசலுக்கு நடந்தார்!

அவரது மனம் அலை பாய்ந்தது!

வையாபுரியிடம் எல்லாவித கெட்ட பழக்கமும், சகவாசமும் உண்டு ! முறைமைக்காரன் என்ற ஒரே ஒரு பாத்தியதையை முன்வைத்துத் தென்பாக தலைநிமிர்வோடு வந்து பெண் கேட்டாள் தங்கை. அவனைக் கட்டிக்கொள்ளத் தன் மகள் சம்மதிக்காததைச் சொன்னதும் அவள் ஆத்திரம் மிகுந்தவளாகி “கட்டிக்கொள்ள மாட்டாளாமா? ‘முந்தி கிழித்துத்’ தாலி கட்டாவிட்டால் பார்” என்று சபதம் செய்து விட்டுப் போனாள் தங்கை – அதையும் லட்சியம் செய்யாமல், தன் மகளுடைய சந்தோஷ வாழ்வுதான் முக்கியம் என்று நினைத்து, அவள் விரும்பியபடி செய்து வைக்கவே ஐயணன் தாயாருக்கு விவரமாகச் செய்தி அனுப்பி, பெண் கேட்க வரச் சொன்னார் காத்தான் அம்பலக்காரர்! ஐயணன் சாதிப்பற்றும், நேர்மையும், கண்யமும் வாய்ந்த வாலிபன். போக்கிரியும், பொல்லாதவனுமான வையாபுரி முறைமைக்காரனாக இருக்க, தான் பெண் கேட்டுப் போய் பஞ்சாயத்தார் முன் குற்றவாளியாக நிற்பதா?

நாட்டாண்மைக்காரர் சொல்லுகிறாரே என்று எதை வேண்டுமானாலும் செய்ய முடியுமா? நல்லதனமாக கௌரவமாக மறுத்துவிட வேண்டியதுதான் என்று மறுத்து விட்டான்; அவன் யோக்கியன்.

எனக்குத் தலையிறக்கமாச்சே, என் மகளுக்குக் கல்யா ணம் ஆகணுமேன்னு அவன் கவலைப்பட முடியுமா?....

இப்படி எண்ணங்கள் மனதில் கிளர்ந்தெழ கட்டிலில் படுத்துக் கிடந்தார் காத்தான்.

அழுகை ஓய்ந்து எழுந்தாள் அழகம்மாள் ! அவள் மனத்தில் தெளிவு பிறந்து விட்டது போன்றதொரு தோற்றம். எழுந்து பரபரவென்று சமைத்து மூடி வைத்தாள்!

ஆமாம்! கலியாணமின்று நின்றாலும், தந்தைக்கும் தனக் கும் அவமானம். ஊரில் ஏச்சு. கம்மாவில், கிணற்றில், அல்லது தூக்கிட்டுக் கொண்டாலும் அப்பனுக்கு ஆபத்து!

ஆனால், இந்த துரதிருஷ்டம் பிடித்தவளுக்காக என்றுதான் என் குல தெய்வம் பதினெட்டாம் படியான்தான் அழகர் மலையிலேயிருந்து அடிவாரத் திடலுக்கு விரட்டி யிருக்கிறான். சிறுத்தையை!

எனக்காகக் காத்திருக்கிற சிறுத்தையைப் போய் ஊரார் கொன்னுடப் பார்த்தால் நடக்குமா? அது அவர்களுக்குப் 'பாய்ச்சல்' காட்டிவிட்டு, புதருக்குள்ளே எங்கேயோ மறைஞ் சிருக்குது!

'நல்லவேளை! ஆடுங்களை மேய்க்கிற சாக்கிலே சிறுத் தைக்கு இரையாகி விட்டால் யாருக்கும் உபத்திரவமில்லை!' இந்த நினைப்புடன் தெருக் கதவைத் திறந்து ஆடுகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டாள் – அப்பனுக்குத் தெரியாமல் !

குறுக்கு வழியாக ஓட்டிக்கொண்டு திடலுக்கு வந்தாள்! மலையடிவாரம் ஜனசஞ்சாரமற்று – அவள் மனத்தைப் போலவே சூனியமாகக் கிடந்தது!

ஆடுகளை மேய விட்டுவிட்டு ஒரு மரத்தடியில் அமர்ந் தாள்! வெறும் வயிறுதான் ! ஆனால் பசிக் களையில்லை!

மானமும் ரோச உணர்வும்தான் வயிற்றை நிறைத்து விட்டனவே!

“பதினெட்டாம்படியானே, உனக்கு தெண்டம்பா! இன்னிக்கென்னை சிறுத்தைக்கிக் காட்டிக் கொடுத்துடு! எங் கவலையைத் தீத்துடுடா அப்பனே, ஆடுங்களை மோப்பம் பிடிச்சுக்கிட்டு•••வந்திடாது?”

சிந்தனையில் மூழ்கிக் கிடந்தவள் உர்•••உர் என்ற உறுமலைக்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். நாலு பக்கமும் பார்த்தாள்!

அதோ! கூப்பிடு தூரத்தில் ஒரு மரத்தின் ஒதுக்குப் புறமாக, ஒரு மனிதனும் சிறுத்தையும் நின்று போராடுவது கண்டு திகைத்தாள் ஒரு கணம் !

மறு வினாடி ஓடிச்சென்று பார்த்தாள்! ஆடுகள் தலை தெறிக்க மரண ஓலமிட்டவாறு சிதறி ஓடின.

ஐயையோ, ஐயணனா! ஆமாம்! அவரே தான்! சிறுத் தையின் முன்னங்கால்களை ஒரு கையிலும், பின்னங்காலை ஒரு கையிலும் பற்றிக்கொண்டு தயிர் கடைவதுபோல அதன் வயிற்றை மரத்தில் உராசியவாறு கடைந்து கொண்டிருந் தான் ஐயணன்!

அங்குமிங்கும் பார்த்தாள்! ஐயணன் இடுப்பில் குத்து வாள் செருகியிருப்பதைக் கண்டு அதை உருவி எடுத்துக் கொண்டு முன்புறம் வந்தாள்!

அவள் கள்ளர்குல மறப்பெண் அல்லவா?

சிறுத்தையின் கழுத்துப் பக்கம்வந்து நின்று வாளைப் பிடித்து, பிடரியில் குத்தி ஆழச் செருகினாள்! வாயிலும், மூக்கிலும் உதிரம் கக்க, விழிகள் சுழன்று நிலைகுத்த கோரமான கதறலுடன் உயிரை விட்டது சிறுத்தை !

ஸ்தம்பித்து நின்றான் ஐயணன். ‘‘அது செத்திட்டுது, விட்டுடுங்க!’’ என்றாள் அழகம்மாள். சிறுத்தையின் பிடரியிலிருந்த வாளை உருவியெடுத்தாள்.

ஐயணன் கைவிட்டதும் பொத்தென்று கீழே விழுந்தது சிறுத்தை. தலை முண்டாசைப் பிரித்து முகத்திலும் உடலிலும் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டான் ஐயணன்.

கையிலிருந்த வாளை அவனிடம் நீட்டி, ‘‘இந்தாங்க உங்க குத்துவாள்’’ என்று கூறிக் கொடுத்துவிட்டுத் திரும்பி நடந்தாள்.

‘‘நில்லு, நீ நாட்டாமக்காரரு மக தானே!’’ என்று- கேட்டான் ஐயணன்.

அவன் குரலிலிருந்த தொனிப்பு அவள் இதயத்தைத் தொடாத அவளை நிறுத்தியிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் அவளுக்கிருந்த ஆத்திரத்தில் காறி உமிழ்ந்து விட்டே போயிருப்பாள் அவள்!

அவள் நின்றதும்.. ‘‘இங்கெங்கே வந்தே நீ?’’ என்றான்.

‘‘எங்கே வந்தேனா? சாவத்தான்! வையாபுரிக்கு வாழ்க்கைப்பட்டு அவனுக்கு இரையாவதைவிட, சிறுத்தைக் கிரையாகி விடலாம்னுதான் வந்தேன், இங்கேயும் குறுக் கிட்டு என் நெனைப்பிலே நெருப்பைக் கொட்டிட்டீங்க ; போவுது; எனக்கு வேறே வழியில்லாம இல்லே! நீங்க; மானமா, மரியாதையா, ஊருக்கும், நாட்டாமைக்காரருக்கும் நல்லவுங்களா – பெத்தவங்களுக்குப் பிள்ளையா...’’

‘‘ஏ! நிறுத்து அம்மட்டோடு ! போ, நேர வீட்டைப் பார்க்க, நட, நான் போய் நேரே பஞ்சாயத்தாரைப் பார்த்து, விவரமெல்லாம் சொல்லி, ஆக வேண்டியதை யெல்லாம் முடிச்சிக்கிட்டுப் பரிசம்போட வருவேன். அதுவரைக்கும் முந்தியை மட்டும் பத்திரமாகப் பாத்துக்க ! என்ன சரிதானா? பெருமாள் மாடு கணக்கா தலையை ஆட்டறியே, வாயைத் திறந்து சொல்லேன்!’’ என்றான் ஐயணன் குறும்பு நிறைந்த குரலில்,

அழகம்மாள் தலை நிமிர்ந்தது! ஓரக் கண்ணால் பார்த்து, ‘‘ஆமாம், சாகத் துணிஞ்ச பிறகுதான், மனசு இரங்கிச், சாக்கும்; ஆமா, நீங்க இப்படி எங்கே

வந்தீங்க?'' என்று சட்டென்று நினைவு கூர்ந்தவளாகக் கேட்டாள் அழகம்மாள். ''நானா! நெல்லுப் பிடிக்கப் போனவன், வண்டியோட கூட நடந்து வந்தப்போ, மதகடியிலிருந்து இது பாஞ்சு ஓடி யதைப் பார்த்துத் துரத்திக்கொண்டே வந்தேன்! இங்கே வந்து புதருக்கடியிலே புகுந்தது ! கம்பாலே ஓங்கி யடிச்சேன். சிறுத்தை புதர்லே மறைஞ்சுப் பாய வந்தது. குத்துவாளை எடுக்கக்கூட நேரமில்லே: அப்படி மரத்துக்குப் பின்பக்க மாக நின்னு லாவிப் பிடிச்சேன் காலுங்களை ?.....''

''நான் வராட்டியும்கூட இன்னும் சித்தெக்கெல்லாம் செத்திருக்கும்!''

''இல்லே! பின்னங்காலு கையிலேயிருந்து நழுவி நுனிக்கி வந்திட்டுது! நீ வரல்லேன்னா அது அடுத்த வினாடி உருவிக்கிட்டு இருக்கும்! அப்பாட! எவ்வளவு நேரமாச்சு நீ வந்து ! அப்பாரு தேட மாட்டாரு? போ வீட்டுக்கு. சாலை வரைக்கும் கொண்டாந்து விடவா?''

''இப்ப வேணாம்! அப்புறமா...!''

''உம், உனக்கும் எனக்கும் முடிஞ்சிட்டிருக்கிறான் அந்தக் கடவுளு! வேண்டாம்னால் விடுமா ? நட! பத்திரமாயிரு என்ன?''

தலையை ஆட்டிவிட்டு நடந்தாள் அழகம்மாள்.

இனி திரும்பி வரப்போவதில்லை என்ற நினைப்புடன் அசிரத்தையாக மூடிவிட்டு வந்த வேலிப் படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள் அழகம்மாள். ஆடுகள் அங்கங்கு படுத்துக் கிடந்தன! கொல்லைப்புறம் சந்தடிகேட்டு ஓடிவந்து பார்த்த காத்தான், ''எங்கே போனே அழகு, சொல்லாமல் கொள்ளாமல்! உன்னை எங்கேன்னு தேடறது நான்?'' என்று கேட்டார். தந்தையை உட்காரச் சொல்லி, அருகில் தானும் அமர்ந்து, சாவதானமான குரலில் நடந்த நிகழ்ச்சியை அப்படியே விவரித்தாள் அழகம்மாள். காத்தானுக்கு ஒரே திகைப்பு! செத்துவிடத் தீர்மானித்து வீட்டைவிட்டுப் போன மகளை அதட்டி வைது கோபிப்பதா.

அல்லது தனது மதிப்பைப் பெற்ற யோக்கியனான ஐயணனே தனக்கு மருமகனாகச் சம்மதித்து மனக்கவலை தீர்த்து வைத்த தற்குச் சந்தோஷப்பட்டு மகளைத் தட்டிக் கொடுத்து மெச்சு வதா என்று புரியாமல் முகத்தில், வெற்றியும் களிப்பும் குதி போட அருகில் அமர்ந்திருக்கும் மகளைக் கூர்ந்து பார்த்தார் நாட்டாண்மைக்காரர்.

"என்ன அப்படிப் பாக்கறீங்க அப்பா? பெத்த தகப்பனைத் தவிக்க விட்டுவிட்டு சாகத் துணிந்தாளே என்கிற கோபமா எம்மேலே? அதுக்கு அபராதக் காணிக்கையாகத்தான் நல்ல சேதி கொண்டுவந்திருக்கேனே !" என்று குரலில் கெஞ்சலும் கொஞ்சலும் ஒலிக்கச் சிணுங்கினாள் அழகம்மாள்.

அதற்குப்பின் மூன்று நாட்கள் போய்விட்டன. பௌர்ணமி நிலவில் வாசலில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக்கொண்டு, தாயையும் அருகில் அமரச்சொல்லி பஞ்சாயத்து போர்டு தலைவரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்ததை வேலம்மாளிடம் சொல்லிக் கொண்டிருந்தான் ஐயணன்.

அவசர அவசரமாக யாரோ, தன் வீட்டுக்காக வருவதைக் கண்ட வேலம்மாள் "யாருடா பயலே அது? வேக வேகமா வாரானே யாரோடு" என்றாள்.

"அட, வையாபுரி வருகிறான் அம்மா; தனிச்சு வரு கிறானே, என்ன சங்கதின்னு...!"

சொன்ன சொல் பூர்த்தியாகுமுன்பே அருகில் வந்து விட்ட வையாபுரி ஐயணன் பக்கத்தில் வந்து பொத்தென்று அமர்ந்தான்!

"வாங்க, வாங்க, ஆத்தா, நம்ம வையாபுரி அம்பலக்காரருல்ல..."

"அட! வாப்பா, ஆத்தா, அப்பாரு எல்லாம் சொகம் தானே?" என்று விசாரித்தாள் வேலம்மாள்.

"எல்லாரும் சுகம்தான். வந்து உங்க கிட்டத்தான் ஒரு விஷயம் சொல்லிட்டுப் போக வந்திருக்கிறேன்; இப்ப நான் பழைய வையாபுரியில்லே! அது முதல் சங்கதி. ஆச்சா நீங்க தாராளமா நாட்டாண்மைக்காரர் மகளைக் கலியாணம்

செய்துக்கலாம். பஞ்சாயத்து பொன்னம்பலகாரர் எல்லாம் சொன்னாரு. எங்க அம்மாவானால் ஒரே பிடிவாதமா, 'முந்தி கிழிச்சு' அவள் கழுத்திலே நீ தாலி கட்டாதபோனால் நீ என் மகனுமில்லை; ஆம்பிளையுமில்லைன்னு குதிக்கிறாள். நல்லாக் குதிச்சிக்கிட்டுக் கிடக்கட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

''இரண்டாவது, நான் சீட்டாடுகிறவன். குடிக்கிறவன், கெட்டவன், பொல்லாத போக்கிரியும் கூடத்தான். ஆனால்- அம்பலக்காரரே, எனக்கு, வீராப்பும், தன்மானமும் உண்டு, ரோசமும் அதுக்கு மேலே உண்டு. சுகத்தை – அனுபவிக் கணும் என்கிற ஆசை எவ்வளவு உண்டோ, அவ்வளவுக்கு அதைத் 'தூ'ன்னு துப்பி மண்ணைத் தள்ளி மூடவும் என்னாலே முடியும்! அந்தக் குட்டி, நான் கட்டவேண்டிய முறைமைக்காரி, மாமன்மக.

அவள் தனக்கு என்னைப் பிடிக்கலைன்னாலும், என்னைப் பெத்தவள் 'வேணாம்டா அது, விட்டுவிடு'ன்னு குறுக்கே விழுந்து மறிச்சாலும், நம்ம சாதியாசாரப்படி, கட்டுப் பாட்டுப்படி-நான் அவள் மேலே வச்சிருந்த ஆசைக்கி அவள் 'முந்தியைக் கிழிச்சு' அவள் கழுத்தில் தாலிகட்டிருப்பேன்! 'ஏண்டா கட்டலை' என்கிறியளா? எப்போ, அவளுடைய நினைப்பு வேறே ஆண்பிள்ளைமேலே போயிட்டுதோ அந்தப் பொண்ணை நான் கட்டவே மாட்டேன்! பதினெட்டாம் படியான் சாட்சியா கட்டமாட்டேன்! இது தெரியாதபடி வையாபுரிக்கு இரையாவதைவிட சிறுத்தைக்கி இரையாகப் போகிறேன் என்று செத்துடப்போனாளாம். அது காதிலே கேட்டதிலிருந்து என் குடல் அப்படியே பதறுது அம்பலக் காரரே-பதறுது! நினைப்பு நெஞ்சைத் தீயாகத் தீண்டித் தீய்க்குது! அவளுடயமதிப்பிலே – நான் சிறுத்தையிலும் கேடுகெட்ட சென்மம்னு ஆயிடுச்சு பாருங்க! அதனா லே இரண்டுகால் மிருகமா ஊதாரியா, உதாவாக்கரையா, சோம்பேறியா இருக்கிறதைவிட கண்காணாத சீமைக்குப் போயி – எப்படியோ இருந்துக்கிறது!

''இதெல்லாம்; கிடக்கட்டும்;

''என்சொத்து நஞ்சை முப்பது ஏக்கரா, புஞ்சை பதி னெட்டு ஏக்கரா, வீடு எல்லாத்தையும் எங்கம்மாவுக்குப் பிறகு மாமனை, அவரோட வாரிசைச்

சேரணுயினு எழுதி ரெயிஸ்தரு பண்ணி, பத்திரத்தை பந்தோபஸ்தா பாங்கியிலே வச்சிட் டேன். இந்த சங்கதி ஊருக்குள் வேறேயாருக்கும் – அதாவது என்னைச் சேர்ந்தவங்களுக்குத் தெரியாது.

‘‘நீங்க மனசுலே கரவு இல்லாமல் அழகம்மாளைக் கலியாணம் செய்துக்கிட்டு நல்லாயிருக்கணும். உங்கமேலே ஆத்திரமோ கோவமோ எனக்கில்லே. உங்கவரைக்கும் நீங்க கண்ணியமா, ஒழுங்காகத்தான் நடந்துக்கிட்டீங்க – முத ல்லே. அதிலே எனக்கு ரொம்ப சந்தோசம். கடைசியா இதெல் லாம் மாமன் கிட்டச்சொல்லி வவுத்தெரிச்சல் தீர நாலு வார்த்தை கேட்டுட்டுப் போயிடலாம்தான். ஆனால் அந்த மனிசன் முகத்தைப் பார்க்கவோ, பேசவோ பிடிக்கலை. அதனாலே யோக்கியப் பொறுப்பொட நடந்துக்கிட்ட உங்க கிட்ட சங்கதியை சொல்லிட்டுப்போகலாம்னுதான் வந்தேன்’’ என்றான். அதுவரையில் சிலையாகச் சமைந்திருந்த ஐயணன் வையாபுரியின் கையைப் பற்றி ‘‘குந்துங்க இப்படி’’ என்று அவனை உட்கார்த்த முயன்றான்.

‘‘புண்ணிய மில்லை. உட்டுடுங்க?’’ பசையற்ற குரலில் கண்டிப்போடு சொன்னான் வையாபுரி.

‘‘எதுக்கும் அவசரப்படக் கூடாதுங்க.’’

‘‘அவசரப்படலையே! நிதானமாக ஆற அமர மூணுநாள் யோசிச்சு செய்தமுடிவுல்ல இது! உல்லாசப் பிரியன்தான் வையாபுரி. ஆனால் சொல்லுப் பொறுக்காத ரோசக்காரன். ரோசங்கெட்டுப் பிழைக்கக் கூடாது பாருங்க மனிசுனாப் பொறந்தவன்! உத்தரவுகுடுங்க’’ என்று சொல்லி கையை உதறி விடுவித்துக் கொண்டு கைகுவித்து கும்பிடு போட்டு விட்டு நடையைக் கட்டினான் வையாபுரி திரும்பிப் பாராதவனாக.

அவன் போய் விட்டான்! அவனுடைய துடிப்பும், வேதனையும் மிக்க முகமும், ஆழ்ந்த துயரைத் தேக்கிநின்ற கண்களும், பசையற்ற குரலுமாகச்சேர்ந்து ஐயணனின் மனதில் ஆழப்பதிந்து விட்டதே- ஆயுசுக்கும் அழியாச் சித்திரமாக.

டெஸ்டிமோனா

தெ. வினோதினி
பெரம்பலூர்

ஆங்கில இலக்கிய நாடகத்தின் தந்தை ஷேக்ஸ்பியர் அவர்கள் தனது பெண் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செதுக்கியிருக்கிறார். ஒவ்வொன்றும் அத்தனை ரசிக்கும் விதமாக இருக்கிறது. தொடர்ச்சியாக ஒவ்வொரு பெண் கதாபாத்திரங்களையும் பார்த்துக் கொண்டு வரும் நாம், இன்று பார்க்க இருப்பது டெஸ்டிமோனா என்ற ஒத்தல்லோ நாடகத்தினுடைய கதாநாயகி பற்றி தான்.

டெஸ்டிமோனா மிகவும் அழகானவள். வட்டமான முகம் கொண்டவள். குழந்தைத்தனம் என்றும் அந்த முகத்தில் தொற்றிக் கொண்டிருக்கும். அவளின் முகத்தைப் பார்த்தால் இளகாத மனங்களே இருக்க முடியாது. ஒவ்வொரு நிமிடத்தையும் அதிக நம்பிக்கையுடன் கடந்தவள். தனது காதல் கணவன் ஒத்தல்லோ மீது அதிக அன்பும் பிரியமும் கொண்டு தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடங்களையும் கழித்தவள்.

அதே சமயம் இவள் மிகவும் பலவீனமானவளாகவும் அடிபணிந்தவளாகவும் ஒத்தல்லோ நாடகத்தில் அதிகம் சித்தரிக்கப்படுகிறாள். அதற்கு எடுத்துக்காட்டாக இவளுடைய முதல் பேச்சு இருக்கிறது.

“My noble father, / I do perceive here a divided duty” [I.iii.179–180])

அதேபோல தனது காதல் கணவனோடு தாக்குதல் ஏற்பட்ட பொழுதும் அவளுடைய உரையாடலும் இவளுடைய பலவீனத்தைக் குறிக்கிறது.

“I have not deserved this” [IV.i.236]

இவள் தன்னைச் சுற்றி இருக்கும் அனைத்திற்கும் தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்திற்கும் காரணம் நான் தான் என்று தன்னைத்தானே அனைத்திலும் அடிபணிய வைத்துக் கொள்வாள். தனது இறப்பிற்கும் காரணம் நான் தான் என்றும் அவள் இந்த நாடகத்தில் சொல்வாள்.

டெஸ்டிமோனா

டெஸ்டிமோனாவின் தோழி எமிலியா அவள் தன் உயிரை இழக்கத் தயாரான பொழுது கேட்கிறாள். இதற்குக் காரணம் யாரோ என்று. அப்பொழுதும் டெஸ்டிமோனா சொல்கிறாள்,

இதற்கு காரணம் நான் தான் என்று.

“O, who hath done this deed?” Emilia

“Nobody, I myself. Farewell. / Commend me to my kind lord. O, farewell” (V.ii.133–134).

இந்த வசனம் இவரை சுயநலமில்லாதவராக, உண்மையான அதிக நேசம் கொண்ட மனைவியாக, நம்பிக்கை நிறைந்தவராகக் காட்டுகிறது.

ஆம், அவள் மிக சுதந்திரமானவள் என்று இந்த நாடகத்தில் அவளின் திருமண நிகழ்வு சிறப்பாக சொல்கிறது. தனது காதலுக்காக தனது தந்தையை எதிர்த்து வீட்டை விட்டு வந்து விடுவாள். அந்த இடத்தில் அவளுடைய சுதந்திரம் வெளிப்படுகிறது. ஆனால், அதே நாடகத்தின் இறுதியில் தான் ஒரு கருத்தும் இருக்கும். தனது தந்தையை ஏமாற்றியதாலோ என்னவோ, சிரமப்படுத்தியதாலோ என்னவோ அவளும் ஏமாந்து போனாள் என்ற கருத்தும் இந்த நாடகத்தில்

இருக்கும். தனது தந்தையையே எதிர்த்துக்கொண்டு, தனது காதல் கணவன் ஒத்தல்லோவிடம் சென்று சேர்ந்து விடுவாள் டெஸ்டிமோனா. அப்போதிலிருந்து இவர்கள் இருவரினுடைய வாழ்க்கை அன்பிற்கு இலக்கணமாக, காதலுக்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

“தனது மகள் தன்னை இப்படி ஏமாற்றி விட்டாளே, அந்த ஒத்தலோ தனது மகளை ஏதேதோ சொல்லி இப்படி கவர்ந்து சென்று விட்டானே” என்று அவ்வளவு வருத்தப்படுவார் அவள் தந்தை.

"She is abused, stol'n from me, and corrupted/ By spells and medicines bought of mountebanks” - Brabatino

இந்த நாடகத்தில் டெஸ்டிமோனாவின் இறப்பிற்கு பெரிதும் காரணமாக இருப்பது, இந்த நாடகத்தின் வில்லன் இயாகோ தான். தனக்கு கிடைக்க வேண்டிய பதவி கிடைக்காமல் போனதற்குக் காரணம் ஒத்தல்லோதான். ஆதலால் ஏதாவது ஒரு சூழலில் இவனைப் பழிவாங்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தான். அதற்காக டெஸ்டிமோனாவைப் பயன்படுத்துகிறான்.

டெஸ்டிமோனாவோடு காதல் கொள்ளுமாறு ரோடரிகோவைத் தூண்டுகிறான். மேலும் டெஸ்டிமோனாவை கேஷியோவோடும் தொடர்பு படுத்தி அவ்வப்போது ஒத்தல்லோவிடம் இயாகோ பேசியும் வருகிறான். பாவம் இவர்களுக்குள் இருக்கின்ற சண்டையில் இறுதியில் பலியாக்கப்படுவது டெஸ்டிமோனா மட்டுமே.

ஒத்தலோ தனது மனைவி டெஸ்டிமோனவிற்காக ஒரு கர்ச்சிப்பை அன்பளிப்பாக கொடுத்து இருப்பார். எதிர்பாராத விதமாக அதனை தவற விட்டு இருப்பாள் டொஸ்டிமோனா. இதனை இயாகோ நன்கு பயன்படுத்திக் கொண்டான். தனது மனைவி எமிலியாவிடம் அந்த கர்சிப்பை எடுத்து வருமாறு சொல்லியிருப்பான். எதற்கு என்று தெரியாமல் தனது கணவர் சொன்னாரே என்பதற்காக எடுத்து வந்து கொடுத்திருப்பாள்.

அதனை கேஸியோவின் இடத்தில் வைத்துவிடுவான் இயாகோ. அவ்வபோது ஒத்தலோவிடம் டெஸ்டிமோனாவிற்கும், கேஷியோவிற்கும் தவறான பழக்கம்

இருக்கிறது என்று சொல்லி வந்தான். ஒரு தகராறில் கேஷியோவிற்கு தண்டனை கொடுப்பதற்காக அவனுடைய பதவியை ஒத்தல்லோ பிடுங்கி இருப்பான்.

உடனே கேஷியோவிடம் சென்று ‘‘நீ டெஸ்டிமோனாவிடம் இதை குறித்து பேசு. அவன் காதல் கணவனிடம் உனக்கு மீண்டும் அந்த வேலையைக் கொடுக்க சொல், அவர் மனைவி சொன்னால் அவர் நிச்சயம் கேட்பார்’’ என்று சொல்லவும், அதை நம்பி சாதாரணமாகச் சென்று டெஸ்டிமோனாவிடம் சொல்லுவான்.

டெஸ்டிமோனாவும் ஒத்தல்லோவிடம் வந்து ‘‘கேசியோ பாவம். அவருக்கு அந்த பதவியை மீண்டும் கொடுத்து விடுங்கள்’’ என்று சொல்லுவாள். அப்பொழுதுதான் ‘‘ஒருவேளை இயாகோ சொன்னது உண்மையாக இருக்குமோ?’’ என்று ஒத்தல்லோவும் நினைப்பான்.

அப்பொழுது, ‘‘உனக்கு நான் கொடுத்த அந்த கர்ச்சிப் எங்கே?’’ என்று கேட்டபோது ‘‘அதை நான் தவற விட்டு விட்டேன்’’ என்று சொல்லுவாள். ஆனால் அதை அவன் நம்ப மாட்டான்.

‘‘உனது கர்ச்சிப் எப்படி கேஷியோவிடம் சென்றது’’ என்று கேட்ட பொழுது அவள் மிகவும் அதிர்ச்சியடைவாள்.

‘‘உண்மையில் எனக்கு எதுவும் தெரியாது’’ என்று சொல்ல டெஸ்டிமோனாவை மிகவும் தவறாக பேசுவான், அவள் காதல் கணவன்.

‘‘நான் இருக்கும் பொழுது எப்படி நீ இன்னொருவருடன் தவறான தொடர்பினைக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட மோசமானவளா நீ’’ என்றெல்லாம் பேசுவார். டெஸ்டிமோனா எவ்வளவோ கெஞ்சுவாள். மன்றாடுவாள். தன்னை நிரூபிக்க எவ்வளவோ போராடுவாள். ஆனால் எதையும் ஒத்தல்லோ நம்பவில்லை. இயாகோவின் திட்டம், இறுதியில் இவர்களுடைய வாழ்க்கையில் வென்று விட்டது

Yet she must die, else she'll betray more men.- Othello

அவள் எவ்வளவோ சொல்லுவாள். ஆனால் ஒத்தல்லோ நம்ப மாட்டான். ‘‘உன்னை நான் கொல்லப் போகிறேன்’’ என்று அவன் சொல்லிவிட்டு சென்று விடுவான். தனது மரணத்திற்கு தயாராகிராள் டெஸ்டிமோனா. தன்னை ஒரு மணப்பெண் போல அலங்கரித்து தனது மரணத்திற்காகக் காத்திருப்பாள்.

எத்தனை கொடுமையானது இந்த சூழல். எந்த ஒரு ஆணுக்கும் ஏனோ, இப்படிப்பட்ட ஒரு நிலை என்றும் வருவதில்லை. தலையணையால் டெஸ்டிமோனவை அழுத்தி கொன்று விடுகிறான் ஒத்தல்லோ. அவள் துரோகத்திற்கு செய்த தண்டனையாக இதை அவன் கருதுகிறான்.

அப்பொழுது எமிலியாவிடம் காரணத்தைச் சொல்கிறான். அப்பொழுது எமிலியா சொல்கிறாள், ‘‘இந்தக் கர்ச்சிப்பை எடுத்துச் சென்று எனது கணவரிடம் கொடுத்தது நான் தான். இதை டெஸ்டிமோனா கொடுக்கவில்லை. எனது கணவர் தான் கேஷியோவின் இடத்தில் வைத்திருக்க வேண்டும். டெஸ்டிமோனா குற்றமற்றவள்’’ என்று அப்பொழுது உண்மையை சொல்ல, ஒத்தல்லோ தடுமாறுகிறான்.

‘‘இப்படி தவறு செய்து விட்டோமே’’ என்று வருந்துகிறான். தனது காதல் மனைவியை இப்படி பலர் பேச்சை கேட்டு கொன்று விட்டோமே என்று துடிக்கிறான். இறுதியில் அந்த வேதனையில் அவனும் தற்கொலை செய்து கொள்கிறான்.

சந்தேகம், எத்தனை பெரிய மோசமானது. டெஸ்டிமோனா போன்ற பல பெண்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். எத்தனையோ முறை போராடியும், தன்னை நிரூபித்தும், இயன்றவரை மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியாமல், பல டெஸ்டிமோனாக்கள் இன்னும் இந்த உலகத்தில் உலாவிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒத்தல்லோக்கள் இனியாவது மாற வேண்டும்.

அமெரிக்க தமிழ் பெண் ஆளுமைகள்- 5

கவிஞர் ராஜி வாஞ்சி

சியாட்டில்

கவிஞர், பேச்சாளர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், தமிழ் ஆசிரியர் என்று பன்முகத் தன்மையுடன் இயங்கி வரும் கவிஞர் ராஜி வாஞ்சி அவர்களை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறேன். அவரது பேட்டி இதோ உங்களுக்காக.

1. வணக்கம் ராஜி! தங்களைப் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தை எங்கள் வாசகர்களுக்குக் கூறுங்கள்?

வீட்டின் அமைவிடம் : ஹூஸ்டன் மாநகர், அமெரிக்கா. பணி நிமித்தமாகச் சிறு நகர்வொன்றாய் சியாட்டல் புறநகர் ஒன்றில் சிற்றில் வாசம்.

ஏட்டுக்கல்வி : வணிகவியல் மற்றும் மழலையர் மாண்டிசோரி ஆசிரியப் பயிற்சி

பாட்டுக் கல்வி : பைந்தமிழ் முயற்சி- கவிதையாக, கதையாக, கட்டுரையாக எனக் கன்னித்தமிழ் கரம் பிடித்து வலம் வரத் தொடங்கியுள்ளேன்.

நாட்டம்: தன்னார்வலர் அமெரிக்கத் தமிழ்ப் பள்ளிகளில்.

மீட்டத் தந்த நூல்கள்: சில செந்தமிழ் கவித்தொகுப்பாய் மற்றும் சில தனி நூல்களும்.

ஊட்டம் தந்தது: "கம்பனும் கட்டுத்தறிகளும்" மின்னூலும் "முல்லை முறுவல்" நூலாக்கமும்.

தமிழ்நாட்டில் உள்ள புதுக்கோட்டை நகரில் பிறந்த நான், திருமணத்திற்குப் பின்னர், 1996 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை சிங்கப்பூரில் வாழ்க்கை. அதன் பின்னர், இன்று வரை கடந்த 19 ஆண்டுகளாக

அமெரிக்காவில் பல்வேறு மாநிலங்களில் வாசம். 2013 ஆண்டு முதல் 11 ஆண்டுகள், டெக்சாஸ் மாகாணத்தில், ஹூஸ்டன் மாநகரில் வசித்து வந்தேன். தற்சமயம் சியாட்டல் நகரில் புறநகர் பகுதியில் வசித்து வருகிறேன்.

2. நீங்கள் எழுதிய முதல் படைப்பு உங்களுக்கு நினைவிருக்கிறதா?

முதல் படைப்பு என்றால் நடுநிலைப்பள்ளியில் கணக்கு நோட்டிற்குப் பின்னால் எழுதிய கிறுக்கல்களைக் கவிதை என்று நினைத்துக் கொண்டது. ஓரிரு சிறுகதைகள், அவற்றை விகடனுக்குத் தோழி மூலமாகத் தபாலில் அனுப்பியது இவைதான் என் படைப்பிற்கான முதல் புள்ளி. கல்லூரி கலை விழாவில் நானும் என் தோழியும் இணைந்து ஆங்கில நகைச்சுவைத் தொடரொன்றை மொழிபெயர்த்துத் தமிழ் நாடகமாக எழுதியது அடுத்த நகர்வு என்று நினைக்கிறேன்.

3. பெண்கள் தொடர்ந்து தமிழிலக்கியத்தில் இயங்குவது என்பது எவ்வளவு சவால்கள் நிறைந்ததாக இருக்கிறது?

பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்றால் நேர நெருக்கடி மற்றும் இக்கால வாழ்க்கை முறை முதலியவற்றைக் கூறலாம். தங்கள் பணியிட நெருக்கடிகள், குடும்பப் பொறுப்புகள், பிள்ளைகளின் கல்வி, முன்னேற்றம் முதலிய முக்கியப் பணிகளால், மனதிற்குப் பிடித்த இலக்கியம் பக்கம் கவனம் செலுத்த பெண்கள் மிக நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது . இது இருபாலாருக்கும் பொருந்தும் என்றாலும், பெண்களுக்குக் கடின முயற்சிக்கு பின்னரே சாத்தியமாகிறது என்பதே நிதர்சனம்.

நேர்காணல் செய்தவர்

மேனகா நரேஷ், நியூ ஜெர்சி, கவிஞர், எழுத்தாளர்

வணிகமயம் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் இரண்டும் இக்காலப் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரிய அளவில் உதவி இருந்தாலும், அவை இரண்டுமே அதிக அளவிலான

பெண்கள், தொடர்ந்து தமிழ் இலக்கியத்தில் இயங்காமல் தடையாகவும் உள்ளதோ என்ற எண்ணமும் வருகிறது. வணிகமய உலகில் பொருட்களின் அணிவகுப்பும், விளம்பர யுக்திகளும் எவ்வளவு சம்பாதித்தித்தாலும் மனநிறைவு இல்லாமல், மேலும் மேலும் ஓடச் செய்கிறது. அதற்குத் துணையாகத் தகவல் தொழில்நுட்பம் சாதனங்கள், சமூக வலைத்தளங்களின் அழுத்தம், திணிப்பு போன்றவைகளும் அனைவரின் நேரத்தையும் கண்கட்டி வித்தையாகக் களவாடிப் போகின்றன. நம் பணியிட மற்றும் குடும்பப் பொறுப்புகள் தரும் நேர நெருக்கடியை மேலும் தீவிரமாக்கும் வணிகச்சூழல், நவீன சாதனங்கள் மற்றும் சமூக வலைதளச் சலசலப்புகள். பெண்கள் தொடர்ந்து இலக்கிய வாசிப்பிலும் படைப்பிலும் பங்கு பெற இவை முக்கியச் சவால்களாக இருக்கின்றனவோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இப்போது வளர்ந்து வரும் தலைமுறையில் உள்ள இளம்பெண்கள், தங்கள் அலுவலகப்பணியைத் தவிர்த்துத் தாங்கள் விரும்பும் துறையில் நேரம் செலவழிக்க முன்னுரிமை தந்து வருகிறார்கள் என்பதைக் காண முடிகிறது, இது உண்மையிலேயே நல்ல ஆரோக்கியமான மனப்போக்காகும்.

அதே போல், சமையல் முதல் அனைத்துக் குடும்பம் சார்ந்த விஷயங்களில் இளைஞர்கள் பங்கெடுத்துக் கொள்வதையும் பார்க்க முடிகிறது. எனவே காலப்போக்கில் இந்தச் சவால்களைப் பெண்கள் எளிதாக எதிர் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

4. அயலகச் சூழலில் செயல்படும் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

மேற்கூறிய சவால்களுடன், அயலகச் சூழலில் செயல்படும் தமிழ் எழுத்தாளர்களுக்கு அதிகச் சவால்கள் இருப்பதாகத் தெரிகிறது. இதை மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

1) அயலகச் சூழலில் வீட்டுப்பணிகளுக்கு உதவியாளர்கள் என்பது கிடைப்பது அரிது. (குறிப்பாக அமெரிக்க, ஆஸ்திரேலிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில்)

அதனால் வேலைப்பளு, நேர நெருக்கடி, சலிப்பூட்டும் தொடர் பணிகளால் ஏற்படும் மனச்சோர்வு போன்றவற்றை அயலகத்தில் உள்ள எழுத்தாளர்கள் அதிகம் சந்திக்கின்றனர்.

2) பொது போக்குவரத்து இல்லாதது மிகப் பெரிய குறையாகும். சிங்கப்பூரில் 10 ஆண்டுகாலம் வசித்த அனுபவத்தில் நான் இதை நன்கு உணர முடிகிறது. பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் நேரம் என்பது படிக்கும் நேரம் என்று கூறலாம்.

விரைவு மின்வண்டிகளில் ஏறினோமா, நம் அடுத்த நூலுக்கான குறிப்பை எழுதினோமா என்று நாம் அலுவலகம் செல்லும் பயண நேரத்தை பயனுள்ளதாக மாற்றலாம். நவீன வசதிகள், தனிப்பட்ட வாகனம், சொகுசான வாழ்க்கை என்று நாம் சொல்லிக் கொண்டாலும் கார் ஓட்டுவதிலேயே காலம் கழிவதை நாம் அறிந்தாலும் அதை ஒப்புக் கொள்ள நமக்கு மனம் வருவதில்லை. சர்வ சதாகாலமும் சாலையிலேயே பொழுது கழிவதால், புரட்டப்படாத எத்தனையோ புத்தகங்கள் போற்றுவாரின்றிப் போக்கற்றுக் கிடக்கின்றன. புதிதாய் பிறக்க வேண்டிய எத்தனையோ புத்தகங்கள்புலரும் பொழுதுகளைப் பார்க்காமலேயே மனதிற்குள்ளேயே மக்கிப் போகின்றன.

3) வெளிநாட்டு வாழ்க்கை என்பதால் தாயகத்தில் தொடர்ந்து நடைபெறும் நூல் வெளியீடு, புத்தகத் திருவிழா மற்றும் இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலை. மேலும் நாம் வெளியிடும் நூல்களையும், நம் வீட்டு நூலகத்திற்கான நூல்களையும் இங்குக் கொண்டு வருவதில் உள்ள இடர்பாடுகள் முதலியவற்றைக் கூறலாம்.

5. இதுவரை எத்தனை நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்?

தனி நூல்கள்:

மார்ச் 2020 “ நீளிடைக் கங்குல்” - சங்ககாலமும் சமகாலமும் (கட்டுரை) படைப்புப் பதிப்பகம். (இந்நூல் வெளிநாட்டுத் தமிழ் படைப்பிலக்கிய வகைமையில், 2020ஆம் ஆண்டின் சிறந்த நூல் எனத் தமிழக அரசின், தமிழ்

வளர்ச்சித் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த நூலாசிரியர் சான்றிதழ் பெற்றுள்ளேன்)

நவம்பர் 2023, புஸ்தகா.இன் (pustaka.in) என்ற இணையத் தளத்தின் வழியாக,'' குறிஞ்சி பூத்த வேலி'' என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளேன். குறுந்தொகைப் பாடல்கள் 1முதல் 25 பாடல்கள் (எளிய வடிவத்தில்)

ஜூன் 2024 - ஜன்னல் உரசும் வண்ணத்துப்பூச்சி'' - ஹைக்கூ கவிதை நூல்.நூலேணி பதிப்பகம்.

இணைந்து எழுதியது :

அக்டோபர் 2023, கவிஞர். அமிர்தகணேசன் (அகன்) ஐயாவும் நானும் இணைந்து எழுதிய, ''ஏன் விரட்டினீர்கள், எங்களை? ''என்ற அமெரிக்கப் பூர்வகுடிகள் பற்றிய வரலாற்றுக் கவிதை மற்றும் கட்டுரைத் தொகுப்பு வெளியாகியுள்ளது. (ஒரு துளிக் கவிதை பதிப்பகம், புதுச்சேரி)

குழுவாக எழுதியவை :

''கம்பனும் கட்டுத்தறிகளும்'' -மின்னூல் - ப்ரதிலிபி (தமிழ்) 2 தொகுதிகள் 2018 (நால்வர் இணைந்து எழுதியது) (ராஜி வாஞ்சி, மதுரா, ரத்னா வெங்கட் மற்றும் வாஞ்சி கோவிந்த்)

முல்லை முறுவல் (முல்லைப்பாட்டின் எளிய வடிவம்- கலையரசி பதிப்பகம் 2019)(நால்வர் இணைந்து எழுதியது) ராஜி வாஞ்சி, மதுரா, ரத்னா வெங்கட் மற்றும் வாஞ்சி கோவிந்த்)

''#நீயின்றிப் பிறிதொன்றில்லை'' - கலையரசி பதிப்பகம் 2019 (கவிதை)(ஐவர் இணைந்து எழுதியது)

ராஜி வாஞ்சி, மதுரா, ரத்னா வெங்கட் ,வாஞ்சி கோவிந்த் மற்றும் விஜி வெங்கட்)

என் கவிதைகள் இடம் பெற்றுள்ள தொகுப்பு நூல்கள் :

''கவிதை பூத்த குளம்'' -நூலேணிப் பதிப்பகம் - கவிதைத் தொகுப்பில் 2020

திக்குகளின் புதல்வியர் - ஒரு துளிப் பதிப்பகம்

''இமயம் தொடும் இயைபுகள்'' பெண் கவிஞர்களின் ''லிமரைக்கூ ''தொகுப்பு 2020

தன்முனைக்கவிதைகள் கவிதைகள் - இங்காவின் ஆலாபனைகள் - நூலேணிப் பதிப்பகம் 2021.

''என்று தணியுமிந்த தீ நுண்மித் துயரம்'' - இனியநந்தவனம் பதிப்பகம் 2020 (கவிதை)

''சொல் பாரதி சொல்''-கவிதை - பொதிகைத் தமிழ் அறக்கட்டளை வெளியீடு 2020

''தமிழே எங்கள் தலைமை..'' வசந்தா பதிப்பகம் - முனைவர் மோ.பாட்டழகன் -

''மிதக்கும் சொற்கள்'' தேநீர் பதிப்பகம் (கவிதை) 2020

எங்கும் எங்கள் தமிழ் - (கவிதை) ukiyoto Publishing And Packyderm Tales, 2021.

''பால்யத்தின் சாவி ''தமிழ் ஆர்வலர்கள் குழு, மிச்சிகன், வட அமெரிக்கா. (கவிதை) 2022

கவியுலகப் பூஞ்சோலை முகநூல் குழும கவிதைத் தொகுப்பு வெளியீடு 10 நூல்கள் 2017

(குறிஞ்சி மலர்கள் - மரபு கவிதைகள்

மல்லிகை மலர்கள் - ஹைக்கூ கவிதைகள்

கொன்றை மலர்கள் - வீரம் புதுக்கவிதைகள்

ரோஜா மலர்கள் - காதல் கவிதைகள்

செவ்வந்தி மலர்கள் - நட்புக் கவிதைகள்

அனிச்ச மலர்கள் - (நினைவு கவிதைகள்)

அல்லி மலர்கள் (சமூகக் கவிதைகள்)

குவளை மலர்கள் (தாய்மைக் கவிதைகள்)

தாமரை மலர்கள் (பக்திக் கவிதைகள்)

முல்லை மலர்கள் (கிராமியக் கவிதைகள்)

"குடை விரித்திடும் சாரல்" கவிதைத் தொகுப்பு (2 கவிதைகள்) - சாரல் பதிப்பகம் 2019

6. நீங்கள் இதுவரை பெற்ற விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

"நீளிடைக் கங்குல்" - சங்ககாலமும் சமகாலமும் (கட்டுரை) படைப்புப் பதிப்பகம். என்ற என் நூல் வெளிநாட்டுத் தமிழ் படைப்பிலக்கிய வகைமையில், 2020ஆம் ஆண்டின் சிறந்த நூல் எனத் தமிழக அரசின் விருது பெற்றுள்ளது. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த அயலகத் தமிழ் நூலாசிரியர் சான்றிதழ் பெற்றுள்ளேன்).

ஹைக்கூ - நான் எழுதிய ஒரு ஹைக்கூ கவிதை சிவகாசி அய்யாநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

கவிஞர் அப்துல் ரகுமான் விருது - கவியுலகப் பூஞ்சோலைக் குழு 2018

மகாகவி ஈரோடு தமிழன்பன் 80 விருது - 2022(வல்லினச்சிறகுகள், ஒரு துளிக் கவிதை மற்றும் ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை, அமெரிக்கா)

Women Acheivement Award 2022 for exemplary service to the community (Bharathi Kalai Manram, Houston, Texas)

வெளிநாடு வாழ் பெண் கல்பனா சாவ்லா விருது* - 2022

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க .ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா & உலகப் பெண்கள் தின விழா - 2022 முன்னிட்டு,வைகறை கலைஞர் உடன்பிறப்புகள் தமிழ்ச்சங்கம் (தேனி T.சிந்தலைச்சேரி) மற்றும் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம், சென்னை அமைப்புகளால் வழங்கப்பட்டது.

தமிழன்னை சான்றோர் விருது - தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா & உலகப் பெண்கள் தின விழா - 2022 முன்னிட்டு,வைகறை கலைஞர் உடன்பிறப்புகள் தமிழ்ச்சங்கம் (தேனி T.சிந்தலைச்சேரி) மற்றும் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம், சென்னை அமைப்புகளால் வழங்கப்பட்டது.

7. நீங்கள் அயலகத்தில் ஆற்றிவரும் தமிழ்ப்பணிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

2007 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில், வார இறுதிகளில் தன்னார்வ ஆசிரியராகப் பணி செய்து வந்துள்ளேன். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு ஹூஸ்டன் மாநகரில் உள்ள பாரதி கலை மன்ற நிர்வாகக் குழுவில் இலக்கிய இணை இயக்குனர் மற்றும் இலக்கிய இயக்குனராகச் செயல்பட்டு வந்துள்ளேன். பாரதி கலை மன்றத்தால் 2020 ஆம் ஆண்டு முதல் வட அமெரிக்க அளவில் நடத்தப்படும் மாபெரும் பேச்சுப் போட்டியான ‘‘நாளைய பாரதி’’ என்ற நிகழ்வில் இலக்கிய ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகிறேன். பொன்விழா காணும் இந்த அமைப்பில், 2023 மற்றும் 2024 ஆண்டில் இலக்கிய இணை இயக்குனர் மற்றும் இலக்கிய இயக்குனராகச் செயல்பட்டு வருகிறேன். இதைத் தவிரத் தமிழ் சார்ந்த நிதி திரட்டு விழாக்களில் இலக்கியம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். இணையவழி கவியரங்கம், கருத்தரங்களில் பங்கேற்று வருகிறேன். வாராந்திர இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொண்டு சங்க இலக்கியப்

பாடல்களைப் பற்றிப் பேசியும் , நவீன இலக்கிய வாசிப்புகளிலும் பங்கெடுத்தும் வருகிறேன்.

குறிப்பாக, அமெரிக்கப் பூர்வகுடிகளைப் பற்றிய பதிவுகளை, கவிதைகளை எழுதி, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், கவிஞர். தி. அமிர்தகணேசன் ஐயா அவர்களுடன் இணைந்து எழுதி வெளியிடப்பட்ட "ஏன்? எங்களை விரட்டினீர்கள்?" என்ற நூல் புலம்பெயர் இலக்கியத்தில் (Diaspora Literature) என்னுடைய சிறுதுளி பங்கு என்று கருதுகிறேன்.

8. எழுத்தாளராக இருக்கும் உங்கள் கணவர் உங்கள் படைப்புகளைக் குறித்துக் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வாரா?

2016 ஆம் ஆண்டு முதல் நான், முகநூல் கவிதைக் குழுக்கள் மூலமாக முழுவீச்சில் கவிதைகள் எழு தொடங்கிய போது அவர் சற்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தது என்னவோ உண்மைதான். பாராட்டி மிகவும் ஊக்கமளித்தார். 2017 ஆம் ஆண்டு முதல் நான் குறுந்தொகைப் பாடல்களையும் கம்பராமாயணத்தை எளிமைப்படுத்தி எழுதத் தொடங்கிய சிறிது நாட்களிலேயே என்னுடைய கணவரும், என்னுடைய மற்ற இரு தோழிகளும் கம்பராமாயணத்தை எளிய நடையில் என்னுடன் இணைந்து எழுத விருப்பம் தெரிவித்தனர். இப்போது நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். அன்று முதல் இன்று வரை அவ்வப்போது எங்கள் படைப்புகளைப் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் நடந்து கொண்டேதான் உள்ளது. சில வடிவங்களை மாற்றி எழுதலாம் என ஆலோசனை வழங்குவார். விவாதங்களுக்கும் பஞ்சமே ஏற்படுவதில்லை.

9. உங்கள் வாசிப்பு அனுபவத்தில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்த படைப்புகள் எவை?

கி.ராவின் எழுத்துக்கள், கு.அழகிரிசாமியின் கதைகள் (அன்பளிப்பு) பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கவிக்கோ அப்துல் ரகுமானின் 'முட்டைவாசிகள்', பிரபஞ்சனின் சிறுகதைகள் (மரி என்கிற ஆட்டுக்குட்டி) எஸ்.ராவின் துணையெழுத்து, கதாவிலாசம், சு.வெங்கடேசன் எழுதிய வேள்பாரி,

ஜெயமோகனின் யானை டாக்டர் மற்றும் அறம் தொகுப்பு முழுவதும், வெள்ளையானை, மனம் தொடும் மனுஷ்யபுத்திரன் மற்றும் வண்ணதாசனின் கவிதைகள், கண்மணி குணசேகரன் எழுதிய அஞ்சலை, சிறுவயதில் படித்த பொன்னியின் செல்வன், அலை ஓசை, கல்லூரி நாட்களில் கை கோர்த்த பாலகுமாரனின் பல படைப்புகள், பாரதியின் தன்னெழுச்சி வரிகள்,சங்க இலக்கியப் பாடல்கள் எனச் சொல்லிக் கொண்டே போகலாம். எழுத்தாளர் சுஜாதாவை அவரின் எளிய, ஸ்நேகமான நடைக்காகப் பிடிக்கும். அன்றாடம் நம்மைக் கடக்கும் பல நல்ல கவிதைகள் மனதில் நின்று விடும், கவிஞரின் பெயர் மறந்தாலும்.

10. இலக்கியம் தவிர்த்து வேறு என்ன துறைகளில் ஆர்வம் இருக்கிறது?

நீண்ட பயணங்கள், இனிய இசையை ரசிப்பது, ஓவியம் வரைதல், எளிய க்ரோஷா பின்னல், வண்ணக்கோலம் போடுதல், ஆங்கில அபுனைவுகள் வாசித்தல், நல்ல திரைப்படங்கள், ஆவணப் படங்களைக் காண்பது போன்றவற்றில் ஆர்வமுண்டு. யோகா மற்றும் தியான பயிற்சிகளில் ஈடுபாடு உண்டு.

அயலகத்தில் சிறப்பாகச் செயலாற்றி வரும் கவிஞர் ராஜி வாஞ்சியைப் பேட்டி எடுத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்! அவரது படைப்பாற்றலும், அவர் ஆற்றி வரும் தமிழ் பணிகளும் மேலும் சிறக்க ‘‘சக்தி’’ இதழ் வாழ்த்துகிறது!

அயலகத் தமிழ் படைப்புகளில் பெண்கள்

‘நினைவுகளைச் சுமந்தபடி...’

முனைவர் ஐ. ஜான்சிராணி

ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.

குழந்தைப் பிறப்பில் இருந்து ஆண், பெண் வேறுபாடு தழைத்தோங்கி விடுகிறது. ஆண் குழந்தை என்றால் வாரிசு பிறந்திருப்பதாகக் கொண்டாடும் உலகம் பெண் குழந்தையைக் கருவிலேயே அழிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கிறது. இன்று இது பெருமளவு குறைந்திருக்கிறது என்றாலும் ஆண், பெண் என்ற வேறுபாடு குழந்தை வளர்ப்பிலும் ஆதிக்கம் செலுத்துவதாகவே இருக்கிறது.

ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமும் வாய்ப்பும் பெண் குழந்தைக்கு அளிக்கப்படுவதில்லை. இது தமிழ்ச் சமூகத்தில் நிகழ்கிறது என்பது மறுக்க இயலாத ஒன்று. மலேசியத் தமிழரிடமும் இந்நிலை இருப்பதைச் சில சிறுகதைகள் உணர்த்துகின்றன.

ந. மகேஸ்வரியின் ‘நினைவுகளைச் சுமந்தபடி’ என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அடுத்தடுத்த இரண்டு கதைகள் பெண் குழந்தைகளின் அன்பையும் அவர்களின் பொறுப்புணர்வுகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

முதலாவது கதை, ‘சரணடையும் தருணங்கள்’. இந்தச் சிறுகதையில் வயதான காலத்தில் தன் பெற்றோரைத் தனிமையில் விட்டுவிட்டுத் தன் படிப்பிற்காக வெளியூர் செல்லவேண்டிய நிலை வந்ததால் அந்தப் படிப்பே தனக்குத் தேவையில்லை என்று ஒரு பெண் அடம்பிடிக்கிறாள். அந்தப் பெண்ணின் பெயர் மேகலா. அவள் அப்பா எவ்வளவு எடுத்துச்சொல்லியும் தந்தையையும் தாயையும் தனியே விட்டுச்செல்ல மறுக்கிறாள். தன் எதிர்காலத்தைப் பற்றிக் கூட அவள் கவலைப்படவில்லை.

ந. மகேஸ்வரி

தன் தந்தை கடினமாக உழைத்து தன்னையும் தன் உடன் பிறந்தவர்களையும் வளர்த்தார். தன் மகன் வளர்ந்து தன்னைக் காப்பான் என்று நினைத்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

‘‘அப்பாவை நினைக்கும்போது மேகலாவுக்கு மனம் கசிந்தது. தனியொரு ஆளாக உழைத்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தவர். மூத்த மகன் தலையெடுத்தால் குடும்பச்சுமையைப் பகிர்ந்து கொள்வான் என்று எவ்வளவு எதிர்பார்த்திருப்பார்’’ என்று தன் சுகத்தை மட்டுமே பெரிதென எண்ணிப் பெற்றோரை விட்டுவிட்டுப் போன அண்ணனையும் வெளிநாட்டிற்குப் படிக்கப்போன தம்பி அங்கேயே தனக்கொரு துணையைத் தேடிக்கொண்டு அந்நியமாகிப் போனதையும் எண்ணி வருந்துகிறாள் மேகலா. தானும் அவர்களைப் பெற்றவர்களைத் தனியே தவிக்க விட்டுச் சென்றுவிடக் கூடாது என்று எண்ணுகிறாள்.

மேகலா ஆசிரியப் பயிற்சி பயிலவேண்டுமென்பது அவளது அப்பாவின் விருப்பம். அதை நிறைவேற்ற முடியாமல் போய்விடுமே என்றும் ஏங்குகிறாள். உடல்நலமில்லாத அம்மாவை வயதான அப்பாவிடம் தனியே விட்டுப்போகவும் மனமில்லை. இந்நிலையில் அவள் அப்பாவின் வற்புறுத்தலால் ஆசிரியப் பயிற்சிக்குச் செல்ல சம்மதிக்கிறாள். அவள் புறப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்பு அவள் தந்தை வண்டியில் அடிபட்டு மருத்துவமனையில் படுத்துவிட்டார்.

அம்மாவுக்காக இருக்க நினைத்தவள் இப்போது அப்பாவையும் சேர்த்துக் கவனித்துக் கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளானாள். அவள் வருந்தவில்லை. மனமுவந்து தன்னைப் பெற்றோருக்குப் பணிவிடை செய்தாள்.

என்னதான் பெண்பிள்ளை பாசத்துடன் கவனித்துக் கொண்டாலும் அவர்களின் மனம் தேடுவது தங்களது மூத்த ஆண்பிள்ளையை என்பதை அறிந்த மேகலா தன் அண்ணனைத் தேடிச்சென்று பெற்றோரை வந்து காணுமாறு வேண்டுகிறாள். பெற்றோரைக் கண்ட மகன் அவர்களின் நிலையை எண்ணி வருந்துகிறான்.

மேகலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ‘‘அது கூரிய அம்புப்பார்வை! இவர்கள் உனக்கு அப்பா அம்மாதான். மறந்துவிட்டதா என்று கேட்பது போலிருந்தது அவள் பார்வை’’ என்று ‘சரணடையும் தருணங்கள்’ என்ற இந்தச் சிறுகதை முடிவுபெறுகிறது. பெண் பிள்ளை ஆதரவாக இருந்தாலும் பெற்றோரின் மனம் ஆண் பிள்ளையைத் தேடுவதை உணர்த்துவதாக இந்தக் கதை அமைந்துள்ளது.

இரண்டாவது கதை, ‘நினைவுகளின் பயணம்’. மூன்று ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் என நிறைவான வாழ்க்கை வாழ்ந்து, எண்பது வயதை எட்டியிருக்கும் தன் தந்தையின் எண்பதாவது பிறந்தநாள் வருவதை எண்ணி மகிழ்கிறாள் மீலான். பட்டதாரிகளாகி வெளிநாடுகளில் பணியாற்றும் மூன்று மகன்களும் வசதியாக வாழ்கின்றனர். ஆண்டிற்கொருமுறை வந்து தந்தையின் பிறந்தநாளைக் கொண்டாடிவிட்டு, கிளம்பிவிடுவர்.

‘‘பருவகாலப் பறவைகள் போல வந்துபோகும் பிள்ளைகள் மீதுள்ள அன்பு அருகிலிருந்து கவனித்துக் கொள்ளும் மகள் மீது மருந்துக்கூட கிடையாது’’ அவளை ஒரு பொருட்டாக எண்ணியதே இல்லை. மூத்தவளாகப் பிறந்தபோதே ஏற்பட்டுவிட்ட வெறுப்பு என்று அவள் அம்மா இறக்கும் தருவாயில் கூறினாள்.

‘‘குடும்பத்தின் முதல் வாரிசு ஆண்பிள்ளையாக இருக்க வேண்டுமென்பது அவர்களின் பரம்பரை கொள்கை!’’ ஆனால், மூத்த குழந்தைப் பெண்ணாகப் பிறந்துவிட்டதையும் அடுத்து ஐந்தாண்டுகளுக்கு வேறு குழந்தைப் பிறக்கவில்லை என்பதாலும் வெறுப்பு. மேலும் அதிகமானது. அதன்பிறகு அடுத்தடுத்து மூன்று ஆண் குழந்தைகள். மகிழ்ச்சியில் திளைத்த தந்தைக்கு மகள் மீது ஏற்பட்ட வெறுப்பு மட்டும் அகலவேயில்லை. அம்மா இறந்தபின்பு, பதினான்கு வயதோடு அவள் பள்ளிப் படிப்பிற்கும் முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. மூன்று ஆண் பிள்ளைகளும் படித்துப் பட்டம்பெற்று வேலையுடன் திருமணமும் முடிய ஆளுக்கொரு திசையாக வெளிநாட்டில் வசதியான வாழ்க்கை வாழ்ந்தனர். மூத்தவளுக்குத் திருமணம் செய்ய வேண்டுமே என்ற எண்ணம் கூட அவள் தந்தைக்கு எழவில்லை. இவளும் அப்படியே இருந்துவிட்டாள்.

தன் தந்தையின் எண்பதாவது பிறந்தநாள் அவருக்கு இறுதியாகிவிட, அந்தப் பெரியவர் தன் சொத்துகளைத் தன் ஆண் பிள்ளைகளுக்கே எழுதி வைத்துவிட்டிருந்தார். இவளை வெளியேற்றிவிட்டு வீட்டை விற்க விலை பேசிவிட்டான் மூத்தவன்.

‘‘அவள் தன்னந்தனியே யாருமற்று... எதுவுமற்று... மீலானின் கண்களில் நீர் நிரம்பியிருந்தது. அன்பு இல்லத்தின் வாசலில் பழைய நினைவுகளோடு நின்றிருந்தவளை மீட்டெடுத்தது சகோதரி ஐரீனின் குரல். இந்த இல்லத்திற்கு அழைத்து வந்து ஆறுதல் தந்தவள்.

‘‘அன்பு இல்லத்தில் முதியோர் தினம் கொண்டாடி மகிழ வேண்டுமென்று எல்லா ஏற்பாடுகளையும் செய்தவள் நீதானே. இப்போது ஏன் கவலையாக இருக்கிறாள் மீலான்...?’’

‘‘என் அப்பாவின் பிறந்தநாள் இன்று... அந்த நினைவுதான்...’’ தன்னை ஒரு மனுசியாகக் கூட எண்ணாத தன் தந்தையை எண்ணி வருந்தாமல் அவரின் பிறந்தநாள் நினைவுகளை எண்ணுகிறாள். பெண் பிள்ளையின் அன்பையும் பொறுப்புணர்வையும் அந்தத் தந்தை இறுதிவரை எண்ணிப் பார்க்கவே இல்லை என்பதை இந்தச் சிறுகதை சுட்டுகின்றது.

குழந்தைகளில் ஆணென்ன, பெண்ணென்ன... இரண்டும் ஒன்றுதான். இன்று பெண்கள் உயர்கல்வியில் உயரம் தொட்டும் பொருளாதாரத் தன்னிறைவு பெற்றும் சொத்துரிமை பெற்றும் திகழ்கின்றனர். இனியாவது இந்நிலை மாற வேண்டும்! மாற்ற வேண்டும்!

நூல் விவரம்

நூல் பெயர் : நினைவுகளைச் சுமந்தபடி
ஆசிரியர் : ந. மகேஸ்வரி
வெளிவந்த ஆண்டு :2010
வெளியீடு : ந. மகேஸ்வரி வெளியீடு, கோலாலம்பூர், மலேசியா

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200
கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்		
2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100
முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்		
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200

13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	120
2.	இணையத் தமிழ்	150
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	100
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	50

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200
10.	பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்	300
11	வழிபாட்டின் வேர்களைத் தேடி	300

சமய விளக்க நூல்கள்

1	சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)	300
2	விரதங்களின் விளக்கம்	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	100
5.	பயணக் கவிதைகள்	100

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200
6.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
7.	கவிதை மொழிபெயர்ப்பு	200
8.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	300
9.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200
10.	Translating Tamil poetry	300

சிறு கதை நூல்

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	120
2.	ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)	100
3.	மகிழ் பேரின்பம் (poems)	200
4.	பொன் வேலி (poems) நூல்கள்	200
5.	திருக்குறள் கதைகள் - பகை மாட்சி	100

தே.ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	Emerging Mallarism	100
2.	Festival of lord Indra	250
3.	Role of Devendirars in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature (in print)	300
5.	Mallariyan Literature (in print)	200
7.	Frontyard without My Dad (Poem)	200
2.	Emerging Mallarism	100

English Novel Part

1.	Aranyani – Vijeni	300
2.	Genetic traits of Vengai anchor by Tamilmagan	250
1.	Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)	500

Tamil Classics in English (Selected Poems)

1.	Ainkurunuuru	200
2.	Kurunthokai	200
3.	Puranaanuuru	200
4.	Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)	300
5.	A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)	300
6.	Songs of Classic Tamil Poetess Avvai	300

Didactic Literature

1.	Naaladiyaar	200
2.	Aacharak Kovai	200

Medievel Literature

1	A peasant with two wives (Mukoodal Pallu)	300
2	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)	300
3	One line guidelines in Tamil	200

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	200
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	200

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	200

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	300

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

Hutha
Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765